உதிரங்களை ஓட்டக் கூடாது. இன்னும் உங்கள் இனத்தாரை உங்களுடைய வீடுகளை விட்டும் வெளியேற்றக் கூடாது (என்று அதில் உங்களுக்கு கூறியிருக்கிறோம்). பின்பு நீங்கள் (இக்கட்டளைகளை) ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். மேலும், நீங்கள் (அப்படி ஒப்புக் கொண்டதற்கு) சாட்சிகளாகவும் இருக்கிறீர்கள்.

لَا تَسْفِكُوْنَ دِمَآءَكُمْ "உங்களது உதிரங்களை நீங்கள் ஓட்டக்கூடாது" என்பதற்கு, ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டு வெட்டிக் கொள்ளக் கூடாது என்பது கருத்து.

وَلَا تُخْرِجُوْنَ اَنْفُسَكُمْ "உங்கள் இனத்தார்களை நீங்கள் வெளியேற்றக் கூடாது" என்பதில் உங்களிலுள்ளவர்களை அவர்களது வீடுகளை விட்டு நீங்கள் வெளியேற்றக் கூடாது. அல்லது உங்களுக்குப் பக்கத்து வீட்டுக் காரர்கள் உங்களது தூஷணை பொறுக்கமாட்டாமல் தங்களது வீட்டை விட்டு ஓடிப்போகும்படி அவர்களை நீங்கள் நிர்ப்பந்திக்கக் கூடாது என்பது கருத்து.

ثُمَّ اَنْتُمْ هٰٓؤُلَآءِ تَقْتُلُوْنَ اَنْفُسَكُمْ وَتُخْرِجُوْنَ فَرِيْقًا
مِّنْكُمْ مِّنْ دِيَارِهِمْ تَظٰهَرُوْنَ عَلَيْهِمْ بِالْاِثْمِ
وَالْعُدْوَانِ ؕ وَاِنْ يَّاْتُوْكُمْ اُسٰرٰى تُفٰدُوْهُمْ وَهُوَ
مُحَرَّمٌ عَلَيْكُمْ اِخْرَاجُهُمْ ؕ اَفَتُؤْمِنُوْنَ بِبَعْضِ الْكِتٰبِ
وَتَكْفُرُوْنَ بِبَعْضٍ ۚ فَمَا جَزَآءُ مَنْ يَّفْعَلُ ذٰلِكَ
مِنْكُمْ اِلَّا خِزْىٌ فِى الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَيَوْمَ الْقِيٰمَةِ
يُرَدُّوْنَ اِلٰٓى اَشَدِّ الْعَذَابِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ
عَمَّا تَعْمَلُوْنَ ۝

85. பின்பு, நீங்கள் (வாக்குறுதியை முறித்துக் கொண்டிருக்கும்) ஒரு கூட்டத்தார்கள். நீங்கள் உங்கள் இனத்தார்களையே கொலை செய்து கொள்ளுகிறீர்கள்:. இன்னும், உங்களில் ஒரு சாராரை – அவர்களை வெளியேற்றுவது உங்கள் மீது விலக்கப்பட்டிருக்க – அவர்களின் வீட்டைவிட்டு நீங்கள் வெளியேற்று கிறீர்கள்; அவர்களுக்கு விரோதமாக நீங்கள் பாவத்தைக் கொண்டும் அக்கிரமத்தைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உதவியும் செய்கின்றீர்கள். ஆனால் அவர்கள் (அன்னியரிடம் அகப்பட்டுக்) கைதிகளாக உங்களிடம் வந்தால், அவர்களுக்கு ஈடு கொடுத்து விடுகின்றீர்கள்; நீங்கள் (தவ்ராத்) வேதத்தில் சிலதை விசுவாசித்து சிலவற்றை நிராகரிக்கின்றீர்களா? எனவே, உங்களில் எவரேனும் இவ்வாறு செய்தால் (அவருக்கு) இவ்வற்ப (உலக) வாழ்க்கையில் மானக்கேட்டைத் தவிர (வேறு) கூலியில்லை. ஆனால் இறுதிநாளிலோ கடினமான வேதனையளவில் தள்ளப்படுவார்கள்; மேலும் நீங்கள் செய்வதை அல்லாஹ் மறந்தவனாக இல்லை.

ثُمَّ اَنْتُمْ هٰٓؤُلَآءِ "நீங்கள் ஒரு கூட்டத்தார்கள்" என்ற இந்த வாக்கியம் ஆழிய கருத்துக்களையுடையது. நீங்கள் மேற்கண்டவாறு வாக்குறுதியை ஒப்புக் கொண்ட கூட்டத்தார்களல்ல. நீங்கள் வேறொரு கூட்டத்தார்கள் என்பதன் மூலம் அவர்கள் வாக்குறுதியை மீறுகிறவர்கள் என்பதை அறிவித்துள்ளான். "நாங்கள் வாக்குறுதி அளித்த கூட்டத்தார்களல்ல; வேறு ஒரு கூட்டத்தார்களாக இருக்கிறோம்" என்றால் நாங்கள் எப்படிப்பட்ட கூட்டத்தாராக இருக்கிறோம் என்று அவர்கள் கேட்பது போன்றும் அதற்குப் பதில் கூறுவது போன்றும் பாவித்து அவர்களது தன்மையை இறைவன் تَقْتُلُوْنَ اَنْفُسَكُمْ "உங்கள் இனத்தார்களை நீங்கள் கொலை செய்கின்றீர்கள்" என்ற வாக்கியத்திலிருந்து விவரித்திருக்கிறான்.

யூதர்கள் தங்கள் இனத்தார்களை நேரடியாக அவர்களது வீட்டை விட்டு வெளியேற்றுவது வாக்குறுதிக்கு விரோதம் செய்ததாக ஏற்படுகிறது என்பதற்காக தங்கள் இனத்தார்களின் விரோதிகளுக்கு உதவி செய்து அவர்கள் மூலமாக அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றினார்கள். எனவே, இதனையும் இறைவன் கண்டித்து

وَتُخْرِجُوْنَ فَرِيْقًا இன்னும் நீங்கள் உங்கள் இனத்தார்களை **வெளியேற்றுகிறீர்கள்** என்ற வாக்கியத்திலிருந்து கூறி இருக்கிறான். ஆகவே, அநியாயம், செய்வது ஹராமாக இருப்பதுபோல அநியாயக்காரர்களுக்கு அவர்களது அநியாயமான செய்கையில் உதவி செய்வதும் ஹராமாகும் என்பதாக இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது என்பதாக **தஃப்ஸீர் கபீரில்** எழுதப்பட்டிருக்கிறது.

யூதர்களிலுள்ள பனீ குறைலா, பனீ நுளைர் என்ற இரண்டு கூட்டத்தினர் மதீனா முனவ்வராவிலும் அதனைச் சுற்றிலும் குடி இருந்து கொண்டிருந்தனர். இதுபோல மதீனமா நகரில் முஷ்ரிக்கு களில் ஒளஸ், கஜ்ரஜ் என்ற இரண்டு கூட்டத்தினர் இருந்தனர். அவர்களுக்கிடையில் விரோதமுண்டாகி அவர்கள் இரண்டாகப் பிரிந்து விட்டனர். எனவே, பனூ குறைலா என்ற கபீலாவிலுள்ள யூதர்கள் ஒளஸ் என்ற கபீலாவிலுள்ள முஷ்ரிக்குகளுக்கு உதவியாளர் களாகவும், துணைவர்களாகவும் சேர்ந்தனர். இதுபோல பனீ நுளைர் என்ற கபீலாவின் யூதர்கள் கஜ்ரஜ் என்ற கபீலாவின் முஷ்ரிக்குகளுக்கு உதவியாளர்களாகவும் துணைவர்களாகவும் சேர்ந்தனர். இரண்டு கட்சிக்கும் யுத்தம் நடந்து இரத்தம் சிந்திக் கொண்டதுடன், வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களை வீட்டை விட்டு வெளியேற்றவும் செய்தனர்.

ஆனால், யூதர்களிடம் தவ்ராத் வேதம் இருந்ததால் நன்மை தீமைகள் என்ன வென்பதைத் தெரிந்திருந்தனர். ஆதலால், யுத்தம் முடிவடைந்தவுடன் பனீ குறைலா (கபீலா) யூதர்கள் கஜ்ரஜ் கபீலா முஷ்ரிக்குகளிடம் இருக்கிற தங்கள் வகுப்புக் கைதிகளுக்காகப் பணம் கொடுத்து அவர்களை மீட்டிக் கொண்டனர். இதுபோல பனீ நுளைர் கபீலாவின் யூதர்கள் ஒளஸ் கபீலாவிடமிருந்த தங்கள் வகுப்புக் கைதிகளுக்காகப் பணங் கொடுத்து அவர்களை மீட்டி விட்டனர்.

இவர்கள் இப்படிச் செய்ததை அறபிகள் கேவலமாக மதித்து "எப்படி நீங்கள் அவர்களுடன் யுத்தம் செய்து அவர்களுக்குப் பணமும் கொடுத்து மீட்டி விடலாம்?" என்று கூறினார். அதற்கு யூதர்கள் எங்களிலுள்ளவர்கள் கைதிகளாகி விட்டால் அவர்களுக்காக நஷ்டஈடு

கொடுத்து அவர்களை மீட்டிவிட வேண்டும் என்று நாங்கள் வேதத்தில் ஏவப்பட்டிருக்கிறோம். இன்னும் அவர்களுடன் போரிடுவது எங்கள் மீது ஹராமாக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நாங்கள் பணம் கொடுத்து மீட்டினோம் என்று கூறினார்கள். அப்படியானால் நீங்கள் ஏன் அவர்களுடன் போரிட்டீர்கள் என்று கேட்டதற்கு எங்களுடைய நேச கபீலாக்கள் எங்களை கேவலமாக நினைப்பார்கள் என்று நாங்கள் வெட்க மடைந்து அதற்காக போரிட்டோம் என்று கூறினார்கள்.

இந்த விஷயத்தை அல்லாஹு தஆலா இங்கு சுட்டிக் காட்டி நீங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட கட்டளைகளில் சிலவற்றை மீறியும் சிலவற்றிற்கு மட்டும் கட்டுப்பட்டும் நடந்து கொள்கிறீர்களோ? என்று கண்டித்திருக்கிறான். யூதர்கள் நான்கு காரியங்களைச் செய்யும்படி கட்டளை யிடப்பட்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் அந்த நான்கில் மூன்று காரியங்களை மீறி விட்டனர். அந்த மூன்று காரியங்களும் 1. போரிட்டுக் கொள்ளக் கூடாது 2. வீட்டை விட்டு வெளியேற்றக் கூடாது 3. தங்கள் இனத்தாருக்குத் தீங்கு உண்டாக்குவதற்காக மற்றவருக்கு உதவி செய்யக் கூடாது என்பனவாகும். அவர்கள் தவ்ராத்தின் கட்டளைப்படி நடந்த காரியம் தங்களிலுள்ள கைதிகளுக்கு நஷ்டஈடு கொடுத்து அவர்களை மீட்டிவிட வேண்டும் என்பது மட்டுமே.

أُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ
فَلَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ ۝

86. இவர்கள் தாம் மறுமைக்குப் பதிலாக இவ்வற்ப (உலக) வாழ்வை கொள்முதல் செய்தவர்களாவர்; எனவே, இவர்களை விட்டு வேதனை இலேசாக்கப்படவும் மாட்டது. இன்னும் இவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.

" اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ " மறுமைக்குப் பதிலாக இவ்வுலக வாழ்வைக் கொள்முதல் செய்தவர்களாவர்" என்ற வாக்கியத்திலுள்ள கொள்முதல் செய்தார்கள் என்பதைப் பற்றி இந்த சூரத்திலுள்ள 16வது ஆயத்தின் விரிவுரையில் விரிவாக எழுதப்பட்டிருப்பது காண்க.

அறிந்துகொள்:- இம்மை மறுமை ஆகிய இரண்டினுடைய இன்பங்களும் ஒருங்கே சேர்ந்திருப்பது முடியாத காரியமாகும். அல்லாஹு தஆலா முகல்லஃபாகவுள்ள ஒவ்வொருவருக்கும் இம்மை மறுமை ஆகிய இரண்டில் அவர் விரும்பிய ஒன்றை அடைந்து கொள்வதற்கு இடம்பாடாக்கி வைத்திருக்கிறான். ஆகவே, முகல்லஃபான ஒருவன் இரண்டில் ஒன்றை அடைவதில் முயலுவானாயின் அவனுக்கு மற்றொன்று தவறிப் போகும். ஆகவே, அல்லாஹு தஆலா யூதர்களுக்கு அவர்களுடைய வேதத்தில் உள்ளதைக் கொண்டு ஈமான் கொள்வதை விற்பனை செய்வதற்கும், இவ்வுலக இன்பங்களிலும் குஃப்ரான காரியங்களிலுமிருந்து அவர்களுக்குக் கிடைத்ததையும் விலைக்கு வாங்குவதற்கும் ஒப்பிட்டு இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான்.

وَلَقَدْ آتَيْنَا مُوسَى الْكِتَابَ وَقَفَّيْنَا مِن بَعْدِهِ
بِالرُّسُلِ ۖ وَآتَيْنَا عِيسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنَاتِ
وَأَيَّدْنَاهُ بِرُوحِ الْقُدُسِ ۗ أَفَكُلَّمَا جَاءَكُمْ رَسُولٌ
بِمَا لَا تَهْوَىٰ أَنفُسُكُمُ اسْتَكْبَرْتُمْ فَفَرِيقًا كَذَّبْتُمْ
وَفَرِيقًا تَقْتُلُونَ ﴿٨٧﴾

87. இன்னும் நாம், மூஸாவுக்கு நிச்சயமாக வேதத்தைக் கொடுத்தோம். அவருக்குப் பின் தூதர்களைத் தொடர்ச்சியாக நாம் அனுப்பி வைத்தோம். இன்னும் மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு நாம் (தெளிவான) அத்தாட்சிகளைக் கொடுத்தோம்; இன்னும் நாம், அவரை ரூஹுல் குதுஸைக் கொண்டு பலப்படுத்தினோம்; ஆனால் உங்கள் மனம் விரும்பாததை உங்களிடத்தில் (எமது) தூதர் கொண்டுவரும் போதெல்லாம் நீங்கள் பெருமை கொண்டு (அத்தூதுவர்களில்) ஒரு சாராரைப் பொய்ப்பித்து, (இன்னும்) ஒரு சாராரைக் கொலை(யும்) செய்கின்றீர்கள்.

கஃபா என்பது ஒருவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒருவர் தொடர்ந்து செல்வாராயின் அவரைக் குறித்து இந்த வார்த்தை சொல்லப்படுகிறது. அதாவது, "அவர் தொடர்ந்து வந்தார்" என்பது பொருள். ஆகவே, கஃப்பைனா என்பதற்கு "அவரைப் பின்றொடர்ந்து வரும்படி செய்தோம்" என்பது கருத்து. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பிறகு ஹளரத் யூஷஃ, ஷமுயில், தாவூத், சுலைமான், ஷம்ஊன், ஷஃயா, அர்மியா, உஜைர், ஹிஜ்கீல், இல்யாஸ், யஸஉ, யூனுஸ், ஜக்கரிய்யா, யஹ்யா (அலைஹிமுஸ்ஸலாம்) முதலிய நபிமார்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக வந்தார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பிறகு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வரை ஒரு சொற்படி 4 ஆயிரம் நபிமார்கள் வந்திருக்கிறார்கள் என்றும் மற்றொரு சொற்படி 70 ஆயிரம் நபிமார்கள் வந்திருக்கிறார்கள் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

மர்யம் இது சுர்யானிப் பாஷையில் பணிவிடை செய்பவள், வணக்கம் புரிபவள் என்பது அர்த்தம். இவருடைய தாயார் இவரை மஸ்ஜிதின் பணி விடைக்காக விட்டிருந்தார். ஆதலால், இவருக்கு இந்தப் பெயர் வந்தது. இவர் அல்லாஹு தஆலாவுக்குச் செய்த (இபாதத்தென்னும்) வணக்கத்தின் நிறப்பத்திற்காக அல்லாஹு தஆலா தனது சங்கையான குர்ஆன் ஷரீஃபில் நபிமார்களுடன் இவருடைய பெயரை ஏழு இடங்களில் கூறி இருக்கிறான். இன்னும், நபிமார்களை அல்லாஹு தஆலா முன்னோக்கிப் பேசுவது போல் இவருடைய பெயரைக் கூறி இவரை முன்னோக்கிப் பேசியும் இருக்கிறான்.

அல்பய்யனாத்து "தெளிவான அத்தாட்சிகள்" அதாவது, முஅஜிஸாத்துகளையும் கொடுத்திருந்தான். இறந்தவர்களை உயிர்ப்பித்தல், குஷ்டரோகிகளைக் குணப்படுத்துதல், மறைவான செய்திகளை அறிவித்தல், இஞ்ஜீல் வேதம் முதலியவைகள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. இவற்றைக் குறித்துத்தான் இந்த ஆயத்தில் "**அல்பய்யினாத்** அதாவது தெளிவான அத்தாட்சிகள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றன.

ரூஹுல்குதுஸ் என்பதற்கு ‘பரிசுத்தமாக்கப்பட்ட ரூஹு’ என்பது பொருள். இது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ரூஹை அல்குதுஸ் என்று வர்ணித்தது கண்ணியப்படுத்துவதற்காகவே யாகும். ஏனெனில், அல்குதுஸ் என்பது அல்லாஹு தஆலாவின் திருப் பெயராகும். அல்லது ரூஹுல் குதுஸ் என்பதற்கு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்றும் சொல்லப்படுகிறது. ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பாவத்தைச் செய்யாமல் இருந்ததனாலேயே அவர்களை பரிசுத்தம் என்று வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இவர் இருதயங்களுக்கு ஹயாத்தாக இருக்கும் படியானதை நபிமார்களிடம் கொண்டு வந்து கொண்டிருந்தார் என்பதனாலேயே இவருக்கு ரூஹு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யூதர்களிடம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது செய்தியைச் சொன்ன போது அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து, “முஹம்மதே! நீர் நபிமார்களுடைய செய்தியெல்லாம் சொல்கிறீர், ஈஸா செய்த மாதிரி நீர் செய்யவுமில்லை. வேறு நபிமார்கள் செய்த மாதிரி செய்யவுமில்லை. நீர் உண்மையாளராக இருந்தால் மூஸாவைப் போல் அற்புதத்தைக் கொண்டு வாரும்” என்று சொன்னார்கள். அதற்கு அல்லாஹு தஆலா அந்த யூதர்களை நோக்கி أَفَكُلَّمَا جَاءَكُمْ رَسُولٌ بِمَا لَا تَهْوَىٰ أَنفُسُكُمُ **“யூதர்களே உங்கள் மனம் விரும்பாததை உங்களிடம் ரசூல் கொண்டு வரும்போதெல்லாம்”** என்ற வசனத்தைக் கூறி இருக்கிறான்.

ஃபரீக்கன் அதாவது சாராரை (கூட்டத்தை) என்ற வார்த்தையை இந்த ஆயத்தில் அல்லாஹு தஆலா இரண்டு தடவை மடக்கி மடக்கிக் கூறி இருப்பது ஏனெனில், அந்த யூதர்கள் செய்த வேலையின் பால் கேட்பவர்கள் மனம் பதிவதற்கும், அதனை உணர்ந்த கொள்ள அவர்களுக்கு ஷௌக்கு (ஆசை) உண்டாகுவதற்குமேயாகும்.

وَقَالُوا قُلُوبُنَا غُلْفٌ ۚ بَل لَّعَنَهُمُ اللَّهُ بِكُفْرِهِمْ

فَقَلِيلًا مَّا يُؤْمِنُونَ ۝

88. மேலும், அவர்கள் “எங்கள் இருதயங்கள் திரையிடப் பட்டிருக்கின்றன” என்று கூறுகின்றனர். ஆனால், அவர்களின் நிராகரிப்பின் காரணமாக அவர்களை அல்லாஹ் சபித்திருக்கிறான். ஆகையால், அவர்கள் சொற்பத்தைத்தான் விசுவாசிக்கின்றார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்கள் முஹம்மது கொண்டு வந்த விஷயம் எங்கள் மனத்தினுள் வரவே இல்லை எங்களுக்கு விளங்கவுமில்லை என்று கூறி அதற்குக் காரணம் “எங்களது இருதயங்கள் திரையிடப் பட்டிருக்கின்றன” என்றுங் கூறினர். அதனை அல்லாஹு தஆலா மறுத்து அவர்களது இருதயங்கள் மூடப்படவில்லை. (ஹக்கான) உண்மையான பேச்சுக்களை ஒப்புக் கொள்ளத்தக்க விதமாகத்தான் பித்ரத்தின் (இயற்கையின்) படி அவர்களது இருதயங்கள் படைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் குஃப்ரான காரியங்களைச் செய்து ஹக்கானவைகளை (உண்மையான வைகளை) நிராகரித்துக் கொண்டே இருப்பதால் அவர்களை அவன் சபித்திருக்கிறான். ஆதலின் அவர்கள் மிகவும் சொற்பமான விஷயங்களைத்தான் ஈமான் கொள்வார்கள். அதாவது, வேதத்தில் சொல்லப்பட்ட சில விஷயங்களை ஒப்புக் கொண்டு, சில விஷயங்களை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்ற விஷயத்தை இந்த ஆயத்தில் இறைவன் கூறி இருக்கிறான்.

وَلَمَّا جَاءَهُمْ كِتَابٌ مِّنْ عِندِ اللَّهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ
وَكَانُوا مِن قَبْلُ يَسْتَفْتِحُونَ عَلَى الَّذِينَ كَفَرُوا فَلَمَّا
جَاءَهُم مَّا عَرَفُوا كَفَرُوا بِهِ ۚ فَلَعْنَةُ اللَّهِ عَلَى الْكَافِرِينَ ۝

89. மேலும், தங்களிடமிருப்பதை உண்மைப்படுத்தும் வேதம் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு வந்தபோது, நிராகரிப்பாளர்

களுக்கு விரோதமாக வெற்றி கிடைக்க வேண்டுமென்று (எங்கள் இறைவா! கடைசி காலத்து நபியின் பொருட்டால் வெற்றியைத் தருவாயாக என்று) முன்னர் அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டிருந் தார்கள். ஆனால், அவர்கள் அறிந்திருந்தது அவர்களுக்கு வந்தபோது அதை அவர்கள் நிராகரித்தனர். ஆதலால் அல்லாஹ்வின் சாபம் நிராகரிப்பவர்கள் மீது உண்டாவதாக.

யூதர்களுக்கு வருத்தம் வந்தாலும், பகைவரைப் பயந்தாலும் இறைவனிடத்தில் "பிற்காலத்தில் வருவாரென்று நீ தவ்ராத்தில் சொல்லி இருக்கிற கடைசி காலத்து நபியின் பொருட்டால் எங்களுக்கு வெற்றியைக் கொடு" என்று துஆச் செய்வார்கள். அவர்களுக்கு வெற்றியும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இன்னும், அவர்கள் முஷ்ரிக்குகளைப் பார்த்து "எங்கள் சொல்லை உண்மையாக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவருடன் நாங்கள் சேர்ந்து ஆது தமூது கூட்டத்தைக் கொன்றது போல் உங்களைக் கொல்வோம்" என்று சொல்லி இருந்தார்கள். அப்படி இருக்க பிற்காலத்து நபியான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் வம்சத்தில் தோன்றாமல் அறபியர்களில் தோன்றியதால் பொறாமை கொண்டு தங்கள் தலைமைப் பொறுப்பு போய்விடுமென்று பயந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வேண்டுமென்றே ஒப்புக் கொள்ளாமலிருந்தனர். இவ்விஷயத்தை அல்லாஹு தஆலா இந்த ஆயத்தில் கூறி இப்படிச் செய்த நிராகரிப்பாளர்களை சபித்திருக்கிறான்.

லஃனத்துல்லாஹ் என்பது நிராகரிப்பாளர்களை ரஹ்மத் என்னும் கிருபை, கராமத் என்னும் சங்கை, சுவர்க்கம் ஆகியவற்றை விட்டு அவர்களை விரட்டுதல் என்பதும், பாவம் செய்த மூமின்களை கராமத்து என்னும் சங்கையை விட்டு அவர்களை தூரமாக்குதல் என்பதும் கருத்தாகும்.

ஒருவரை சாபத்துக்குரியவராக்கி வைக்கும் தன்மைகள் குஃப்ரு, பித்அத்து, ஃபிஸ்கு ஆகிய மூன்றுமாகும். இவை

ஒவ்வொன்றிற்கும் மூன்று விதமான அந்தஸ்துகளிருக்கின்றன. 1. பொதுவான தன்மையைக் கொண்டு சபித்தல், நிராகரிப்பாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று கூறுவது போன்றவைகள். 2. இதனைப் பார்க்கினும் குறிப்பான தன்மைகளைக் கொண்டு சபித்தல், யூதர் கிறிஸ்தவர்கள் மீது அல்லது அநியாயக்காரர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார் மீது சபிப்பது போன்றவைகள். இந்த இரண்டு விதமாகவும் சபிக்கலாம். 3. குறிப்பான மனிதர்களைக் குறித்து சபிப்பது அதாவது ஃபிர்அவ்ன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று சபிப்பது போன்றவைகள். இந்த மூன்றாவது வகையான சாபத்தில் இரண்டு விதமிருக்கிறது. ஒருவர் காஃபிராக மரணித்து விட்டார் என்ற விஷயம் ஷரீஅத்திலேயே ருஜுவாகி இருக்குமாயின் அப்படிப்பட்டவர்களை சபிப்பது கூடும். உதாரணமாக ஃபிர்அவ்ன், அபூஜஹ்லு ஆகியவர்கள் நிராகரிப்பாளராக மரணமடைந்தார்கள் என்ற விஷயம் ஷரீஅத்திலேயே ருஜுவாகி இருப்பதால் இப்படிப் பட்டவர்களை சபிப்பது குற்றமில்லை. இவர்களைத் தவிர ஷரீஅத்திலேயே ருஜுவாகாமலிருப் பவர்களை சபிப்பது கூடாது. ஏனெனில், ஒருவர் ஒரு காலத்தில் குஃப்ரான காரியத்தைச் செய்தாலும் அதனைவிட்டு அப்பால் விலகி ஈமானுடன் மரணித்து விடக்கூடும். ஆதலால், குறிப்பிட்ட நபர்களை சபிக்கக்கூடாது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சிறிய தந்தையான ஸெய்யிதுஷ் ஷுஹதா ஹம்ஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வஹ்ஷியின் கையால் ஷஹீதானார்கள். ஆயினும் அதற்குப் பிறகு அந்த வஹ்ஷி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கையால் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து விட்டது மல்லாமல், அவருக்கு சுவர்க்கம் இருப்பதாக அல்லாஹு தஆலாவால் நற்செய்தி சொல்லப்பட்டவராகவும் ஆகி விட்டார்.

அறிந்து கொள்:- சபிக்கப்படுபவர் அதற்குத் தகுதியாக இல்லாதிருந்தால் அது சபித்தவருக்கே திரும்ப மீட்டப் படுகிறது. மூமின்களை சபிப்பது அவரைக் கொல்வதற்கு ஒப்பாக இருக்கிறது. சில சமயங்களில் அவருடைய பொருள்களின் மீது சபிக்கப்படுபகிறது.

அப்படிச் செய்தால் அந்தப் பொருள்களிலிருந்து பரக்கத்து எடுபட்டுப் போகும். ஆதலின், அல்லாஹ் தஆலாவின் சிருஷ்டிகளில் கல்லானாலும் சரி, மிருகமானாலும் சரி, மனிதரானாலும் சரி எதையும் சபிக்கக் கூடாது. ஆகவே, சபிப்பதைப் பார்க்கினும் அதனை விட்டு விட்டு அல்லாஹ்வின் திக்ரில் ஈடுபடுவதுதான் மேலான காரியமாகும். ஏனெனில், சபிப்பதால் எவ்வித நன்மையும் கிடைப்பதில்லை. அல்லாஹ் தஆலாவை திக்ரு செய்வதாலும் தஸ்பீஹ் செய்வதாலும் நன்மை கிடைக்கிறது.

بِئْسَمَا اشْتَرَوْا بِهِ أَنْفُسَهُمْ أَنْ يَكْفُرُوا بِمَا أَنْزَلَ اللّٰهُ
بَغْيًا أَنْ يُنَزِّلَ اللّٰهُ مِنْ فَضْلِهِ عَلٰى مَنْ يَشَاءُ مِنْ
عِبَادِهِ ۚ فَبَاءُوْ بِغَضَبٍ عَلٰى غَضَبٍ ۚ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ
مُّهِيْنٌ ۝

90. அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடியவரின் மீது தன்னுடைய கிருபையினால் இறக்கிவைத்ததின் பேரில் (யூதர்களாகிய) அவர்கள் பொறாமை கொண்டு, அல்லாஹ் இறக்கி வைத்த (குர்ஆன் வேதத்)தை நிராகரிப்பவர்கள் தங்கள் நப்ஸுகளுக்கு வாங்கிக் கொண்டது கெட்டது. ஆகவே, (இவர்கள் வேதங்களைச் சிதைத்ததாலும் ஒப்புக் கொள்ள மறுத்ததாலும்) கோபத்திற்குமேல் கோபத்தில் சேர்ந்து விட்டனர்; நிராகரிப்பவர்களுக்கு இழிவைத்தரும் வேதனையுண்டு.

அன்ஃபுஸஹும் "தங்களுடைய நஃப்ஸுகளுக்கு" என்பதற்கு இந்த இடத்தில் ஈமானாகும். ஈமானுக்கு என்று சொல்லாமல் நஃப்ஸுகளுக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது காரணம், நஃப்ஸுகள் சிருஷ்டிக்கப்பட்ட தெல்லாம் கல்விக்கும், அதனைக் கொண்டுள்ள அமலுக்கும் அதாவது, ஈமானுக்குமேயாகும் என்பதை அறிவிப்பதற் காகவே யாகும். ஆகவே, அவர்கள் ஈமானுக்குப் பதிலாக குஃப்ரை மாற்றிக் கொண்டதால் அவர்கள் தங்கள் நஃப்ஸுகளையே அதற்குப் பதிலாக மாற்றிக் கொண்டவர்களைப் போலாகி விட்டார்கள்.

عَلٰى مَنْ يَّشَاءُ مِنْ عِبَادِهِ **"தன்னுடைய அடியார்களில் தான் நாடியவரின் மீது"** என்ற வாக்கியத்திற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்கள். கடைசி காலத்தில் ஒரு நபி வருவார் என்பதாக யூதர்கள் ஈமான் கொண்டிருந்தார்கள். இன்னும் அந்த நபி கூடிய விரைவில் வெளியாகுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டும், அவர் ஹளரத் இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சந்ததியில் தோன்றுவார் என்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். எனவே, அந்தக் கடைசி காலத்து நபி ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சந்ததியில் தோன்றியதால் அவர்கள் பொறாமை கொண்டனர்.

غَضَبٍ عَلٰى غَضَبٍ **"கோபத்திற்கு மேல் கோபம்"** என்றது குர்ஆனையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் பொய்யென்று நிராகரித்தது ஒரு கோபம். தவ்ராத் வேதத்தை மாற்றிக் கூறியது மற்றொரு கோபம்.

وَإِذَا قِيْلَ لَهُمْ اٰمِنُوْا بِمَا أَنْزَلَ اللّٰهُ قَالُوْا نُؤْمِنُ بِمَا
أُنْزِلَ عَلَيْنَا وَيَكْفُرُوْنَ بِمَا وَرَاءَهُ ۚ وَهُوَ الْحَقُّ
مُصَدِّقًا لِّمَا مَعَهُمْ ۗ قُلْ فَلِمَ تَقْتُلُوْنَ أَنْبِيَاءَ اللّٰهِ
مِنْ قَبْلُ إِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۝

91. மேலும், அல்லாஹ் இறக்கியதின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என அவர்களுக்குக் கூறப்பெற்றால், "எங்கள் மீது இறக்கி வைத்ததை நாங்கள் நம்புகிறோம்", என்று கூறுகிறார்கள். இன்னும், (தங்கள் மீது இறக்கி வைத்திருக்கும்) அதைத் தவிரவுள்ள (மற்ற) தை மறுத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதுவோ அவர்களிடமுள்ள (தவ்ராத்)தை மெய்ப்பிக்கின்ற உண்மையா(ன வேதமா)க இருக்கிறது. அவ்வாறாயின் நீங்கள் (தவ்ராத்தை

உண்மையாக) விசுவாசிப்பவர்களாக இருந்தால், முன்னர் அல்லாஹ்வின் நபிமார்களைக் கொலை செய்தது ஏன்? என்று (நபியே) நீர் கேளும்.

"அல்லாஹு தஆலாவால் இறக்கப்பட்ட எல்லா வேதங்களையும் ஒப்புக் கொள்ளுங்கள்" என்று மதீனாவிலும் அதனைச் சுற்றிலுமிருந்த யூதர்களிடம் ஸஹாபாக்கள் சொன்னால் அதற்கவர்கள் எங்களுக்கு இறக்கப்பட்ட வேதத்தைத்தான் நாங்கள் ஒப்புக் கொள்வோம் என்று கூறிவந்தார்கள். அவர்கள் கூறுகிற இவ்விஷயமும் உண்மையான விஷயமல்ல என்பதை வெளிப்படுத்துவதற்காக "தவ்ராத் வேதத்திலும் நபிமார்களைக் கொலை செய்வதை அல்லாஹு தஆலா ஹராமாக்கி இருக்க நீங்கள் அவ்வேதத்தின் கட்டளையை மீறி நபிமார்களைக் கொலை செய்தது எதற்காக?" என்று கேட்கும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறான்.

பனீ இஸ்ராயீல்களிலுள்ள நபிமார்களுக்கு இறக்கப்பட்ட வேதம்தான் தங்களுக்கு இறக்கப்பட்ட வேதம் என்பதும், அதனைத் தவிரவுள்ள மற்றவைகளெல்லாம் தங்களுக்கு இறக்கப்பட்டனவல்ல வென்பதும் அவர்களது எண்ணம். நபிமார்களைக் கொன்றவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் இருந்த யூதர்களல்ல. இவர்களது மூதாதையர்கள்தான் அப்படிச் செய்தவர்கள். என்றாலும், தங்களுடைய மூதாதையர் செய்த அந்தக் காரியத்தைப் பற்றி இவர்கள் திருப்திக் கொண்டிருந்ததால் இவர்களைக் குறித்து "நீங்கள் ஏன் நபிமார்களைக் கொலை செய்கின்றீர்கள்?" என்று கேட்கப்பட்டது. ஆகவே, ஒருவர் செய்யும் ஒரு பாவமான காரியத்தைப் பற்றித் திருப்தி கொள்பவர்களும் அந்தப் பாவத்தைச் செய்தவரைப் போலாகி விடுகிறார்கள் என்பது இந்த ஆயத்திலிருந்து விளங்குகிறது.

மேலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காலத்தில் இருந்த யூதர்கள் நபிமார்களைக் கொலை செய்ய வில்லை யென்றாலும், அவர்களிடமும் அந்த மனப்பான்மை இருந்தது. இதனால்தான் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் கைபரிலிருந்த போது, அவர்களுக்கு விருந்து கொடுப்பதாகக் கூறி நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தனர். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதனை அறிந்து கொண்டார்கள். ஆதலால் அந்த நஞ்சினால் கஷ்டத்திற்குள்ளாக வில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சேர்ந்து விருந்துண்ட ஒரு ஸஹாபி அந்த நஞ்சினால் ஷஹீதானார். இந்த விஷயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சரித்திரத்தில் நன்கு தெரியவரும்.

وَلَقَدْ جَاءَكُمْ مُوسَىٰ بِالْبَيِّنَاتِ ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ
مِنْ بَعْدِهِ وَأَنْتُمْ ظَالِمُونَ ۝

92. அன்றியும், நிச்சயமாக மூஸா உங்களிடம் அற்புதங்களைக் கொண்டு வந்திருந்தார்; அவருக்குப் பிறகு நீங்கள் காளைக்கன்றை (த்தெய்வமாக) எடுத்துக் கொண்டீர்கள். மேலும், நீங்களோ! அநியாயக்காரர்களாக இருக்கின்றீர்கள்.

மதீனாவிலுள்ள யூதர்கள் ஸஹாபாக்களிடம் "எங்களுக்கு இறக்கப்பட்டதைத்தான் நாங்கள் ஈமான் கொள்வோம்" என்று கூறியதை மறுத்து, அவர்களது செய்கையைக் கண்டித்து இந்த ஆயத்தில் இறைவன் கூறியுள்ளான். இவர்கள் காளைமாட்டை வணங்கிய விபரம் இதே சூரத்தின் 51 வது ஆயத்திலும் அதன் விரிவுரையிலும் கூறப்பட்டிருக்கிறது.

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّورَ خُذُوا
مَا آتَيْنَاكُمْ بِقُوَّةٍ وَاسْمَعُوا ۖ قَالُوا سَمِعْنَا وَعَصَيْنَا
وَأُشْرِبُوا فِي قُلُوبِهِمُ الْعِجْلَ بِكُفْرِهِمْ ۚ قُلْ بِئْسَمَا يَأْمُرُكُمْ بِهِ
إِيمَانُكُمْ إِنْ كُنْتُمْ مُؤْمِنِينَ ۝

93. மேலும், நாம் உங்கள் மீது மலையை உயர்த்தி நாம் உங்களுக்குக் கொடுத்திருக்கிற (தவ்ராத்) தைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; இன்னும் (உங்களுக்குச் சொல்லப்படுவதில்) செவி மடுங்கள் என்று உங்கள் வாக்குறுதியை நாம் வாங்கிய போது அவர்கள், 'நாங்கள் செவிமடுத்தோம்' ஆனால் (அந்தக் கட்டளைக்கு) மாறு செய்தோம் என்று கூறினார்கள்; மேலும் அவர்களின் மாறுபாட்டின் காரணமாக அவர்களுடைய இருதயங்களில் காளைக்கன்று (தெய்வமென்னும் நம்பிக்கை) ஊட்டப்பட்டுவிட்டது. நீங்கள் விசுவாசிகளாக இருப்பீர்களாயின், உங்களது நம்பிக்கை உங்களிடம் எதை ஏவுகின்றதோ அது மிகவும் கெட்டது என்று (நபியே) நீர் கூறுவீராக.

இந்த ஆயத்திலும் யூதர்களின் கூற்றைக் கண்டித்து கூறப்பட்டிருக்கிறது.

நீங்கள் தவ்ராத்தைக் கொண்டு ஈமான் கொள்ளவில்லை, நீங்கள் கொண்டுள்ள ஈமான் உண்மையான ஈமானல்ல.

பனீ இஸ்ராயீல்களின் மீது மலையை உயர்த்தி வாக்குறுதி வாங்கிய விபரம் இந்த சூரத்தின் 63வது ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

قُلْ إِن كَانَتْ لَكُمُ الدَّارُ الْآخِرَةُ عِندَ اللَّهِ خَالِصَةً
مِّن دُونِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ إِن كُنتُمْ صَادِقِينَ ۝

94. அல்லாஹ்விடத்திலிருக்கிற மறுமை வீடு (நீங்கள் நினைத்திருப்பது போல் மற்றைய) மனிதர்களுக்கன்றி உங்களுக்கே சொந்தமாக இருக்குமாயின், நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் (அந்த வீட்டிற்குச் செல்வதற்காக) நீங்கள் 'மரணத்தை விரும்புங்கள்' என்று (அவர்களுக்குக்) கூறுவீராக.

الدَّارُ الْآخِرَةُ மறுமை வீடு என்பதற்கு சுவர்க்கமாகும்.

அன்னாஸ் என்ற பதத்திலுள்ள **அல்** என்னும் அட்சரங்கள்

முந்தியுள்ள ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டுவதாக இருப்பதால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவருடைய தோழர்களுமாவர் என்பது கருத்து.

தமன்னவ் என்பதற்கு அதனை நீங்கள் மனதார விரும்புங்கள்; அதனை நீங்கள் வாயினால் கேளுங்கள் என்பது கருத்து. மரணமடையாமல் சுவர்க்கம் புக முடியாது. மறுஉலகில் சுவர்க்கம் கிடைப்பது நிச்சயமென்று ஒருவர் தெரிந்து கொண்டால் அவர் இவ்வுலகில் வாழ்வதைப் பார்க்கினும் சுவர்க்கத்திற்கே சென்றுவிட விரும்புவார். எனவே சுவர்க்கம் உங்களுக்குத்தான் சொந்தம் என்று நீங்கள் கூறுவதில் உண்மையாளர்களாக இருந்தால் சுவர்க்கத்தில் நுழைவதற்காக மரணத்தை விரும்புங்கள் என்று கூறும்படி இறைவன் கூறி இருக்கிறான்.

وَلَن يَتَمَنَّوْهُ أَبَدًا بِمَا قَدَّمَتْ أَيْدِيهِمْ ۗ وَاللَّهُ عَلِيمٌ
بِالظَّالِمِينَ ۝

95. ஆனால், அவர்களின் கைகள் பாவச் செயல்களை முற்படுத்தியுள்ளதன் காரணமாக அவர்கள் அ(வ்விதம் மரணத்)தை (எப்பொழுதும்) விரும்பவே மாட்டார்கள். மேலும், அல்லாஹ் அநியாயக்காரர்களை நன்கு அறிவான்.

யூதர்கள் சுவர்க்கம் தங்களுக்குத்தான் சொந்தம், வேறு யாருக்குமில்லை என்று தாவாச் செய்து கொண்டிருப்பது போலவே சுவர்க்கம் மூமின்களுக்குத்தான் என்பதாக மூமின்களும் ஏகமனதாகக் கூறுகின்றனர். அப்படி இருக்க மூமின்களில் எவரும் மரணத்தைக் கேட்பதில்லை. இந் நிலையில் யூதர்களிடத்தில் மட்டும் இம்மாதிரி ஆட்சேபனை செய்வதற்குக் காரணம் என்ன என்ற கேள்வி இந்த இடத்தில் உண்டாகிறது. இதற்கு மறுமொழி யென்ன வென்றால், மூமின்கள் மேன்மை, சிறப்பு, அந்தஸ்து ஆகியவைகள் தங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று யூதர்கள் கூறுவதுபோல் கூறவில்லை.

யூதர்கள் தங்களை அல்லாஹ்வின் புதல்வர்களென்றும், நேசர்கள் என்றும், தங்களுக்கு மட்டும்தான் சுவர்க்கம் சொந்தம் என்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, தன்னுடைய நேசனிடம் செல்வதை எந்த மனிதனும் வெறுக்க மாட்டான். அவனிடம் போய்ச் சேருவதையே அவன் விரும்புவான். இந்த முறையின்படி யூதர்களிடம் நீங்கள் அல்லாஹ்வின் நேசர்களாக இருந்தால் மரணத்தின் மூலம் அவனை அடைய விரும்புங்கள் என்பதாகக் கேட்கப்பட்டது. ஆகவே, அவர்கள் அவ்விதம் மரணத்தை விரும்பாததால் அவர்களுடைய தாவாவும் பொய் என்பதாக ருஜுவாகிறது.

وَلَتَجِدَنَّهُمْ أَحْرَصَ النَّاسِ عَلَىٰ حَيَاةٍ ۚ وَمِنَ الَّذِينَ أَشْرَكُوا ۚ يَوَدُّ أَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ أَلْفَ سَنَةٍ ۚ وَمَا هُوَ بِمُزَحْزِحِهِ مِنَ الْعَذَابِ أَنْ يُعَمَّرَ ۗ وَاللَّهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ ۝

96. மேலும், (அவர்கள் பொதுவாக மற்ற) மனிதர்களைக் காட்டினும், இன்னும் (சிறப்பாக) இணை வைப்பவர்களைக் காட்டினும் (உலக) வாழ்வில் மிகப் பேராசையுடையவர்களாக அவர்களை நிச்சயமாக நீர் காண்பீர். அவர்களில் ஒவ்வொருவனும் ஆயிரம் வருடம் வாழ வேண்டும் என்று விரும்புவான். (அவ்வாறு நீண்டகால) வாழ்வு (ஆயுள்) கொடுக்கப்படுவது வேதனையை விட்டு விலக்கிவிடாது. மேலும், அவர்கள் செய்வதை அல்லாஹ் பார்ப்பவனாக இருக்கிறான்.

அன்னாஸ் மற்ற மனிதர்களைப் பார்க்கினும் என்ற வார்த்தைக்குள் وَمِنَ الَّذِينَ أَشْرَكُوا **வமினல்லதீன அஷ்ரகூ** (இன்னும் "இணை வைத்தவர்கள்") என்ற விஷயம் அடங்கிவிட்டது. அப்படியிருக்க இணை வைத்தவர்களை மட்டும் குறிப்பிட்டுப் பிரத்தியேகமாகக் கூறியது ஏன் என்றால், இணை வைப்பவர்களுக்கு இவ்வுலக வாழ்வில் அதிகம் ஆசையுண்டு. ஏனெனில், அவர்கள்

மறுவுலக வாழ்க்கையை ஈமான் கொள்ளாதவர்கள். அவர்கள் இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு எதையும் அறியாதவர்கள். ஆதலின், அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை அதிகம் ஆசை வைத்திருப்பது ஆச்சரியமான விஷயமல்ல. ஆனால், யூதர்கள் இவர்களைப் போலன்று. இவர்கள் மறு உலகில் நன்மை தீமைக்குக் கூலி கொடுக்கப்படும் என்பதை ஒப்புக் கொண்டிருப்பவர்கள். ஆகுவே, யூதர்கள் இவ்விஷயத்தில் முஷ்ரிக்குகளைப் பார்க்கினும் அதிகமாகக் கண்டிக்கப்படத் தகுந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகவே யாகும்.

தவிர, யூதர்கள் வேதக்காரர்களாக இருந்தும் இவ்வுலக வாழ்வின் மீது இவ்வளவு தூரம் ஆசை யுள்ளவர்களாயிருப்பது எதற்கென்றால், அவர்கள் தங்களது அந்தரங்க நிலைமையை நன்கு அறிந்திருக்கின்றனர். ஆகவே, தங்களது நிலைமையைக் கவனிக்குமிடத்து தங்களுக்கு நரகம்தான் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதை அவர்கள் உறுதியாக உணர்ந்து கொண்டனர். ஆதலால் நரக வேதனைக்குப் பயந்து, இந்த உலகிலேயே இருப்பதை அதிகமாக விரும்புகின்றனர். ஆனால், முஷ்ரிக்குகளுக்கு இந்த விஷயம் தெரியாது. ஆதலால் அவர்கள் யூதர்களைப் போல் அவ்வளவு அதிகமாக இவ்வுலக வாழ்வின் மீது ஆசை வைக்கவில்லை.

يَوَدُّ أَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ أَلْفَ سَنَةٍ **"அவர்களில் ஒருவர் ஆயிரம் வருடம் வாழ்வதை ஆசை வைக்கிறார்"** என்ற இந்த வாக்கியம் முஷ்ரிக்குகள் இவ்வுலகத்தில் நீண்டகாலம் வாழ வேண்டும் என்று விரும்புவதை அறிவிக்கிறது. ஆயிரம் வருடம் என்று குறிப்பாகக் கூறியதேனென்றால், மஜூஸிக் காஃபிர்கள் தும்மினாலும் ஒருவரை ஒருவர் சந்தித்து ஸலாம் சொல்லிக் கொள்ளும் போதும் ஆயிரம் வருடம் வாழ்வாயாக என்று கூறுவது வழக்கம். ஆதலால், ஆயிரம் வருடம் என்பது இங்கு சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது.

ஹிக்காயத்து:- வஹபு ரலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். ஹஸரத் தானியால் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒருமுறை காட்டில் போய்க் கொண்டிருக்கையில் 'தானியாலே நில்லும்,

புதுமையைக் காண்பீர்' என்று ஒரு சப்தம் வந்தது. அவர்கள் நின்று கொண்டு அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தார்கள். ஒன்றையும் காணவில்லை. இரண்டாவதும் அவ்விதமாகவே கேட்டு நின்றார்கள். பக்கத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து அவர்களை அழைக்கும் சப்தம் வருவது தெரியவந்தது. அங்கு அவர்கள் போய்ப் பார்த்தபோது மாணிக்கத்தால் ஆன ஒரு கட்டில் இருந்தது. அதிலிருந்து ஒரு சப்தம் 'தானியாலே ஏறும், புதுமையைக் காண்பீர்' என்று வந்தது. ஏறிப் பார்த்தபோது, தங்க விரிப்பில் கஸ்தூரி அம்பரை நிறப்பி அதிலொரு வாலிபன் அளவற்ற நகைகளைச் சூடி, செத்து, தூங்குபவன் போல் கிடந்தான். அவன் தலையில் பொற்கிரீடமும் இடது கையில் பொன் மோதிரமும் இடுப்பில் கூரிய வாளும் அணிந்திருந்தான். அப்பொழுது அந்தக் கட்டிலிலிருந்து "அந்த வாளை எடுத்துப் படியும்" என்றொரு சப்தம் உண்டாயிற்று. படித்துப் பார்த்தபோது "இது இரமுடைய மகன் ஆது. ஆதுடைய மகன் உனுக்கு, உனுக்குடைய மகன் ஊஜு, ஊஜ்டைய மகன் ஸம்ஸாமுடைய வாள். நான் 1700 வருடம் உயிருடன் இருந்தேன். 12 ஆயிரம் பெண்களைக் கற்பழித்தேன். 40 ஆயிரம் நகரங்கள் உண்டாக்கினேன். நான் அறியாமையாலும் அநியாயத்தாலும் நீதியை விட்டு மாறினேன். என்னுடைய பொக்கிஷத்தின் திறவுகோல்களை 400 கோவேறு கழுதைகள் சுமந்தன. இவ்வுலகிலுள்ளவர்களில் ஒருவரும் என்னுடன் பிணங்கவில்லை. ஆதலால், நான் இறைவன் என்பதாகக் கூறி வழக்காடினேன். (ருபூபியத்தை தாவாச் செய்தேன்) உடனே, எனக்குப் பசி உண்டாயிற்று. ஆயிரம் பறை (ஒரு பறை ஆறு மரக்கால் கொண்ட முகத்தல் அளவாகும்) முத்துக் கொடுத்து ஒரு சிரங்கை சோளம் வாங்குவதற்குத் தேடினேன். அதுவும் கிடைக்காமல் பசியால் செத்தேன். இம்மையுடைய மக்களே! உங்களிலிருந்து இறந்து போனவர்களைப் பற்றிக் கவனியுங்கள். என்னைக் கொண்டு படிப்பினை பெற்றுக் கொள்ளுங்கள். என்னை உலகம் ஏமாற்றி விட்டது போல் உங்களையும் ஏமாற்றிவிட வேண்டாம். என்னுடைய சுற்றத்தார்கள் என் பாவத்திலிருந்து ஒரு அணுவளவேனும் சுமந்து கொள்ள வில்லை' என்று எழுதி இருந்தது".

قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِجِبْرِيلَ فَإِنَّهُ نَزَّلَهُ عَلَىٰ قَلْبِكَ
بِإِذْنِ اللَّهِ مُصَدِّقًا لِمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى وَبُشْرَىٰ
لِلْمُؤْمِنِينَ ﴿٩٧﴾

97. எவன் 'ஜிப்ரயீ'லுக்கு விரோதியாக இருக்கின்றானோ (அவன் அல்லாஹ்வுக்கும் ஏனைய மலக்குகளுக்கும் விரோதியே). ஏனெனில் இதற்கு முன்னுள்ள (வேதத்)தை உண்மைப்படுத்துவதாகவும், நேர்வழி காட்டியாகவும், விசுவாசிகளுக்கு நற்செய்தி கூறுகின்றதாகவுமிருக்கிற இ(வ்வேதத்)தை (நபியே) உமது இருதயத்தில் அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டு நிச்சயமாக அவர் இறக்கி வைத்திருக்கிறார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா முனவ்வராவுக்கு ஹிஜ்ரத்துச் செய்து வந்த போது, ஃபிதக்கில் குடியிருந்து வந்த அப்துல்லாஹிப்னு ஸூரிய்யா என்ற ஒரு யூதர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "முஹம்மதே! உமது தூக்கம் எப்படி? கடைசி காலத்தில் வருகிற நபியின் தூக்கத்தைப் பற்றி எங்கள் வேதத்தில் நாங்கள் அறிவிக்கப் பட்டிருக்கிறோம்" என்று கூறினான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "என்னுடைய இரண்டு கண்களும் தூங்கும். ஆனால், எனது இதயம் தூங்காது" என்று பதில் கூறினார்கள். அதற்கு அவன் "உண்மை சொன்னீர்கள்" என்று பதில் கூறிவிட்டு "பிள்ளைகள், ஆடவரிலிருந்து உண்டாகின்றனவா? அல்லது பெண்களிலிருந்து உண்டாகின்றனவா? என்பதைப் பற்றி எனக்கு அறிவியுங்கள்" என்று கேட்டான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "எலும்பு, நரம்பு, வியர்வை ஆகியவைகள் ஆடவர்களிலும், ரத்தம், தசை, நகம், ரோமம், ஆகியவைகள் பெண்களிலிருந்தும் உண்டாகின்றன" என்று கூறினார்கள். அதற்கவன் "உண்மை கூறினீர்கள்" என்று சொல்லிவிட்டு "பிள்ளைகள் தங்கள் தந்தையுடன் பிறந்த சிறிய தந்தை

பெரிய தந்தையரை ஒத்திருக்கும் போது, தங்கள் தாய்மாமன்களை ஒத்தில்லாமலிருப்பதும் அல்லது தங்கள் தாய் மாமன்களை ஒத்திருக்கும் போது தங்கள் சிறிய தந்தை பெரிய தந்தையரை ஒத்தில்லாமலிருப்பதும் எதனால்?'' என்று கேட்டான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இவ்விருவரில் ஒருவருடைய அடையாளங்கள் மிகைத்திருப்பதற்குக் காரணம் அதற்குரியவர்களின் ஜலமேயாகும் (அதாவது தந்தையின் இந்திரியம் மிகைத்திருந்தால் பிள்ளை தந்தை, தந்தையுடன் பிறந்தவர்களின் அடையாளங்களை ஒத்திருக்கும். தாயின் இந்திரியம் மிகைத்திருந்தால் தாய் மாமனுடைய ஜாடையை ஒத்திருக்கும்) என்று கூறினார்கள். அதற்கவன் "மெய் சொன்னீர்கள்'' என்று கூறிவிட்டு ஹளரத் யாக்கூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களுக்கு ஹராமாக்கிக் கொண்ட உணவைப் பற்றி விசாரித்தான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "யாக்கூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பலமான நோய் ஏற்பட்டது. அப்பொழுது அவர் தமக்கு அல்லாஹு தஆலா ஆரோக்கியத்தைக் கொடுத்தால் தனக்கு மிகவும் பிரியமுள்ள உணவை ஹராமாக்கிக் கொள்வதாக நேர்ச்சை செய்து கொண்டார். அவருக்குப் பிரியமான உணவு ஒட்டகையின் இறைச்சியும், மிகப் பிரியமுள்ள பானம் ஒட்டகையின் பாலுமாகும்'' என்று பதில் கூறினார்கள். அதற்கவன் "உண்மை கூறினீர்கள்'' என்று கூறிவிட்டு "சுவர்க்கத்தில் முதல் விருந்து என்ன? வென்பதைப் பற்றி எனக்கு அறிவியுங்கள்'' என்று கேட்டான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "மீன்'' என்று கூறினார்கள். அதற்கவன் "மெய்யுரைத்தீர்கள்'' என்று கூறிவிட்டு, "இன்னும் ஒரு அடையாளம்தான் பாக்கியாக இருக்கிறது அதனையும் நீங்கள் சொல்லி விட்டால் உங்களைக் கொண்டு நான் ஈமான் கொண்டு உங்களைப் பின் பற்றுவேன் என்று கூறி, "அல்லாஹு தஆலாவிடமிருந்து நீங்கள் கூறுவதைக் கொண்டு வருகிற மலக்கு யார்?'' என்று விசாரித்தான்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஜிப்ரயீல்'' என்று கூறினார்கள். அதற்கவன் "அவர் எங்களது

பகைவர். ஏனெனில், அவர் வேதனையையுடைய மலக்காவார். எங்கள் தேவ தூதர் மீக்காயீல் என்பவராவர். அவர் ரஹ்மத்துடைய மலக்கு. மழை, நற்செய்தி இவற்றைக் கொண்டு இறங்குவார்'' என்று கூறினான். அப்போது ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "உங்கள் மீது அவருக்கேற்பட்ட விரோதத்திற்கு ஆரம்பமென்ன?'' வென்று கேட்டார்கள். அதற்கவன் "அவர் எங்களை பல தடவை பகைத்திருக்கிறார். இன்னும் அவர் எங்கள் மீது கடும் பகைவராக இருந்தார். பைத்துல் முகத்தஸ் புக்து நஸ்ரு என்பவனின் காலத்தில் அழிக்கப்படும் என்பதாக எங்கள் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு அல்லாஹு தஆலா வஹி இறக்கினான். இன்னும் அதனை அவன் அழிக்கும் காலத்தையும் எங்களுக்கு அறிவித்திருந்தான். நாங்கள் அந்தக் காலம் நெருங்கிய சமயத்தில் பனீ இஸ்ராயீல்களில் மிகவும் பலமுள்ள ஒரு ஆளை அவனைத் தேடுவதற்காக அனுப்பினோம். அவர் அவனைக் கண்டு பிடித்தார். அப்பொழுது அவன் பாபிலில் ஏழையாக இருந்தான். அவனுக்குச் சக்தியும் இல்லாதிருந்தது. அவனை அவர் கொல்வதற்காகப் பிடித்தபோது ஜிப்ரயீல் என்ற தேவதூதர் வந்து அவனை விலக்கி விட்டார். இவனது காரியம் உங்களை அழிக்கிறதாக இருக்குமானால் இவன் உங்கள் கையில் அகப்பட மாட்டான். அப்படி இல்லையானால் இவனை எந்தக் காரணத்திற்காக நீங்கள் கொல்கிறீர்கள்? என்று அந்த வானவர் கூறினார். அதனை எங்கள் மனிதர் உண்மை என்று ஒப்புக் கொண்டு விட்டு விட்டார். பிறகு அவன் பெரியவனாகிப் பலமடைந்து, நாட்டையும் பிடித்து அடைந்து எங்களுடன் யுத்தம் செய்து பைத்துல் முகத்தஸைப் பாழாக்கி எங்களையும் கொன்றான்.

நுபுவ்வத்தை எங்களில் வைக்க வேண்டுமென ஜிப்ரயீல் ஏவப்பட்டிருந்தார். அப்படி இருக்க எங்களல்லாதவர்களில் அதனை வைத்து விட்டார். ஆதலால்தான் நாங்கள் அவரைப் பகைவராகக் கருதுகிறோம். இன்னும் மீக்காயீல் ஜிப்ரயீலுடைய பகைவர் என்று கூறினார். அதற்கு ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "நீங்கள் கூறுவதுபோல அவ்விருவரும் இருந்திருக்கக் கூடும். ஆனால் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் பகைவர்களாக

இருக்கவில்லை. நீங்கள் கழுதையைப் பார்க்கிலும் மிகப் பெரிய காஃபிர்களாக இருக்கிறீர்கள். அவ்விருவரில் ஒருவருக்கு விரோதியாக இருப்பவன் மற்றொருவருக்கும் விரோதிதான். அவ்விருவருக்கும் விரோதியாக இருப்பவன் அல்லாஹு தஆலாவுக்கும் விரோதிதான்'' என்று கூறினார். உடனே, மேலே கண்ட ஆயத்தும், இதற்கடியிலுள்ள ஆயத்தும் இறக்கப்பட்டன.

مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَرُسُلِهٖ وَجِبْرِيْلَ
وَمِيْكٰىلَ فَاِنَّ اللّٰهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ ۝

98. அல்லாஹ்வுக்கும், அவனுடைய வானவர்களுக்கும், அவனுடைய தூதர்களுக்கும், 'ஜிப்ரயீ' லுக்கும், 'மீக்காயீ'லுக்கும் எவன் விரோதியாக இருந்து இதை நிராகரிக்கின்றானோ (அந்)நிராகரிப் போருக்கு நிச்சயமாக அல்லாஹ் விரோதியாக இருக்கின்றான்.

மலாயிகத்திஹி அதாவது அவனுடைய மலக்குகளுக்கும் என்ற வார்த்தையிலேயே ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் சேர்ந்து விட்டார்கள். ஆயினும் அவர்களுடைய சிறப்புகளை வெளியாக்கிக் காண்பிப்பதற்காக அல்லாஹு தஆலா அவ்விருவருடைய பெயர்களையும் குறிப்பாகச் சுட்டிக் காட்டி இருக்கிறான்.

ரிவாயத்து:- "ஜிப்ரு, மீக், இஸ்ராப் என்ற வார்த்தைகளுக்கு சுர்யானிப் பாஷையில் "அடிமை" என்பது பொருள். யீல், ஆயீல் என்ற பதங்கள் அல்லாஹ் என்பதைக் குறிக்கின்றன. ஆகவே, ஜிப்ரயீல், மீக்காயீல், இஸ்ராபீல் என்ற வார்த்தைகளுக்கு அப்துல்லாஹ் அல்லது அப்துர் ரஹ்மான் என்பது பொருள்'' என்று இக்ரிமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

وَلَقَدْ اَنْزَلْنَآ اِلَيْكَ اٰيٰتٍۢ بَيِّنٰتٍ ۚ وَمَا يَكْفُرُ
بِهَآ اِلَّا الْفٰسِقُوْنَ ۝

99. மேலும், நாம் உம்மிடம் நிச்சயமாக தெளிவான வசனங்களை இறக்கி இருக்கிறோம்; இவற்றை பாவிகளைத் தவிர (வேறு எவரும்) மறுக்க மாட்டார்கள்.

அப்துல்லாஹிப்னு ஸூரியா என்ற ஒரு யூதன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "நாங்கள் தெரிந்து கொள்ளத் தகுந்த எதையும் நீர் கொண்டு வரவுமில்லை, உம்மை நாம் பின்பற்றுவதற்குத் தகுந்த ஆயத்தும் உமக்கு இறக்கப்படவுமில்லை'' என்று கூறினான். அதற்கு மறுமொழியாக அல்லாஹு தஆலா மேற்கண்ட ஆயத்தை இறக்கி வைத்தான்.

ஆயாத்துன் என்பதற்கு இந்த இடத்தில் ஹராம் ஹலால் என்ற விஷயங்களை வெளிப்படுத்தும் குர்ஆன் ஆயத்துகளாகிய வேத வசனங்கள் என்பது கருத்து.

பையினாத்துன் என்பதற்கு அவைகள் அல்லாஹு தஆலாவிடமிருந்துள்ளவைகள் என்பதையும், அவைகளுடைய கருத்துக்களையும் சந்தேகமில்லாமல் அறிவிக்கக் கூடியவைகள் என்பது கருத்து.

اَوَكُلَّمَا عٰهَدُوْا عَهْدًا نَّبَذَهٗ فَرِيْقٌ مِّنْهُمْ ۗ بَلْ
اَكْثَرُهُمْ لَا يُؤْمِنُوْنَ ۝

100. என்ன? அவர்கள் (அல்லாஹ்விடம்) ஒரு உடன்படிக்கை செய்யும் போதெல்லாம் அவர்களில் ஒரு கூட்டத்தார் அதை (நிராகரித்து) எறிந்து விடுகின்றனர். (இதற்குக் காரணம் உடன்படிக்கையை மீறுந்தன்மை அவர்களிடமிருப்பது மட்டும்) அன்று! அவர்களில் பெரும்பாலர் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

நபதஹு உடன்படிக்கையை (நிராகரித்து) எறிந்து விடுகிறார்கள் என்பது உடன்படிக்கைக்கு மாறாக நடந்து கொள்கிறார்கள், அதனை மீறுவதைப் பற்றி அவர்கள் கவலை கொள்வதில்லை - இலட்சியம் செய்வதில்லை என்பது கருத்து.

அல்ஃபரீக் என்பதற்கு கூட்டத்தார் **அத்தாயிஃபத்து** என்பது பொருள். இது குறைவானவர்களுக்கும், பெரும்பாலானவர்களுக்கும் பொதுவான வார்த்தையாகும். ஆகவே, ஒரு சிறு கூட்டத்தார் மட்டும்தான் உடன்படிக்கையை மீறுகிறார்கள் என்றும் அல்லது ஒரு பெருங் கூட்டத்தார் மீறுகிறார்கள் என்றும், அர்த்தங் கொள்ளலாம். எனவே உடன்படிக்கையை மீறுகிறவர்கள் சிறிய கூட்டத்தினரல்ல, பெரும்பான்மையான கூட்டத்தினர்தான் உடன்படிக்கையை மீறுகின்றனர் என்பதைத் தெளிவு படுத்திவிடுவதற்காக இறைவன் بَلْ أَكْثَرُهُمْ لَا يُؤْمِنُونَ "என்றாலும், அவர்களில் பெரும்பாலானவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்" என்பதாகக் கூறி இருக்கிறான்.

وَلَمَّا جَاءَهُمْ رَسُولٌ مِّنْ عِندِ اللَّهِ مُصَدِّقٌ لِّمَا
مَعَهُمْ نَبَذَ فَرِيقٌ مِّنَ الَّذِينَ أُوتُوا الْكِتَابَ
كِتَابَ اللَّهِ وَرَاءَ ظُهُورِهِمْ كَأَنَّهُمْ لَا يَعْلَمُونَ ⑩

101. மேலும், அவர்களிடமுள்ள வேதத்தை உண்மைப் படுத்துகிற ஒரு தூதர் அல்லாஹ்விடமிருந்து அவர்களிடம் வந்தபோது, வேதம் கொடுக்கப்பட்டவர்களிலேயே ஒரு கூட்டத்தினர் தாங்கள் (அத்தூதரை) அறியாதவர்களைப்போல், அல்லாஹ்வின் வேதத்தைத் தங்கள் முதுகுக்குப் பின் எறிந்து விட்டார்கள்.

ரசூலுன் தூதர் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்கள். யூதர்களிடமுள்ள தவ்ராத் வேதத்தை உண்மைப்படுத்தும்படியான தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அவர்கள் ஈமான் கொள்ளாமல் மாறுசெய்தது அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத் வேதத்தையே அலட்சியம் செய்து விட்டதாகும். ஏனெனில், அந்த வேதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவின் தூதர்தான் என்ற விஷயம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும், அந்த தவ்ராத் வேதம் அல்லாஹு தஆலாவிடமிருந்து தங்களுக்கு அருளப்பட்டது

என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அந்த வேதக் கட்டளையை அலட்சியம் செய்து மீறிவிட்டதால் "அவர்கள் அதனைத் தங்கள் முதுகுப்புறமே எறிந்து விட்டனர்" என்று சொல்லப்பட்டது.

யூதர்கள் நான்கு வகையாக இருந்தனர்.

1. தவ்ராத் வேதத்தை ஈமான் கொண்டு, அதிலுள்ள கட்டளைகளின்படி நடந்தவர்கள் ஒரு கூட்டம். யூதர்களாக இருந்து பின்னர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய மூமின்களைப் போன்றவர்கள். இவர்கள் மிகச் சிறுபான்மையினராகவுள்ளவர்கள்.

2. உடன்படிக்கையை வேண்டுமென்றே வீம்புக்காக பகிரங்கமாக மீறிய கூட்டத்தினர்.

3. பகிரங்கமாக உடன்படிக்கையை மீறியவர்கள். ஆயினும் தங்களுடைய அறியாமையினால் மீறியவர்கள். இப்படிப்பட்டவர்கள் ஒரு கூட்டத்தினர். இவர்கள்தான் பெரும்பான்மையினர்.

4. உடன்படிக்கையைப் பகிரங்கமாக மீறாமல் இரகசியமாக அலட்சியம் செய்தவர்கள். இந்தக் கூட்டத்தாரையும் மேலே சொன்ன அறியாத பாமரர்களான கூட்டத்தாருடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, ஒருவர் அறியாதவருடைய (பாமரருடைய) செய்கையைச் செய்து, அவ்வாறு மாறாகச் செய்ததை உணர்ந்து கொண்டே அதில் பிடிவாதமாகவும் இருப்பாராயின் அவர் அறியாதவர்களுடன்தான் சேர்க்கப்படுவார். ஆகவே, அவரும் அறியாதவரும் சமமானவர்களே அதாவது அறியாதவரிடமிருந்து நன்மை உண்டாகாதது போல கற்றபடி நடக்காத ஆலிமிடமிருந்தும் நன்மையுண்டாகுவதில்லை. இதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நாவினால் (மட்டும்) உபதேசம் செய்பவர் தனது பேச்சை வீணாக்கிக் கொள்கிறார். ஆனால் கல்பினால் (உளப் பூர்வமாக) உபதேசம் செய்பவர் தனது (அம்பை சரியாக) எய்து விடுகிறார்" என்று கூறி இருக்கிறார்கள்.

وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ ۚ
وَمَا كَفَرَ سُلَيْمٰنُ وَلٰكِنَّ الشَّيٰطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ
النَّاسَ السِّحْرَ ۗ وَمَآ اُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ
هَارُوْتَ وَمَارُوْتَ ۗ وَمَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَآ
اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ ۗ فَيَتَعَلَّمُوْنَ مِنْهُمَا مَا
يُفَرِّقُوْنَ بِهٖ بَيْنَ الْمَرْءِ وَزَوْجِهٖ ۗ وَمَا هُمْ بِضَآرِّيْنَ
بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ۗ وَيَتَعَلَّمُوْنَ مَا يَضُرُّهُمْ
وَلَا يَنْفَعُهُمْ ۗ وَلَقَدْ عَلِمُوْا لَمَنِ اشْتَرٰىهُ مَا لَهٗ فِى
الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ ۗ وَلَبِئْسَ مَا شَرَوْا بِهٖٓ
اَنْفُسَهُمْ ۗ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ۝

102. இன்னும், அவர்கள் (யூதர்கள்) சுலைமானுடைய ஆட்சிக் காலத்தில் 'ஷைத்தான்'கள் ஓதிய (வஞ்சனை சூனியத்திற்குரிய மந்திரத்)தைப் பின்பற்றினார்கள். ஆனால், சுலைமான் (வஞ்சனை செய்து) நிராகரிக்கவில்லை. என்றாலும் 'ஷைத்தான்'கள்தான் நிராகரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மனிதர்களுக்குச் சூனியத்தையும், பாபிலோன் நகரில் 'ஹாரூத்' 'மாரூத்' என்ற இரண்டு வானவர்களுக்கு வெளியாக்கப்பட்டிருந்த (தென்று சொல்லி மந்திரத்)தையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள். ஆனால் (அவ்விருவருமே) நாங்கள் (அல்லாஹ்வினால் மனிதர்களிடம் அனுப்பப்பட்ட) சோதனையாக இருக்கிறோம். ஆதலால் (இதைக் கற்றுக் கொண்டு தீங்கிழைத்து அல்லாஹ்வுக்கு) மாறு செய்யாதீர்கள்" என்று கூறும் வரையிலும் ஒருவருக்கும் (அதை) அவ்விருவரும் கற்றுக் கொடுப்பதே இல்லை. பின்னர் அவ்விருவரிடமிருந்து கணவனுக்கும் அவன் மனைவிக்குமிடையில் பிரிவினை செய்வதை அவர்கள் கற்றுக் கொள்வார்கள் (என்று அந்த ஷைத்தான்கள் சொல்லி வந்தனர்). என்றாலும், அல்லாஹ்வின் கட்டளையின்றி அ(ந்)த (மந்திரத்தி)னால் அவர்கள் ஒருவருக்கும் தீங்கு செய்கிறவர்களாயில்லை. எனினும் அவர்கள் தங்களுக்குத் தீங்கு செய்யக் கூடியதையும், தங்களுக்குப் பிரயோஜனப்படாததையும் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால், எவன் இச் சூனியத்தை விலைக்கு வாங்குகிறானோ அவனுக்கு மறுமையில் எவ்விதப் பாக்கியமும் கிடையாது என்று அவர்கள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்கள். இன்னும் தங்கள் ஆத்மாவுக்குப் பதிலாக அவர்கள் விலைக்கு வாங்கிக் கொண்டது (மிகக்) கெட்டது. இதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டாமா?

وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ **"இன்னும் சுலைமானுடைய ஆட்சிக்காலத்தில் ஷைத்தான்கள் ஓதியதைப் பின்பற்றினார்கள்"** என்பதற்கு முன்னாளில் ஜின் ஷைத்தான்கள் வானத்தில் ஏறி மலக்குகள் பேசிக் கொள்வதைக் கேட்டு வந்து குறிகாரர்களிடம் சொல்லும். குறிகாரர்கள் ஒன்றை நூறாகப் பெருக்கி மனிதர்களிடம் சொல்வார்கள். மனிதர்கள் அவைகள் எல்லா வற்றையும் உண்மையென்று நம்பி அதில் கவிழ்ந்தனர். ஆகவே, "ஜின்களுக்கும் மறைவான விஷயங்கள் தெரியுமென்ற நம்பிக்கை அந்த யூதர்களிடம் உண்டாயிற்று. ஹளரத் சுலைமான் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இதனை அறிந்து குறிகாரர்களிடமிருந்த நூற்களைப் பறிமுதல் செய்து, அவற்றை ஒரு பெட்டியில் அடைத்து தங்களுடைய ஆசனத்திற்குக் கீழில் புதைத்து விட்டதுடன் "ஜின்களுக்கு மறைவான விஷயங்கள் தெரியுமென்று நம்புபவர்களின் கழுத்தை அறுப்பேன்" என்று விளம்பரமும் செய்தார்கள்.

பிறகு, ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து, அவர்கள் காலத்திலிருந்த உலமாக்களும் சென்று போகவே ஷைத்தான் மனித ரூபத்தில் சில மூடரிடம் வந்து,

“உங்களுக்கு நானொரு புதையல் காண்பித்துத் தரட்டுமா?” என்று கூறினான். அதற்கவர்கள் “நல்லது” என்று கூறினார்கள். அப்பொழுது அவன் ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஆசனத்திற்குக் கீழில் பூமியைத் தோண்டும்படி கூறியதுடன், தூர நின்று அதனைப் பார்த்துக் கொண்டும் இருந்தான். அந்த மூடர்கள் இவனைப் பக்கத்தில் வரும்படி அழைத்தார்கள். அதற்கவன் ‘குற்றமில்லை, நீங்கள் தோண்டினால் சரிதான்’ என்று கூறினான். அவன் அந்த ஆசனத்தின் பக்கத்தில் சென்றால் உடனே அவன் கரிந்து போவான். ஆதலால்தான் அவன் பக்கத்தில் செல்லாமல் விலகி நின்றான். அவர்கள் பூமியைத் தோண்டி, அந்நூற்களை எடுத்த போது அவன் அவர்களிடம் “இவை களினால்தான் சுலைமான் மனு, ஜின், பிசாசு, பறவைகள் முதலான வற்றைக் கட்டி ஆட்சி செய்து கொண்டிருந்தார் என்று கூறிவிட்டுப் பறந்து விட்டான். இதனால் ஊருக்குள் “ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் வஞ்சனைக்காரர்” என்ற பிரஸ்தாபம் உண்டாயிற்று. ஆகவே, அந்த மூடர்கள் அந்த நூற்களை ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இல்முகள் (கல்விகள்) என்று ஒப்புக் கொண்டு வேதத்தைப் புறக்கணித்து விட்டு, அவற்றையே படித்துக் கொண்டிருந்தார்கள். இதனால்தான் யூதர்களிடம் வஞ்சனை செய்வது மிகுதமாகக் காணப்படுகிறது. ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஞ்சனைக்காரராக இருந்தார் என்று அவர் மீது கூறப்பட்ட அவதூறை அல்லாஹு தஆலா இந்த ஆயத்தில் மறுத்து وَمَا كَفَرَ سُلَيْمٰنُ وَلٰكِنَّ الشَّيٰطِيْنَ كَفَرُوْا **“மேலும் சுலைமான் (வஞ்சனை செய்து) நிராகரிக்கவில்லை எனினும் ஷைத்தான்கள்தான் நிராகரித்துக் கொண்டிருந்தனர்”** என்று கூறி இருக்கின்றான்.

ஹாரூத் மாரூத் என்பது இரண்டு மலக்குகளின் பெயர். இதன் விபரம் வருமாறு.

ஹளரத் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் மனிதருடைய கெட்ட அமல் வானத்திற்குப் போனதைக் கண்டு மலக்குகள் மனிதர்களைக் கேவலமாகப் பார்த்தார்கள். அதற்கு

அல்லாஹு தஆலா அவர்களை நோக்கி “மனிதருக்குக் கொடுத்திருக்கிற இச்சைகளை உங்களுக்குக் கொடுத்தால் நீங்களும் அவர்களைப் போலாவீர்கள்” என்று கூறினான். அதற்கு மலக்குகள் “நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம்” என்று கூறினார்கள். அப்பொழுது அவன் மூன்று மலக்குகளைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு இச்சையைக் கொடுத்து பூமிக்குப் போய் கெட்ட செயல்களை விலக்குங்களென்று கூறி அனுப்பினான். அவர்கள் பூமிக்கு வந்த உடனேயே ஒரு மலக்கு தன்னைப் பயந்து வானத்திற்குத் திரும்பச் சென்று அவருடைய மனதில் வந்த (ஷஹ்வத் தென்னும்) இச்சையைப் பற்றி ஒரே சுஜூதில் கிடந்து தலையை உயர்த்தாமல் இருந்ததுடன், இன்று வரை முட்டைக் கீழே போட்டுக் கொண்டிருக்கிறார். மற்ற இரண்டு மலக்குகளும் பகலில் அமுல்படுத்திக் கொண்டிருப்பதும், அந்தியில் இஸ்முல் அஃலமை ஓதி வானம் போய் விடுவதுமாக இருந்தார்கள். இவ்விதமாக ஒரு மாத காலம் வரை இருந்தனர்.

பிறகு, அவர்கள் ஜுஹ்ரா என்ற ஃபார்ஸீ பெண்ணைக் கண்டு மயங்கி அவளைத் தகாத செயலுக்கு அழைத்தார்கள். அவள் அதற்கு உடன்படவில்லை. மறுநாளும் அவளைக் கண்டு அவர்கள் தகாத செயலுக்கு அழைத்தார்கள். அப்பொழுது அவள் “நீங்கள் இந்த விக்கிரகத்திற்கு சுஜூது செய்து மதுவும் குடித்தால் நான் உங்கள் விருப்பத்திற்கு இணங்குவேன்” என்று கூறிப்போய் விட்டாள். மூன்றாவது நாள் அவள் ஒரு மதுப் புட்டியுடன் அவர்களிடம் சென்றாள். அப்பொழுது அவர்கள் மற்ற இரண்டும் மிகவும் கெட்ட காரியங்கள் என்று கூறி மதுவை மட்டும் குடித்தார்கள். குடிவெறி அதிகமாகி அவர்கள் தன்னை மறந்து, அந்தப் பெண்ணிடம் தகாத காரியத்தில் ஈடுபட்டார்கள். இதனை ஒரு மனிதன் கண்டான். ஆதலால், அச்செய்கை வெளியாகிவிடும் என்று எண்ணி அவனைக் கொன்றார்கள். பிறகு, அந்தி வேளையில் வானத்திற்குப் போக அவர்கள் முயன்றார்கள். ஆனால், அது அவர்களால் இயலவில்லை.

பிறகு அவர்கள் இவ்விபரத்தை இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சொல்லவே அவர்கள் இறைவனிடம் இவ்விரண்டு

பேருக்காக மன்றாடினர்கள். இறைவன் இம்மையுடைய வேதனை வேண்டுமா? அல்லது மறுமையுடைய வேதனை வேண்டுமா? என்று அவ்விருவரையும் கேட்கும்படி கட்டளையிட்டான். அதற்கு அவ்விருவரும் மறுமையில் வேதனைப்படுவதைப் பார்க்கினும் உலகிலேயே வேதனையைப் பெற்றுத் தொலைத்து விடவேண்டு மென்றார்கள். இந்த இரண்டு மலக்குகளும்தான் ஹாரூத் மாரூத் என்ற பெயர்களுள்ளவர்கள். அவர்களை பாபிலோன் என்னும் ஊரில் தலைகீழாய் தூக்கப்பட்டது. ஒரு மனிதன் அவர்களைப் பார்க்கப் போனதில் அவர்களுடைய கண் மஞ்சணிக்கவும், தொலி கருத்தவர் களாகவும், அவர்களுடைய நாவுக்கும் தண்ணீருக்கு மிடையில் நான்கு விரல் இடை இருக்கிறதாகவும், அவர்களுக்குத் தாகத்தைக் கொடுத்து வேதனை செய்த புதுமையைக் கண்டு **லாஇலாஹ இல்லல்லாஹு** என்று சொன்னார்.

அவர்கள் இப்படிக் கலிமா ஓதியதைக் கேட்டு நீர் எந்த உம்மத்திலுள்ளவரென்று கேட்டார்கள். அவர் ஹளரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்தில் உள்ளவனென்று சொல்லவே, அவர்கள் அதனைக் கேட்டு **அல்ஹம்து லில்லாஹ்** என்று சொன்னார்கள். அவர்கள் இப்படிக் கூறியதைக் குறித்து அவர்களிடம் அவர் கேட்டதற்கு "கியாம நாளின் நபி வந்துவிட்டார், எங்கள் வேதனை தீரும் காலம் நெருங்கிவிட்டதென்று சந்தோஷமடைகின்றோம்" என்று சொன்னார்கள்.

அறிந்து கொள்:- மலக்குகளைப் பற்றி இவ்வாறு சொல்லும் செய்தியை நம்பக் கூடாதென்றும், இதனை யூதர்கள்தான் இட்டுக் கட்டினார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். அதற்கு வேறு சிலர் "இது யூதர்கள் கட்டியதாக இருக்குமானால் இமாம்களெல்லாம் எப்படி அவர்களுடைய நூற்களையும் தஃப்ஸீர்களையும் இதைக் கொண்டு நிறப்புவார்கள்? மலக்குகள் பாவம் செய்ய மாட்டார்களே என்று இதனைத் தள்ளக்கூடாது. ஏனெனில், அவர்களை அல்லாஹு தஆலா சோதிப்பதற்காக மனிதப் பண்பை அவர்களில் உண்டாக்கினான். எனவே அவர்கள் மாறு செய்தார்கள். இன்னும் ஷைத்தான்

மலக்காயிருந்தும் அவன் மலக்குடைய தன்மையை விட்டு தூரப்படுத்தப்படவே அவனுக்கும் ஆசை உண்டாகி பிள்ளை பெற்று, இல்லாத வேலையெல்லாம் செய்கிறான். எனவே, இதைத் தள்ளக்கூடாது' என்கிறார்கள்.

அந்த இரண்டு மலக்குகளும் ஸிஹ்ரு என்னும் வஞ்சனையை மனிதருக்குக் கற்றுக் கொடுத்ததெல்லாம் அக்காலத்தில் ஸிஹ்ரு என்னும் வஞ்சனை இன்னது, நபிமார்களுக்கு இருக்கும் முஃஜிஸா (அற்புதம்) இன்னது என்று பாகுபாடு செய்து தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. ஆதலால், இரண்டையும் பாகுபாடு செய்து தெரிந்து கொள்வதற்காக வஞ்சனையைக் கற்றுக் கொடுத்தார்கள். ஆனால், ஜனங்கள் வஞ்சனை செய்ய வேண்டும் உண்மை கொள்ள வேண்டுமென்று அவர்கள் கற்றுக் கொடுக்கவில்லை. இதனைக் குறித்துத்தான் இறைவன், وَمَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَآ اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ **நாங்கள் (ஜனங்களுக்குச்) சோதனையாக இருக்கிறோம். ஆதலின், (அதனைக் கற்றுக் கொண்டு தீங்கிழைத்து அல்லாஹ்வுக்கு) மாறு செய்யாதீர்கள் என்று கூறும் வரையிலும் ஒருவருக்கும் அவ்விருவரும் (வஞ்சனையைக்) கற்றுக் கொடுப்பதில்லை** என்று கூறி இருக்கிறான்.

ஸூனியம் என்பதன் ஹக்கீகத்து என்ன வென்பதைப் பற்றி உலமாக்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறது. ஸூனியம் குணபாடு செய்வது உண்மைதான் என்பதாக பெரும்பாலான உலமாக்கள் கூறி இருக்கிறார்கள். முஃதஜிலாக்கள் இதற்கு ஆதாரமில்லை. 'இதற்கு வெளியில் எவ்வித உஜூது மில்லை; இது வெறும் எண்ணம்தான்' என்பதாகக் கூறி இருக்கிறார்கள். இது சம்பந்தமாக இவர்கள் பல ஆதாரங்களையும் காண்பித்திருக்கிறார்கள். என்றாலும், பெரும் பாலான உலமாக்களின் சொல்தான் பலமானது.

தவிரவும், வஞ்சனை முதலியவைகள் நன்மையும் தீமையும் சேர்ந்த கலப்புள்ளவைகளாகக் கூட இல்லாமல், கலப்பற்ற தீங்கே அல்லாமல் பிரயோஜனம் என்பதே இல்லை என்பதை இறைவன் وَيَتَعَلَّمُوْنَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ **மேலும், (அந்த வஞ்சனையால்) அவர்கள் தங்களுக்குத் தீங்கு செய்யக் கூடியதை அவர்கள் கற்றுக்**

கொள்கிறார்கள் என்று ஆயத்தில் கூறி இருக்கிறான். ஆகவே, வஞ்சனையானது கலப்பில்லாத தீங்கு என்பதும், அதனைச் செய்வது குஃப்ரு என்பதும், இந்த ஆயத்திலிருந்து நன்கு தெரிவதுடன் அல்லாஹு தஆலாவுடைய நாட்டமில்லாமல் இவற்றைக் கொண்டு மனிதருக்கு எவ்விதத் தீங்கும் செய்ய முடியாது என்பதும் இந்த ஆயத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

وَلَوْ أَنَّهُمْ آمَنُوا وَاتَّقَوْا لَمَثُوبَةٌ مِّنْ عِندِ اللَّهِ خَيْرٌ ۖ
لَّوْ كَانُوا يَعْلَمُونَ ۝

103. (இன்னும்) இவர்கள் (இவ்வேதத்தையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும்) விசுவாசங் கொண்டு (பாவம் செய்வதைத்) தவிர்த்துக் கொண்டால் அல்லாஹ்விடமிருக்கும் கூலி மேலானதாகும். (இதை) அவர்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

நாவால் மட்டும் கல்வியைக் கற்றுக் கொள்வது பயனளிக்காது. கற்ற கல்வி (கல்பு என்னும்) இருதயத்தில் பதிந்து குணபாடு செய்தால்தான் அது பிரயோஜனப்படும். இந்தக் குணபாடானது ஸாலிஹான அமல்களைச் செய்வதிலும் கித்தாபையும் சுன்னத்தையும் பின்பற்றி நடப்பதிலும் தீவிரமாக ஈடுபடும்படி செய்யும் என்ற விஷயம் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَقُولُوا رَاعِنَا وَقُولُوا انظُرْنَا
وَاسْمَعُوا ۗ وَلِلْكَافِرِينَ عَذَابٌ أَلِيمٌ ۝

104. விசுவாசங் கொண்டவர்களே! (நீங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பேசும் போது) "ராயினா" என்று சொல்லாதீர்கள். மேலும், "உன்லுர்னா" என்று சொல்லுங்கள். இன்னும் (அவருடைய வார்த்தையைச்) செவி மடுங்கள். (இதற்கு மாறாகக் கூறிவருகின்ற அந்) நிராகரிப்போருக்கு மிகவும் துன்புறுத்தக் கூடிய வேதனையுண்டு.

ராஇனா என்பதற்கு அறபிப் பாஷையில் "எங்களை வழி பாருங்கள்" "எங்களைக் கவனியுங்கள்" என்பது பொருள். ஆனால் யூதர்களது பாஷையில் அந்த வார்த்தைக்கு "மடையா" என்பது கருத்து.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களிடம் மார்க்க சம்மந்தமாக அல்லது கல்வி சம்மந்தமாக ஏதேனும் ஒரு விஷயத்தைக் கூறும் போது முஸ்லிம்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "ராஇனா" என்று கூறுவார்கள். அதாவது தாங்கள் கூறுவதை நாங்கள் விளங்கிக் கொள்வதற்காக எங்களைக் கவனியுங்கள் என்பது அவர்கள் சொல்வதன் கருத்து. ஆனால், முஸ்லிம்கள் இப்படிக் கூறுவதை யூதர்கள் பார்த்து அவர்களும் "ராஇனா" என்று சொல்ல ஆரம்பித்தார்கள். எனினும், அவர்கள் அந்த வார்த்தைகளுக்கு அறபிப் பாஷையிலுள்ள அர்த்தத்தை நாடாமல் தங்களது பாஷையிலுள்ள தூஷணையான அர்த்தத்தையே நாடினர். அவர்கள் இம்மாதிரி செய்வதைக் குறித்து அவர்கள் தனிமையில் சிரித்துக் கொள்வது முண்டு. ஆகவே, அல்லாஹு தஆலா இந்த வார்த்தைகளைக் கூற வேண்டாமென்று முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டதுடன் இந்த வார்த்தைகளின் கருத்துள்ள انْظُرْنَا "உன்லுர்னா" என்ற வார்த்தை களைக் கூறும்படி கட்டளையிட்டிருக்கிறான்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறும் விஷயங்களை ஆரம்ப முதற்கொண்டே கவனமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும், முதலில் கவனக்குறைவாக இருந்து விட்டு அப்பால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களிடம் அதனைத் திரும்பக் கூறும்படி சொல்லித் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்றும் وَاسْمَعُوْا **இன்னும் கேளுங்கள்** என்ற வார்த்தையில் தாக்கீது செய்திருக்கிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அற்பமாக மதித்து நிந்தனை செய்யும் நோக்கத்துடன் "ராஇனா" என்ற

பதத்தைக் கூறிய யூதர்களை "நிராகரிப்பாளர்கள்" என்று இந்த இடத்தில் கூறப்பட்டிருக்கிறது.

مَا يَوَدُّ الَّذِينَ كَفَرُوا مِنْ أَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِينَ
أَنْ يُنَزَّلَ عَلَيْكُمْ مِّنْ خَيْرٍ مِّنْ رَّبِّكُمْ ۗ وَاللّٰهُ يَخْتَصُّ
بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ۗ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ ⊙

105. வேதத்தை யுடையவர்களில் நிராகரிப்பவரும் இணை வைப்பவர்களும் உங்களுடைய றப்பிடமிருந்து உங்களின் மீது (ஏதேனும்) ஒரு நன்மை இறக்கப்படுவதைப் பிரியப்பட மாட்டார்கள். ஆனால், அல்லாஹு(தஆலா) அவனது கிருபையைக் கொண்டு அவன் நாடியவர்களைச் சொந்தமாக்கிக் கொள்வான். இன்னும் அல்லாஹ மகத்தான கிருபை உடையவன்.

الَّذِينَ كَفَرُوا مِنْ أَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِينَ **அல்லதீன கஃபரூ மின் அஹ்லில் கிதாபிவலல் முஷ்ரிக்கீன** என்ற வாக்கியத்திலுள்ள அல்லதீன கஃபரூ என்பதற்கு அஹ்லல்கிதாப் என்பதும் முஷ்ரிக்கீன என்பதும் விபரமாக வந்திருக்கின்றன. ஆகவே, **மின்** என்ற வார்த்தை இந்த இடத்தில் விபரித்துச் சொல்வதற்காக உபயோகிக்கப் பட்டிருக்கிறது. நிராகரிப் பாளராகி விட்டவர்கள் என்ற வாக்கியம் ஒரு இனத்தைக் குறிக்கிறது. அந்த இனத்தில் வேதக்காரர்களும் இருக்கிறார்கள், இணை வைப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதை இந்த ஆயத்து தெளிவு படுத்துகிறது. எனவே, இணைவைப்பாளர் களாக இருந்தாலும் சரி, வேதக்காரர்களாக இருந்தாலும் சரி நிராகரிப் பாளர்கள் அனைவரும் பிரியப்பட மாட்டார்கள் என்பது கருத்து.

கைர் (நன்மை) என்பதற்கு வஹி திருக்குர்ஆன், உதவி என்பவைகளாகும்.

ரஹ்மத்துன் (கிருபை) என்பதற்கு நுபுவ்வத்து, வஹி ஹிக்மத், உதவி ஆகியவைகளாகும்.

நிராகரிப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஹி வருவதையும், நுபுவ்வத்துக் கிடைத்ததையும் பற்றிப் பிரியம் கொள்ளாமலிருப்பதற்குக் காரணமென்ன வெனில் யூதர்கள் நபிமார்களின் சந்ததியினராக இருப்பதாலும், அவர்களிடமே வஹி இறங்கிக் கொண்டிருந்ததாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஹி வந்ததைக் கண்டு அவர்கள் பொறாமை கொண்டு வெறுத்தனர். இணைவைப்பாளர்களுக்குச் செல்வாக்கும், பணமும் இருந்ததால் உலக சம்மந்தமான உன்னத பதவி தங்களிடமே யிருப்பது போல நுபுவ்வத்து போன்ற உன்னத பதவியும் தங்களுக்கே இருக்க வேண்டுமென அவர்கள் எண்ணிக் கொண்டனர். அவர்கள் இப்படி எண்ணிக் கொண்டிருந்ததனால்தான்

"இந்த குர்ஆன் (மக்கா, தாயிஃப் ஆகிய) இரண்டு ஊரிலுள்ள ஒரு பெரிய மனிதரின் மீது இறக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டாமா" (சூரத்துஸ்ஸுக்ருஃப் 31) என்பதாகக் கூறினார்கள். தாயிஃப் நகரில் இருந்த நயீ முப்னு மஸ்ஊதுத் தக்பீ என்பவருக்காவது அல்லது மக்கமா நகரிலுள்ள வலீதுப்னு முகய்யாரா என்பவருக்காவது நுபுவ்வத்து கிடைத்திருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஆகவே, அவ்விருவரில் எவருக்கும் கிடைக்காமல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்துக் கிடைத்ததால் அவர்கள் பொறாமை கொண்டனர். இதனை மறுத்துத்தான் இறைவன்,

وَاللّٰهُ يَخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ **"ஆனால், அல்லாஹ் அவனது கிருபையைக் கொண்டு அவன் நாடினவர்களைச் சொந்தமாக்கிக் கொள்வான்"** என்று கூறி இருக்கிறான். மேலும், அல்லாஹு தஆலா எவருக்கும் கடமைப் பட்டவனல்லன். அவன் தனது நாட்டப்படி எதையும் செய்பவன். அவனிடம் உரிமை கொண்டாட எவருக்கும் பாத்தியமில்லை என்பதையும் இந்த ஆயத்தில் விளக்கிக் கூறியிருக்கிறான்.

وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ **"இன்னும் அல்லாஹ் மகத்தான கிருபை உடையவன்"** என்ற வாக்கியத்திலிருந்து அல்லாஹு தஆலா ஒருவருக்கு ஒரு உபகாரம் செய்வதாயின் அதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதும், அவன் எவ்விதக்

எவ்விதக் காரணமுமில்லாமலே தனக்கு இஷ்டமானவர்களுக்குத் தனது ரஹ்மத்தை அருளுவான் என்பதும் விளங்குகிறது.

مَا نَنسَخْ مِنْ آيَةٍ أَوْ نُنسِهَا نَأْتِ بِخَيْرٍ مِّنْهَا أَوْ مِثْلِهَا ۗ أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

106. ஒரு ஆயத்தை நாம் மாற்றினாலும், அல்லது அதனை (இறக்காமல்) நாம் மறக்கடித்தோமானாலும் அதைவிடச் சிறந்ததை அல்லது அது போன்றதைக் கொண்டு வருவோம். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் ஆற்றல் உள்ளவன் என்பதை நீர் அறியவில்லையா?

அன்னஸ்கு என்பதற்கு அகராதியின்படி நீக்குதல், பகரமாக்குதல் என்பது பொருள். **நஸகத்திர்ரீஹுல் அதர** அம்பு அடையாளத்தை நீக்கி விட்டது, **நஸக்கத்துல் கிதாப** ஒரு பிரதியிலிருந்து இன்னொரு பிரதிக்கு புத்தகத்தை மாற்றினேன் என்று சொல்லப் படுகிறது.

இன்ஷாஉல் ஆயத் என்பதற்கு இருதயங்களிலிருந்து ஆயத்தை போக்கி விடுதல் என்பது பொருள். அதாவது மறக்கடித்து விடுதல் என்பது கருத்து.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஸஹாபாக்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக ஏவுகிறதைப் பார்த்தால் அவர் தமது மனயுக்தியால் இந்த ஆயத்துகளை உண்டாக்கி இருக்கிறார் என்று தெரியவருகிறதென்று இணைவைப் பாளர்கள் கூறினார்கள். இவர்களது இந்தக் கூற்றை மறுத்து அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை இறக்கி இருக்கிறான்.

நஸக் (நீக்குதல் பகரமாக்குதல்) அல்லாஹு தஆலாவின் ஏவல் விலக்கல் ஆகிய இரண்டு விஷயங்களில் மட்டும்தான் இருக்கிற தென்பதும், இவையல்லாத விஷயங்களில் **நஸ்கு** இல்லை என்பதும் பெரும்பாலானவர்களின் மதுஹபாகும் என்று அல்லாமா கர்த்தபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

نَأْتِ بِخَيْرٍ مِّنْهَا أَوْ مِثْلِهَا **"அதை விடச் சிறந்ததை அல்லது அதுபோன்றதைக் கொண்டு வருவோம்"** என்பது ஜனங்களுக்குப் பிரயோஜனம் செய்யும் விஷயத்திலும், நன்மை கிடைக்கும் விஷயத்திலும் மாற்றப்பட்ட ஆயத்தைக் காணப் புதிதாக அருளப்பட்ட ஆயத்து சிறந்தது என்பது கருத்து. அல்லாஹு தஆலாவின் கலாம் ஒன்றுதான். அவற்றில் ஒரு ஆயத்து சிறந்தது மற்றொரு ஆயத்து தாழ்ந்தது என்ற பாகுபாடில்லை. அல்லாஹு தஆலாவுடைய வஹியானது அவனது கலாம் என்ற விஷயத்தில் ஒரே விதமான அந்தஸ்தில்தான் இருக்கிறது. என்றாலும், அடியார்களுக்கு அவற்றால் ஏற்படும் நன்மை புண்ணியம் ஆகியவற்றைக் கவனித்துத்தான் அவற்றில் ஒன்றைப் பார்க்கினும் மற்றொன்று சிறந்தது என்று சொல்லப்படுகிறது. எனவே, கஷ்டமான ஒரு சட்டம் மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக இலேசான ஒரு சட்டம் விதிக்கப்படு மாயின் அமல் செய்யும் விஷயத்தில் முந்தின கட்டளையைப் பார்க்கினும் பிந்தின கட்டளை சிறந்ததாக இருக்கிறது என்றும், இலேசான ஒரு கட்டளைக்குப் பதிலாகக் கஷ்டமான ஒரு கட்டளை ஏற்படுத்தப்படுமாயின் நன்மை கிடைக்கும் விஷயத்தில் முந்திய கட்டளையைக் காண பிந்திய கட்டளை சிறந்தது என்றுஞ் சொல்லப்படும்.

அறிந்துகொள்:- முந்திய ஆயத்தைப் பிந்திய ஒரு ஆயத்து மாற்றி விட்டது என்று கூறுவது ஹக்கீகத்தின் படியல்ல. ஹக்கீகத்தில் அல்லாஹு தஆலாதான் எல்லாக் கட்டளைகளையும் மாற்றுபவனும் ஸ்திரப்படுத்துபவனுமாக இருக்கிறான். அல்லாஹு தஆலா இவ்விதம் ஒரு கட்டளையை மாற்றி அதற்குப் பதிலாக மற்றொன்றை ஏற்படுத்துவது மருத்துவர் நோயாளிகளுக்கு காலத்திற்கும், நோயின் நிலைமைக்கும் தக்கவாறு உணவையும் மருந்தையும் மாற்றி நிர்ணயிப்பதைப் போலிருக்கிறது. உடலைச் சீர்திருத்தி ஒழுங்கு செய்கிற வைத்தியர்கள் நோயாளிகளின் உடல் நிலைமையையும் கால நிலைமையையும் கவனித்து மருந்துகளையும் உணவுகளையும் மாற்றிக் கொடுக்கிறார்கள். இதுபோல அல்லாஹ்வின் தூதர்களாக வுள்ள ஆத்ம வைத்தியர்களான நபிமார்கள் மனிதர்களுக்குச் சிகிச்சை செய்து அவற்றைச் சீர்திருத்துபவர்களாக இருப்பதால் ஷரீஅத்துடைய

அமல்களையும், ஒழுக்கம் சம்மந்தமான சட்டங்களையும் மாற்றியமைக்கிறார்கள். ஆகவே, உடலுக்கு மருந்துகளும் உணவுகளும் எந்த நிலையிலிருக்கின்றனவோ அந்த நிலையில் ஷரீஅத்துடைய அமல்களும் சட்டங்களும் இருந்து வருகின்றன. உடலுக்கு ஒரு சமயம் கொடுக்கப்படும் அதே மருந்தை மறு சமயமும் கொடுக்காமல் வேறு மருந்தை மாற்றிக் கொடுப்பது போல மனிதர்களுக்கு ஒரு சமயத்தில் ஏற்படுத்தப்பட்ட ஷரீஅத்துடைய சட்டங்களும் அமல்களும் மறு சமயத்தில் மாற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாக வேறு சட்டங்களும் அமல்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ **நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களின் மீதும் ஆற்றல் உள்ளவன் என்பதை நீர் அறியவில்லையா?** என்பதற்கு அல்லாஹு தஆலா ஒரு சட்டத்தை மாற்றினால் அதற்குப் பதிலாக சிறந்த வேறொரு சட்டத்தை அல்லது அது போன்றதைக் கொண்டு வரச் சக்தியுள்ளவன் என்பதை நீர் அறிந்தே இருக்கிறீர் என்பதாகும். தவிரவும் இந்த ஆயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேரடியாக முன்னோக்கி கூறப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவெனில், மேலே சொல்லப்பட்டுள்ள ஆயத்தில் கண்ட விஷயங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது என்பதை ஊர்ஜிதப் படுத்துவதற்காகவே யாகும். இதைப்பற்றி மனிதரில் எவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்க்கினும் அதிகம் அறிந்தவரில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உள்ள கல்வியுடன் மற்றவர்களுடைய கல்வியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மற்றவர் களுடைய கல்வியை "அதன்" (இன்மை) என்பதன் பக்கமே சேர்க்க வேண்டும். ஏனெனில், நபிமார்களுக்குள்ள கல்விகளின் முன்னிலையில் வலிமார்களுக்குள்ள கல்வி கடல்களுக்கு முன்னிலையில் ஒரு துளி தண்ணீரைப் போலவே இருக்கிறது. இதுபோலவே, நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குள்ள கல்வியின் முன்னிலையில் இதர நபிமார்களின் கல்வி இருந்து வருகிறது.

اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ

وَمَا لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ

107. நிச்சயமாக அல்லாஹ்வாகிறவன் – அவனுக்குத்தான் வானங்களினுடையவும் பூமியினுடையவும் ஆட்சி இருக்கிறது என்பதை (நபியே) நீர் அறியவில்லையா? இன்னும், (மூமின்களே) உங்களுக்கு அல்லாஹ்வைத் தவிர பாதுகாப்பவனுமில்லை, உதவி செய்கிறவனுமில்லை.

இதற்கு முந்திய ஆயத்தில் "**நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்கள் மீதும் ஆற்றல் உள்ளவன்**" என்று கூறி இருப்பதற்கு இந்த ஆயத்தில் "வானங்களினுடையவும் பூமியினுடையவும் ஆட்சி அவனுக்குத்தான் இருக்கிறது" என்ற வாக்கியம் ஆதாரத்தைப் போலிருக்கிறது. அல்லாஹு தஆலாவுக்கு இம்மை மறுமை ஆகிய எல்லாவற்றின் மீதும் ஆட்சிகளிருக்க வானம் பூமி ஆகியவற்றை மட்டும் குறிப்பிட்டது ஏனென்றால் இவ்விரண்டும் சிருஷ்டியில் மிகப் பெரியவைகளாக இருப்பதனாலேயாகும்.

வலி என்பதற்கு பாதுகாப்பவன், தோழன் என்ற பொருள்களுண்டு. சகல காரியங்களையும் மேற்பார்க்கும் காரியஸ்தன் என்ற பொருளுமுண்டு, வலியாக இருப்பவன் உதவி செய்ய முடியாத நிலைமையிலும் சில சமயம் இருந்துவிட முடியும். ஆதலால், அந்தச் சந்தேகத்தை நிவர்த்திப்பதற்காக **நஸீர்** "உதவி செய்கிறவன்" என்றும் இறைவன் கூறியுள்ளான். உதவி செய்கிறவர்கள் அன்னியராக இருக்கவும் கூடும். ஆனால் அல்லாஹு தஆலா அப்படி அந்நியனாகவும் இல்லை என்பதற்காக "**வலி**" என்றும் கூறி இருக்கிறான். ஆகவே, அல்லாஹு தஆலா மூமின்களின் மனதைச் சாந்தப்படுத்தி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காக வலியாகவும் உதவியாளனாகவும் இருப்பதாக இரண்டையும் சேர்த்துக் கூறியுள்ளான். ஆகவே, அவனையன்றி மற்றவர்கள் மீது நம்பிக்கை வைப்பதும் ஊன்றுதல் செய்வதும் கூடாது என்பதும், அவனிடமின்றி மற்றவர்களிடம் கெஞ்சிக் கேட்பது சரியில்லை என்பதும் இதிலிருந்து தெரியவருகிறது. மேலும், உதவியாளனாகவும் வலியாகவும் இருப்பவனான அல்லாஹு தஆலா

மூமின்களுடைய இம்மை மறுமைக் காரியங்களில் நன்மையையே தவிர வேறு எதையும் செய்ய மாட்டான் என்பதும், நிராகரிப் பாளர்கள் கூறும் கூற்றுக்களுக்குச் செவிசாய்க்காமல் அவனிடத்தி லேயே எல்லா காரியங்களையும் ஒப்படைத்துவிட வேண்டுமென்பதும் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

أَمْ تُرِيدُونَ أَنْ تَسْأَلُوا رَسُولَكُمْ كَمَا سُئِلَ مُوسَىٰ مِنْ قَبْلُ ۗ وَمَنْ يَتَبَدَّلِ الْكُفْرَ بِالْإِيمَانِ فَقَدْ ضَلَّ سَوَاءَ السَّبِيلِ ۝

108. (யூதர்களே இதற்கு) முன்னர் மூஸா வினவப் பட்டது போல உங்களுடைய (இந்த) ரசூலை நீங்கள் வினவ விரும்புகிறீர்களோ? மேலும், எவன் ஈமானுக்குப் பதிலாக குஃப்ரை (நிராகரிப்பை) மாற்றிக் கொள்கிறானோ நிச்சயமாக அவன் நேரான பாதையை விட்டுத் தவறி விட்டான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தவ்ராத் வேதத்தை மொத்தமாகக் கொண்டு வந்ததுபோல நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் திருக்குர்ஆனை மொத்தமாகக் கொண்டுவர வேண்டும் என்று யூதர்கள் கூறியதாகவும் அதனைக் குறித்து இந்த ஆயத்து இறங்கியதாகவும் பெரும்பாலான விரிவுரையாளர்கள் கூறி இருக்கின்றனர். தவிரவும், இந்த ஆயத்து மதனிய்யாவாக இருப்பதால் இதுதான் மிகவும் சரியான சொல் என்பதாகவும் கூறி இருக்கிறார்கள். மக்கத்திலுள்ள இணைவைப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் மக்கமா நகரம் மிக நெருக்கமாக இருப்பதால் அதனை விசாலமானதாகவும், ஸஃபா மலையைப் பொன்னாகவும் ஆக்க வேண்டும் என்று கூறியதாகவும் அதற்கு மறுமொழியாக இந்த ஆயத்தை இறைவன் இறக்கினான் என்பதாகவும் சிலர் கூறி இருக்கிறார்கள்.

அதபை அதாவது ஒழுங்கைப் பேண வேண்டுமென்று சமிக்ஞையாக (இஷாரத்தன்) சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, எவர் தனது

மௌலாவாகிய அல்லாஹு தஆலாவிடத்திலும், அவனது ரசூலிடத்திலும், கலீஃபாக்களிடத்திலும் அதபை ஒழுக்கத்தைப் பேணவில்லையோ அவர் குப்ரின் (நிராகரிப்பின்) பால் சாா்ந்தவராகி விடுகிறார். நல்ல குணங்கள் ஒன்று சேர்ந்திருப்பதுதான் ஒழுக்கம் என்பதன் ஹக்கீகத்து.

ஹதீஸ்:- தந்தை பிள்ளைக்குச் செய்ய வேண்டிய கடமை என்னவெனில், அவனுடைய பெயரை அழகாக்க வேண்டும், அவனுக்குப் பால் குடிக்க வைப்பவரை அழகாக்க வேண்டும், அவனுடைய ஒழுக்கத்தை அழகாக்க வேண்டும். (அதாவது நல்ல பெயரிட்டு, நல்ல குலத்து பெண்ணிடம் பால் குடிக்கச் செய்து, ஒழுக்கத்தை நல்லவிதமாகப் பயிற்றுவிக்க வேண்டும்) ஏனெனில், கியாமத்து நாளில் அவன் (தந்தை) அவனை (பிள்ளையை)ப் பற்றிக் கேள்வி கேட்கப்படுவான். இன்னும் அவன் விஷயத்தில் குறைவு செய்வதைப் பற்றி(க் குற்றம்) பிடிக்கப்படுவான் என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அல்லாஹு தஆலாவிடம் மிகவும் நெருங்கிய அதபு எது? என்பதாக இமாம் இப்னு ஸீரீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு அவர் "அவனுடைய ருபூபிய்யத்தை அறிவதும், அவனுடைய வழிபாடுகளைக் கொண்டு அமல் செய்வதும், நலவான காரியங்கள் ஏற்படும் போது அவனை ஹம்து செய்(புகழ்)வதும், தீங்கான காரியங்கள் ஏற்படும் போது பொறுமையாக இருப்பதுமாகும்" என்று பதில் கூறினார்கள்.

புஸ்தானுல் ஆரிஃபீன் என்ற கிரந்தத்தில் ஈமான் ஐந்து கோட்டைகளுக்குள் இருக்கிறது. முதலாவது யக்கீன் (உறுதி), இரண்டாவது இக்லாஸ் (அந்தரங்க சுத்தி), மூன்றாவது ஃபர்லு (கடமை)களை நிறைவேற்றுதல், நான்காவது சுன்னத்துகளை நிறப்பமாக்குதல், ஐந்தாவது அதபை (ஒழுங்கை மரியாதையை)ப் பேணுதல் ஆகியவைகளாகும். எனவே, மனிதன் ஒழுக்கத்தைப் பேணி அதனை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் வரை ஷைத்தான் அவன் விஷயத்தில் பேராசை கொள்ள மாட்டான். ஆனால், மனிதன் அதனை விட்டு விடுவானாயின் ஷைத்தான் சுன்னத்துகளின் விஷயத்தில்

(அதாவது அவற்றைப் பரிபூரணமாக நிறைவேற்ற விடாமற் கெடுக்கும் விஷயத்தில்) ஆசைப்படுகிறான். அதற்குப் பிறகு ஃபர்லுகள், இக்லாஸ், யக்கீன் ஆகியவற்றில் ஒன்றன்பின் ஒன்றாகத் தலையிடுகிறான். ஆகவே, மனிதன் தனது சகல காரியங்களிலும் அதாவது உலு, தொழுகை, வியாபாரம், நட்பு முதலிய காரியங்களில் ஒழுக்கத்தைப் பேணுவது அவசியமாகும்.

அறிந்துகொள்:- ஷரீஅத்தானது சட்டங்களாகும். தரீகத்தானது ஒழுக்கங்களாகும். ஆகவே, மர்தூதாக (மதம் மாறிப் போனவர்கள் எல்லோரும் அதனைப் பேணாமலிருந்ததற்காகவே மர்தூதாக (மதம் மாற்ற)ப்பட்டிருக்கிறார்கள் என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

وَدَّ كَثِيرٌ مِّنْ أَهْلِ الْكِتَٰبِ لَوْ يَرُدُّونَكُم مِّنۢ بَعْدِ إِيمَٰنِكُمْ
كُفَّارًا حَسَدًا مِّنْ عِندِ أَنفُسِهِم مِّنۢ بَعْدِ مَا
تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ ۖ فَاعْفُوا وَاصْفَحُوا حَتَّىٰ يَأْتِيَ اللَّهُ
بِأَمْرِهِۦٓ ۗ إِنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

109. (முமின்களே!) வேதத்தையுடையவர்களிலிருந்து பெரும்பாலர் நீங்கள் ஈமான் கொண்டதற்குப்பின் உங்களை நிராகரிப்பாளர்களாக மாற்றிவிட ஆசைப்படுகிறார்கள். (ஏனெனில், முஹம்மதும் அவருடைய சொல்லும்) உண்மை (என்று) அவர்களுக்கு வெளியான பிறகு அவர்களுடைய மனங்களில் உள்ள பொறாமையின் காரணமாக (இவ்வாறு ஆசைப்படுகின்றனர்) கொண்டதற்காக. ஆகவே, (அவர்களைக் குற்றம் பிடியாமல்) விடுங்கள். இன்னும் அல்லாஹ் தன்னுடைய (வேதனை என்னும்) கட்டளையைக் கொண்டு வரும்வரை (அவர்களைப்) புறக்கணியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் ஆற்றல் உள்ளவனாயிருக்கிறான்.

ரிவாயத்து:- உஹதுப் போர் நடந்த பிறகு, பஹாஸுப்னு ஆஸுராவும், ஸைதுப்னு கைஸுமும், யூதர்களிலுள்ள ஒரு கூட்டத்தினரும் ஹுதைஃபத்துப்னுல் யமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அம்மாருப்னு யாஸிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களிடம் "நீங்கள் ஹக்கின் (உண்மையின்) மீது இருந்திருப்பீர்களாயின், நீங்கள் தோல்வியடைந்திருக்க மாட்டீர்கள். எனவே, எங்களுடைய மார்க்கத்தில் வந்து விடுங்கள். அது உங்களுக்கு நலவாகவும் சிறப்பாகவும் இருக்கும். நாங்கள் உங்களைப் பார்க்கினும் மார்க்கத்தில் அதிகம் நேர்வழி பெற்றவர்கள்" என்று கூறினார்கள். அதற்கு அம்மாருப்னு யாஸிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அந்த யூதர்களைப் பார்த்து வாக்குறுதியை முறிப்பது உங்கள் மார்க்கத்தில் எப்படி? என்று வினவினார். அதற்கு அவர்கள் "மிகக் கடுமையான குற்றம்" என்றார்கள். அப்பொழுது அவர் "நான் உயிருடனிருக்கும் வரை முஹம்மதுக்கு மாறு செய்வதில்லை என்று வாக்குறுதி அளித்திருக்கிறேன்" என்று அவர்களிடம் கூறினார். அதற்கு அவர்கள் "ஆமிர் நமது மார்க்கத்தை விட்டு மாறி விட்டார். அவர் திரும்பி வருவார் என்று நம்புவதற்கு இடமில்லை" என்று கூறி ஹுதைஃபத்துப்னுல் யமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைப் பார்த்து, "ஹுதைஃபா நீர் எப்படி? நீர் எங்களிடம் பைஅத்துச் செய்ய மாட்டீரா?" என்று வினவினார்கள். அதற்கு அவர் "நான் அல்லாஹ்வை றப்பாகவும், முஹம்மதை நபியாகவும், இஸ்லாமை மார்க்கமாகவும், குர்ஆனை இமாமாகவும், கஃபாவை கிப்லாவாகவும், மூமின்களைச் சகோதரர்களாகவும் பொருந்திக் கொண்டேன்" என்று பதில் கூறினார். அதற்கு அவர்கள், "மூஸாவுடைய இறைவன் மீது ஆணை! உங்களுடைய இருதயங்களில் முஹம்மதின் மீதுள்ள பிரியம் ஊட்டப்பட்டு விட்டது" என்று கூறினார்கள். பிறகு அவ்விரு ஸஹாபிகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து நடந்த விஷயத்தைக் கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீங்களிருவரும் நல்லது செய்தீர்கள். வெற்றி பெற்று விட்டீர்கள்" என்று கூறினார்கள். அப்போது இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்டது.

مِّنْ عِندِ أَنفُسِهِم **"தங்களுடைய மன இச்சையினால்"** என்ற வாக்கியத்திற்கு இரண்டு விதமான கருத்துகள் கொள்ளலாம். (மூமின்களாகிய) நீங்கள் ஈமான் கொண்டு வந்த பின்னர் நீங்கள்

முர்த்தத்துகளாகிவிட வேண்டும் என்றும் யூசர்கள் தங்களது மன இச்சையினால் நாடுகிறார்கள் என்றும் கருத்து வைக்கலாம். அவர்களுடைய உள்ளங்களிலிருந்து உண்டாகிற பொறாமையின் காரணமாக நீங்கள் ஈமான் கொண்டு வந்த பின்னர் நீங்கள் முர்த்தத்துகளாகிவிட வேண்டும் என்று அவர்கள் நாடுகிறார்கள் என்பதாகவும் கருத்து வைக்கலாம்.

அல்ஹக் உண்மை என்பதற்கு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் ரசூல், அவருடைய சொற்கள் உண்மையானவை. முஃஜிஸாத்துகளையும், தவ்ராத்தில் சொல்லப்பட்டுள்ள வர்ணிப்புகளையும் கொண்டு அவருடைய மார்க்கம் உண்மையானது என்பது கருத்து.

பாவம் செய்தவனை அதாவது குற்றம் செய்தவனை தண்டிக்காமல் விடுவதற்கு **அஃப்வு** என்று பெயர்.

அல்லாஹு தஆலா இந்த ஆயத்தில் கூறியுள்ளபடி அவர்களைக் குற்றம் பிடிக்காமல் புறக்கணித்து விடும்படி கூறி இருப்பது யூதர்கள் செய்யும் காரியங்களைப் பொருந்திக் கொண்டு இப்படி இருக்க வேண்டும் என்று அவன் கட்டளை யிட்டதல்ல. ஏனெனில், யூதர்கள் செய்யும் இக்காரியம் குஃப்ரானது. அல்லாஹுத் தஆலா குஃப்ரான காரியத்தைச் செய்யும்படி ஏவமாட்டான்.

وَأَقِيمُوا الصَّلَوٰةَ وَءَاتُوا الزَّكَوٰةَ ۚ وَمَا تُقَدِّمُوا لِأَنفُسِكُم مِّنْ
خَيْرٍ تَجِدُوهُ عِندَ اللَّهِ ۗ إِنَّ اللَّهَ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ ○

110. இன்னும் (முமின்களே!) நீங்கள் தொழுகையை (ச் சரிவர அந்தந்த நேரத்தில் ஃபர்லு ஷர்த்து முதலானவற்றைப் பேணி) நிலைநிறுத்துங்கள், இன்னும் ஜக்காத்தை (அதாவது மார்க்க வரியை)க் கொடுங்கள், இன்னும் உங்களுக்கு (தொழுகை ஸதக்கா முதலான) நன்மையிலிருந்து (எதையேனும்) முற்படுத்துவீர்களானால் அத(னுடைய பிரதிபலன்)னை அல்லாஹ்விடத்தில் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை அறிகிறான்.

இதற்கு முந்திய ஆயத்தில் அல்லாஹு தஆலா பொறுமையாக இருக்கும்படியும், யூதர்களைக் குற்றம் பிடிக்காமல் விட்டு விடும்படியும் கூறி அவர்களுக்குத் தண்டனை விதிப்பதைப் பற்றி “நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் ஆற்றல் உள்ளவன்” என்று கூறிவிட்டு இந்த ஆயத்தில் தொழுகையை நிலை நிறுத்தும்படியும் ஜக்காத்து கொடுக்கும்படியும் கூறி இருக்கிறான். இதிலிருந்து முஸ்லிம்கள் அல்லாஹு தஆலாவுக்கு கீழ்ப்படிந்து ஸாலிஹான அமல்களைச் செய்வதுடன் ஃபர்லு, வாஜிபு, சுன்னத்து முதலானவற்றை தவறாமல் செய்ய வேண்டும் என்று தெரிகிறது. இதனால்தான் இறைவன். وَمَا تُقَدِّمُوا لِأَنفُسِكُم مِّنْ خَيْرٍ **இன்னும் உங்களுக்கு நன்மையிலிருந்து (எதையேனும்) முற்படுத்துவீர் களாயின்** என்பதாக பொதுப்படக் கூறி இருக்கிறான். ஆகவே, நன்மையான சகல காரியங்களையும் இந்த ஆயத்து பொதிந்து கொண்டிருக்கிறது. எனினும், தொழுகையையும், ஜக்காத்தையும் மட்டும் இங்கு குறிப்பிட்டு விட்டு மற்றவைகளைக் குறிப்பிடாமல் விட்டது ஏனெனில், அவை இரண்டும் எவ்வளவு முக்கியமானவைகள் என்பதை உணர்த்துவதற்கேயாகும். ஏனெனில் தொழுகை உடல் சம்மந்தமான அமலாக இருக்கிறது. அல்லாஹு தஆலா நமக்குக் கொடுத்துள்ள அவயவங்கள் எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துவதாக இருக்கும் பொருட்டு தொழுகையை நிறைவேற்றும்படி நம்மை ஏவினான். இன்னும் ஜக்காத் கொடுப்பதில் பொருள் சம்மந்தமான வணக்கம் இருக்கிறது. இவ்வுலகில் செல்வந்தர்களுக்கு இறைவன் கொடுத்துள்ள இன்பங்களுக்கு அவர்கள் நன்றி செலுத்துவதற்காக ஜக்காத் கொடுக்கும்படி ஏற்படுத்தியுள்ளான்.

சொற்பமான அமல்களும் மிகுதமான அமல்களும் அவனுக்கு மறைந்திருக்கவில்லை என்பதை “பஸீர்” என்ற இப்பதம் அறிவிக்கிறது. தவிரவும், بِمَا تَعْمَلُونَ “**நீங்கள் செய்வதை**” என்று பொதுப்பட இறைவன் கூறி இருப்பதால் இது நல்ல அமல்களையும், கெட்ட அமல்களையும் பொதிந்து கொண்டிருக்கிறது. ஆதலின், இந்த ஆயத்து அவிழ்க்கை உண்டாக்குவதையும் பயங் காட்டுவதையும் பொதிந்திருக்கிறது. அதாவது, மிகுதமான நல்ல அமல்களுக்கு அவன்

நற்கூலி அளிப்பதுபோல் சொற்பமான நல்ல அமலுக்கும் நற்கூலி அளிப்பான். இதுபோலவே கெட்ட அமல்களிலும் சொற்பமானதற்கும் மிகுதமானவற்றிற்கும் வேதனை செய்வான் என்பதை அறிவிக்கிறது.

ரிவாயத்து:- ஒரு நாள் உமருப்னுல் கத்தாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஜன்னத்துல் பக்கீஉ என்ற கப்ருஸ்தான் பக்கமாகச் சென்ற போது கப்ருகளைப் பார்த்து "அஸ்ஸலாமு அலைக்கும் யா அஹ்லல் குபூர்" என்று கூறி "உங்கள் மனைவியர் திருமணம் செய்து கொள்ளப்பட்டார்கள். உங்கள் வீடுகளில் குடியிருக்கப்படுகிறது; உங்கள் சொத்துக்கள் பங்கு வைக்கப்பட்டு விட்டன" என்ற செய்தியைச் சொன்னார்கள். அதற்கு மறுமொழியாக "கத்தாபுடைய மகனே! நாங்கள் உலகிலிருக்கும் போது எங்களுக்காக நாங்கள் முற்படுத்தி வைத்தவைகளைப் பெற்றுக் கொண்டோம். நாங்கள் செலவு செய்ததற்கு லாபத்தைப் பெற்றுக் கொண்டோம். நாங்கள் இம்மையில் பிற்படுத்தி வைத்தவற்றில் நஷ்ட மடைந்தோம்" என்று மறுமொழியாக அசரீரி என்று சப்தம் கேட்டது.

ஹதீஸ்:- ஒரு அடியான் இறந்துவிட்டால் ஜனங்கள் அவனைக் குறித்து "அவன் தனது வாரிசுகளுக்கு எதை வைத்து விட்டுப் போனான்" என்று கூறுவார்கள். ஆனால், மலக்குகள் அவனைக் குறித்து "அவன் தனக்கு எதைக் கொண்டு வந்தான்" என்று கூறுவார்கள் என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

وَقَالُوا لَن يَدْخُلَ الْجَنَّةَ إِلَّا مَن كَانَ هُودًا أَوْ
نَصَارَىٰ ۗ تِلْكَ أَمَانِيُّهُمْ ۗ قُلْ هَاتُوا بُرْهَانَكُمْ إِن
كُنتُمْ صَادِقِينَ ۝

111. இன்னும் யூதர்களாக அல்லது கிறிஸ்தவராக இருந்தவர்களைத் தவிர (வேறு எவரும்) சுவர்க்கம் புகவே மாட்டார்கள் என்று (யூதர்களும் கிறிஸ்தவர்களும்) சொல்லுகிறார்கள். அது அவர்களுடைய (வீண்) எண்ணம். நீங்கள் (இதில்) உண்மையுள்ளவர் களாக இருந்தால் உங்களுடைய அத்தாட்சியைக் கொண்டு வாருங்கள் என்று (நபியே நீர் அவர்களுக்குச்) சொல்லும்.

இந்த ஆயத்து நஜ்ரானிலிருந்து வந்த வஃப்து (தூதுவக் கூட்டத்தினர்)களைப் பற்றி இறங்கிற்று. இதன் விபரமாவது:- நஜ்ரானிலிருந்த கிருஸ்துவர்களின் தூதுவக் கூட்டத்தினர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். அப்போது யூதர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து ஒன்று கூடினர். அப்பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் பொய்ப்பித்துக் கொண்டனர். அதாவது "யூதர்களைத் தவிர வேறு யாரும் சுவர்க்கம் புகமாட்டார்கள்" என்று நஜ்ரான் தேசத்துக் கிறிஸ்துவர்களிடம் கூறினர். அதற்கு அந்த கிறிஸ்துவர்கள் அந்த யூதர்களைப் பார்த்து "கிறிஸ்துவர்களைத் தவிர வேறு யாரும் சுவர்க்கம் புகமாட்டார்கள்" என்று கூறினர். ஆகவே, அல்லாஹு தஆலா வேதக்காரர்கள் கூறிக் கொண்டதை மேற் கண்டவாறு கூறி, அவர்கள் அப்படிக் கூறிக் கொண்டிருப்பது தவறான எண்ணம் என்பதை அறிவித்துள்ளான்.

ஹூதன் என்பது **ஹாயித்** என்பதற்குப் பன்மைச் சொல். அதாவது தவ்பாச் செய்தவர் என்பது பொருள். இது காளை மாட்டை வணங்கியதை விட்டுத் தவ்பாச் செய்தவர்களைக் குறித்துப் போற்றிப் புகழ்ந்து கூறப்பட்டிருக்க வேண்டும். பிறகு, அவர்களுடைய ஷரீஅத்து மாற்றப்பட்டபோது அந்தக் கூட்டத்தார்களுக்கு இடுகுறிப் பெயரைப் போல் (அலமைப் போல்) ஏற்பட்டிருக்கலாம் என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறி இருக்கின்றனர். இதனைப் பற்றி சூரத்துல் பக்கரா 62 ஆயத்தின் விரிவுரையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

நஸாரா என்பது நஸ்ரான் என்பதன் பன்மைச் சொல். இதனைப் பற்றி இதே சூரா 62வது ஆயத்தில் விவரித்திருப்பது காண்க.

بَلَىٰ مَنْ أَسْلَمَ وَجْهَهُ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهُ أَجْرُهُ
عِندَ رَبِّهِ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

112. மெய்தான் (நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பது போலில்லை) எவர் ஈமான் கொண்டவராக தன்னைக் (முற்றிலும்)

அல்லாஹ்வுக்காக கலப்பற்றதாக்குகிறாரோ அவருக்கு அவருடைய றப்பிடம் அவருடைய (அமலுக்குத்தக்க குறைவில்லாது) கூலியுண்டு. இன்னும், அவர்களுக்கு (யாதொரு) அச்சமுமில்லை. இன்னும் அவர்கள் (மறுமையில்) கவலைப்படவு மாட்டார்கள்.

சுவர்க்கம் புகவே மாட்டார்கள் என்று வேதக் காரர் மேற்கண்ட விதமாகக் கூறி இருப்பதில் இரண்டு விஷயங்கள் அடங்கியுள்ளன. 1. யூதர் அல்லது கிறிஸ்துவர்கள் சுவர்க்கம் புகுதல். 2. மற்றவர்கள் சுவர்க்கம் புகமுடியாது என்பது. இந்த இரண்டு விஷயத்தில் முதலாவது விஷயத்தை இதற்கு முந்திய ஆயத்தில் இறைவன் மறுத்துக் கூறி இருக்கிறான். இந்த ஆயத்தில் இரண்டாவது விஷயத்தை மறுத்துக் கூறி இருக்கிறான். ஆகவே, **பலா** மெய்தான் என்று இறைவன் கூறிய வார்த்தை அவர்களுடைய கூற்றிலுள்ள இரண்டாவது விஷயத்தை மறுத்து "மெய்தான் நீங்கள் அல்லாதவர்களும் சுவர்க்கம் புகுதுவார்கள்" என்ற கருத்துக்களைப் பொதிந்ததாக இருக்கிறது.

முஹ்ஸின் என்ற சொல்லுக்கு "ஈமான் கொண்டவர்" என்பதாக ஆயத்தில் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. இஹ்ஸான் என்பது என்ன என்பதைப் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீ அல்லாஹ்வைப் பார்ப்பது போல் (நினைத்து) அவனை வணங்க வேண்டும், நீ அவனைப் பார்க்காவிட்டாலும் நிச்சயமாக அவன் உன்னைப் பார்க்கிறான்" என்று விரிவுரை செய்திருக்கிறார்கள். இதுதான் "ஈமான்" என்பதற்கு ஹக்கீகத்தான அர்த்தம். இதனுடைய வெளிரங்கம்தான் இஹ்ஸான். இதனுடைய பாத்தினானது (உள்ரங்கம்) நஃபிலான வணக்கங்களை அதிகமாகச் செய்வதன் பலனாக ஏற்பட்ட குர்பத்திலிருந்து (நெருக்கத்திலிருந்து) ஏற்பட்ட மர்த்தபாவாகும் (அந்தஸ்தாகும்). அதாவது அவனுடைய பார்வையாகவும் செவியாகவும் நானாகி விட்டேன் என்று அல்லாஹு தஆலா கூறியதாக வந்திருக்கிறதின் மர்த்தபாவாக (அந்தஸ்தாக) அதாவது ஹக்குடைய தாத்தும் உஜூதும் அடியானுடைய ஸிஃபாத்து களுக்குக் கண்ணாடியாகவும், அவனுடைய அஹ்வால்களென்னும் நிலைமைகளுக்கு மல்ஹராகவும் ஆகிவிடுவதாகும்.

ஃபர்லான அமல்களினால் ஏற்படும் குர்பத்தானது **ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா** "அல்லாஹ் தன்னைப் புகழ்பவனுக்குச் செவிமடுக்கிறான்" என்று அவன் தனது அடியானின் நாவின் மூலமாகக் கூறி இருப்பதில் தெளிவாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதாவது அடியானுடைய ஸிஃபத்துகளும் அஹ்வால் (நிலைமை)களும் ஹக்குடைய தாத்துக்குக் கண்ணாடியாகவும், அவனுடைய உஜூதுக்கு மல்ஹராகவும் ஆகி விடுதலாகும். எனவே, நஃபிலான வணக்கங்களின் மூலமாக ஏற்படும் குர்பத்தைக் (நெருக்கத்தைக்) கவனிக்குமிடத்து லாஹிரும் (வெளிரங்கமும்) பார்க்கப்படுவதும், கண்ணுக்குப் புலப்படுவதும் அடியானாகவே இருக்கின்றது. ஃபர்லான வணக்கங்களின் மூலமாக ஏற்படும் குர்பத்தைக் (நெருக்கத்தை) கவனிக்குமிடத்து அவைகள் ஹக்காகவே இருக்கின்றன.

وَقَالَتِ الْيَهُودُ لَيْسَتِ النَّصٰرٰى عَلٰى شَيْءٍ ۖ وَّقَالَتِ
النَّصٰرٰى لَيْسَتِ الْيَهُودُ عَلٰى شَيْءٍ ۙ وَّهُمْ يَتْلُوْنَ الْكِتٰبَ ۗ
كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ مِثْلَ قَوْلِهِمْ ۚ فَاللّٰهُ
يَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ۝

113. இன்னும், கிறிஸ்தவர்கள் எ(ந்த மார்க்கத்)திலுமில்லை என்று யூதர்கள் சொன்னார்கள். இன்னும், யூதர்கள் எ(ந்த மார்க்கத்)திலுமில்லை யென்று கிறிஸ்தவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் (இரண்டு கூட்டத்தாரும்) வேதத்தைப் படிக்கிறார்கள். இவ்விதமே ஒன்றும் அறியாத (முஷ்ரிக்கான) வர்கள் அவர்களுடைய சொல்லைப் போல் கூறினார்கள். ஆகையால் அவர்கள் (இம்மையில்) தர்க்கித்துக் கொண்டிருந்ததில், நியாயத் தீர்ப்பு நாளில் அவர்களுக்கிடையில் அல்லாஹ் தீர்ப்புச் செய்வான்.

இதற்கு முந்தின 111, 112 வது ஆயத்துகளில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் தங்களையல்லாத மற்ற வர்க்கத்தார்

வழிதவறியவர்களென்று ஒவ்வொருவரும் பொதுவாகக் கூறிய விஷயம் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்தில் யூதர்கள் கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவர்கள் யூதர்களையும் வழி தவறியவர்களென்று குறிப்பாகக் கூறிக் கொள்வதை விவரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இவ்விருவர்க்கத்தாரும் ஒருவரை ஒருவர் கூறிக் கொள்வது போலவே விக்கிரகங்களை வணங்குபவர்களும்; வீணர்களும் இவர்களைப் போன்றவர்களுமான அறியாதவர்கள் (முஷ்ரிக்குகள்) ஒவ்வொருவரும் நேர்வழியிலில்லை என்று கூறுகிறார்கள் என்பதையும் விளக்கப் பட்டிருக்கிறது.

وَمَنْ أَظْلَمُ مِمَّنْ مَّنَعَ مَسٰجِدَ اللّٰهِ أَنْ يُّذْكَرَ فِيْهَا اسْمُهٗ
وَسَعٰى فِيْ خَرَابِهَا ۚ أُولٰٓئِكَ مَا كَانَ لَهُمْ أَنْ يَّدْخُلُوْهَآ
إِلَّا خَآئِفِيْنَ ۚ لَهُمْ فِي الدُّنْيَا خِزْيٌ وَّلَهُمْ فِي الْآخِرَةِ
عَذَابٌ عَظِيْمٌ ۝

114. இன்னும், அல்லாஹ்வுடைய 'மஸ்ஜிது'களில் அவனுடைய பெயர் சொல் (திக்ரு செய்)வதை விட்டு அவற்றை (மஸ்ஜிதுகளை) விலக்கி அவற்றை பாழாக்குவதில் முயற்சி செய்கிறானோ அவனைப் பார்க்கினும் அதிக அக்கிரமக்காரன் யார்? அ(ப்படிச் செய்கிற)வர்கள் பயந்த (தாழ்மையான)வர் களாகவே தவிர அவற்றில் நுழைவது அவர்களுக்கு ஆகுமானதல்ல. அவர்களுக்கு இவ்வுலகில் இழிவிருக்கிறது. இன்னும் மறுமையில் அவர்களுக்குக் கடுமையான வேதனையுமுண்டு.

கிறிஸ்துவர்களின் அரசனான தக்யூஸர் ரூமி என்பவன் பனீ இஸ்ராயீல்களுடன் யுத்தம் செய்து அவர்களை வென்று பலரை அடிமைப்படுத்தியதுடன் தவ்ராத் வேதத்தை எரித்து, பைத்துல் முகத்தஸையும் பாழாக்கி அதில் பன்றியை அறுத்து, அதில் குப்பை கூளங்களையும் போட்டு வைத்தான். ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் முஸ்லிம்கள் அதனைக் கட்டும்

வரை அது இவ்விதமாகவே பாழாய்க் கிடந்தது. உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கிஸ்ராவுடைய நாட்டைப் (பாரசீகத்தை) பிடித்து, அதில் அகப்பட்ட செல்வத்தைக் கொண்டு பைத்துல் முகத்தஸ் பள்ளியைப் புதுப்பித்துக் கட்டினார்கள். அதிலிருந்து அந்தப் பள்ளி முஸ்லிம்களின் கையிலிருந்தது. பிறகு, கிறிஸ்துவர்கள் கையில் நூற்றிச் சொச்ச வருடகாலமிருந்தது. அப்பால், ஹிஜ்ரீ 585ம் வருடத்தில் அய்யூப் குடும்பத்தைச் சேர்ந்த சுல்த்தான் ஸலாஹுத்தீன் என்பவர் அதனைப் பிடித்து கிறிஸ்துவர்களின் ஆதிக்கத்திலிருந்து அதனை விடுவித்தார். இதனைக் குறித்து இந்த ஆயத்து இறக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

தவிரவும், ஹுதைபிய்யா வருடத்தில் இணைவைப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கஃபாவுக்குச் செல்லவிடாமல் தடுத்ததைப் பற்றி இந்த ஆயத்து இறங்கிற்று என்றும் சொல்லப்படுகிறது.

இந்த ஆயத்து இறங்கியதற்குக் கூறப்பட்டுள்ள இரண்டு காரணங்களில் ஒன்றின்படி பைத்துல் முகத்தஸ் இடிக்கப்பட்டுப் பாழாக்கப்பட்ட விஷயம் தெளிவாகத் தெரிகிறது. மற்றொரு காரணத்தின்படி பார்க்கும்போது ஆயத்தில் சொல்லப்பட்ட மஸ்ஜிது மக்காவிலுள்ள கஃபா என்பதாகத் தெரிய வருகிறது. கஃபாவை இணைவைப்பாளர்கள் இடிக்க வில்லை, நாசமாக்கவுமில்லை. ஆனால் அங்கு சென்று இறைவனைத் தொழவும் அவற்றைச் செய்யவிடாமல் தடை செய்து விட்டால் அந்த மஸ்ஜிது கட்டப்பட்ட நோக்கம் தவறி விடுகிறது. ஆதலால், இப்படித் தடை செய்து அதனைப் பிரயோஜன மற்றதாக்கி விடுவது அதைப் பாழ்படுத்தியதற்கு ஒப்பாகவே இருக்கிறது. ஆதலால், ஆயத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் கஃபா என்னும் மஜ்ஜிதுல் ஹராமுக்கும் பொருத்தமானதாகவே இருக்கிறது. ஆகவே, ஆயத்தில் சொல்லப்பட்ட விஷயம் இவ்விரண்டு மஸ்ஜிதையும் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும், அவற்றைத் தெளிவாகச் சொல்ல வில்லை. ஏனெனில் எந்த மஸ்ஜிதை எவர் செய்தாலும் அவருக்கு இதே சட்டம்தான் என்பதை அறிவிப்பதற்காகவே

பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒருவர் ஒரு ஸாலிஹான மனிதரைத் தொந்தரவு செய்வாராயின் "ஸாலிஹான மனிதர்களைத் தொந்தரவு செய்பவரைப் பார்க்கினும் அநியாயக்காரர் யார் இருக்க முடியும்?" என்று பொதுவாகக் கூறுவது வழக்கம். இந்த வழக்கத்திற் கேற்ப இந்த ஆயத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- "ஒருவன் பைத்துல் முகத்தஸ் பள்ளியை நன்மையை நாடி ஜியாரத்துச் செய்வானாயின் ஆயிரம் ஷஹீது களுடைய நன்மையை அல்லாஹு தஆலா கொடுப்பான். இன்னும் அவனது உடலை நரகத்தை விட்டு ஹராமாக்கி விடுவான். இன்னும் ஒருவன் ஒரு ஆலிமைச் சிந்தித்தால் அவன் பைத்துல் முகத்தஸை ஜியாரத்துச் செய்தவனைப் போலாகிறான்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

தவிரவும் "மஸ்ஜிதுகளில் மிகவும் சங்கையான மஸ்ஜிது மஸ்ஜிதுல் ஹராமாகும் (கஃபாவாகும்). பிறகு மதீனாவிலுள்ள மஸ்ஜிது (நுபவி), பிறகு பைத்துல் முகத்தஸ், பிறகு ஜாமிஆ மஸ்ஜிதுகள், பிறகு மஹல்லாக்களிலுள்ள மஸ்ஜிதுகள், பிறகு பாதைகளிலுள்ள மஸ்ஜிதுகள், பிறகு வீடுகளிலுள்ள மஸ்ஜிதுகள்" என்பதாக குன்யா என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ ۚ فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ ۚ اِنَّ اللّٰهَ وَاسِعٌ عَلِيْمٌ ۝

115. மேலும், (சூரியன்) உதயமாகும் இடமும் மறையும் இடையும் அல்லாஹ்வுக்கே இருக்கின்றன. ஆகையால், நீங்கள் (அவனது ஏவல்படி தொழுகையில்) எங்கு முகத்தைத் திருப்புவீர் களானாலும் அங்கு அல்லாஹ்வின் முகமிருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் (எல்லா பொருட்களையும்) அடைய வளைந்தவன். (மனிதர் எவ்விடத்திலிருந்து தொழுதாலும், துஆக் கேட்டாலும் அவர்களுடைய நிய்யத்தை மிக) அறிந்தவன்.

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ **மேலும், (சூரியன்) உதயமாகும் இடமும் மறையும் இடமும் அல்லாஹ்வுக்கே இருக்கின்றன** என்ற இந்த வாக்கியத்தைக் கொண்டு பூமியினுடைய இரண்டு கோணங் களையும் நாடப்பட்டிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவிற்கு வந்தபோது பைத்துல் முகத்தஸுடைய திசையை நோக்கித் தொழுது வந்தார்கள். பின்னர், அந்த கிப்லாவை மாற்றி இறைவன் கஃபாவின் திசையை முன்னோக்கித் தொழும்படி கட்டளை யிட்டான். அதன் படி மூமின்கள் கஃபாவை கிப்லாவாக ஏற்படுத்தித் தொழுது வந்தார்கள். அதற்காக யூதர்கள் மூமின்களைக் குறித்து "இவர்களுக்கு ஒரு கிப்லா கிடையாது போலிருக்கிறது. ஒரு நாளைக்கு அங்கேயும் ஒரு நாளைக்கு இங்கேயும் திரும்புகிறார்கள்" என்று கூறிப் பழித்தார்கள். அப்பொழுது இந்த ஆயத்தை இறைவன் இறக்கினான்.

وَقَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا ۙ سُبْحٰنَهٗ ؕ بَلْ لَّهٗ مَا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ كُلٌّ لَّهٗ قٰنِتُوْنَ ۝

116. இன்னும் அல்லாஹ் (தனக்கு) சந்ததியை ஆக்கிக் கொண்டான் என்று அவர்கள் கூறுகிறார்கள், (அவர்கள் சொல்வதை விட்டு) அவன் தூயவன். அப்படியல்ல வானங்களிலும் பூமியிலும் இருப்பது அவனுக்கே உரியன. எல்லோரும் அவனுக்கு வழிப்பட்டவர்களா யிருக்கின்றனர்.

யூதர்கள் ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், கிறிஸ்தவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அல்லாஹ்வின் புதல்வர் என்றும் அறபியரிலுள்ள இணைவைப்பாளர்களிற் சிலர் மலக்குகளை அல்லாஹ்வின் பெண்மக்கள் என்றும் கூறினார்கள். இவர்களது இந்தக் கூறற்றை இறைவன் இந்த ஆயத்தில் கூறி மறுத்திருக்கிறான்.

مَا فِي السَّمٰوٰتِ وَ الْاَرْضِ வானங்களிலும் பூமியிலுமுள்ளது என்ற வார்த்தைகளுக்குள் ஹளரத் உஜைர், ஈஸா, மலக்குகள் (அலைஹிமுஸ்ஸலாம்) எல்லோரும் அடங்கி விட்டனர். ஆதலின், அவர்களில் எவரும் அவனுக்குப் பிள்ளையாக இருக்கத் தகுந்தவர் இல்லை என்பது இதிலிருந்து வெளியாகின்றது என்பதாக **வஸீத்** என்ற தஃப்ஸீரில் எழுதப்பட்டிருக்கிறது.

بَدِيْعُ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ ۚ وَاِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ ۝

117. வானங்களையும் பூமியையும் (மாதிரி பார்க்காமல்) நூதனமாகப் படைத்தவன். இன்னும், அவன் ஒரு காரியத்தை உண்டாக்க நாடுவானாகில் அவன் அதற்குச் சொல்வதெல்லாம் "குன்" (உண்டாகு) என்பதுதான் உடனே அது உண்டாகிவிடும்.

بَدِيْعُ **பதீஉ** என்பதற்கு முன்மாதிரி இல்லாமல் நூதனமாகச் சிருஷ்டிப்பவன் என்பது பொருள்.

அல்களாஉ என்பதற்கு **அல்அஹ்காமு** கட்டளையிடுதல், கற்பித்தல் என்பது அஸல் பொருள். ஆனால், ஒரு பொருளை உண்டாக்க வேண்டுமென்று அல்லாஹு தஆலா நாடுவதற்கும் இந்தச் சொல் உபயோகிக்கப்படுகிறது.

ஹதீஸ்:- "ஆதமுடைய மகன் என்னைப் பொய்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. என்றாலும் அவன் என்னைப் பொய்ப்பிக்கிறான். இன்னும் அவன் என்னை ஏசவேண்டிய தேவையில்லை. என்றாலும் அவன் என்னை ஏசுகிறான். அவன் ஏசுவதென்னவெனில் அவன் எனக்குப் பிள்ளையுண்டு என்று சொல்கிறான். அவன் என்னைப் பொய்ப்பிக்கிறான் என்பது என்னவெனில் அவன் இறந்தால் அவனைப் பழையபடி எழுப்ப என்னால் இயலாது என்கிறான். ஆகையால், நான் மனைவி மக்கள் வைத்துக் கொள்வதை விட்டு நான் என்னை தூய்மையாக்குகிறேன்" என்று அல்லாஹு தஆலா கூறுகிறான் என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَقَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ لَوْلَا يُكَلِّمُنَا اللّٰهُ اَوْ تَاْتِيْنَآ اٰيَةٌ ۗ كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ مِّثْلَ قَوْلِهِمْ ۗ تَشَابَهَتْ قُلُوْبُهُمْ ۗ قَدْ بَيَّنَّا الْاٰيٰتِ لِقَوْمٍ يُّوْقِنُوْنَ ۝

118. இன்னும், அறியாதவர்கள் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து நீர் ரஸூலென்பதைக் கண்காண) அல்லாஹ் எங்களுக்குச் சொல்ல வேண்டுமே அல்லது (நீர் உண்மையானவர் என்பதற்குரிய) அத்தாட்சியை (நாங்கள் கேட்டபடி) எங்களுக்கு நீர் கொண்டு வர வேண்டுமே என்று சொன்னார்கள். இவர்கள் கூறுவதுபோல்தான் இவர்களுக்கு முன்னுள்ள (காஃபிரான)வர்களும் இப்படிச் சொன்னார்கள். இவர்களுடைய இருதயங்கள் (அந்த நிராகரிப்பாளர்களுடைய இருதயங்களுக்கு) ஒத்திருக்கின்றன, (ஆதலின், நபியே நீர் அதனைப்பற்றிச் சலிக்க வேண்டாம்.) உறுதியுள்ள கூட்டத்தாருக்கு நாம் அத்தாட்சிகளை விபரித்திருக்கிறோம்.

اَلَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ "அறியாதவர்கள்" என்பதற்கு உண்மையை அறியாத அறபி இணைவைப்பாளர்கள் அல்லது அறியாதவர்களாக ஆகிவிட்ட வேதக்காரார்கள் என்பதாகும். வேதக்காரர்களை அறியாதவர்கள் என்று கூறியதற்குக் காரணம் அவர்கள் தங்களிடமுள்ள இல்மை (கல்வியை அறிவை)ப் பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பதனாலேயாகும். ஏனெனில், கல்வியைக் கொண்டு நாடப்பட்டது அந்தக் கல்வியின் படி நடப்பதேயாகும்.

مِّثْلَ قَوْلِهِمْ "இவர்கள் கூறுவதுபோல்" இவர்களுக்கு முன்னுள்ளவர்களும் கூறி இருக்கிறார்கள் என்பதற்கு விபரமாவது.

கிறிஸ்துவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் "உமது றப்பு எங்களுக்கு வானத்திலிருந்து மாயிதாவை இறக்கி வைக்கச் சக்தியுள்ளவனா?" என்று கூறினார்கள். யூதர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் "அல்லாஹ்வை எங்களுக்குப் பகிரங்கமாகக் காண்பித்துக் கொடும் என்றும், நாங்கள் ஒரேவிதமான உணவின் மீது பொறுமையாக இருக்க மாட்டோம்" என்றும் கூறினார்கள்.

تَشَابَهَتْ قُلُوبُهُمْ **இவர்களுடைய இருதயங்கள் (அந்த நிராகரிப்பாளர்களுடைய இருதயங்களுக்கு) ஒத்திருக்கின்றன** என்பதற்கு, இவர்களது இருதயங்களும் இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்பாளர்களின் இருதயங்களும் சத்தியத்தைப் பார்க்க முடியாத குருட்டுத் தன்மையிலும், வன்னெஞ்சத்திலும், முரண்டு செய்வதிலும் ஒன்று போலிருக்கின்றன என்பது கருத்து.

إِنَّا أَرْسَلْنَٰكَ بِٱلْحَقِّ بَشِيرًا وَنَذِيرًا ۖ وَلَا تُسْـَٔلُ عَنْ أَصْحَٰبِ ٱلْجَحِيمِ ﴿١١٩﴾

119. திட்டமாக நாம் உம்மை உண்மையைக் கொண்டு (ஈமான் கொண்டவர்களுக்கு சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்பவராகவும், (ஈமான் கொள்ளாதவருக்கு நரகத்தைக் கொண்டு) அச்சம் ஊட்டுபவராகவும் அனுப்பினோம். (ஆகையால் அந்த நிராகரிப்பாளர்கள் நிராகரிப்பில் இருப்பதால் உம்மீது எந்த குற்றமும் இல்லை) இன்னும் (அந்த) நரகவாதிகளைப்பற்றி நீர் (கேள்வி) கேட்கப்படவு மாட்டீர்.

பில்ஹக்கு (உண்மையைக் கொண்டு) என்பதற்கு ஆதாரங்கள் அத்தாட்சிகள் என்பது கருத்து. ஏனெனில், அத்தாட்சிகளும் ஆதாரங்களும் உண்மையை ஆதரிப்பதால் இவற்றிற்கு "உண்மை" என்று சொல்லப்பட்டது.

அல்ஜஹீம் என்பது அதிகச் சூடாகவுள்ள இடத்திற்குப் பெயராக இருந்தது. பிறகு இது நரகங்களில் ஒன்றுக்கும் பெயராக அமைந்திருக்கிறது.

அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையான நபிதான் ரஸூல்தான் என்பதற்குத் தக்க ஆதாரங்களுடன் அவரை நற்செய்தி சொல்பவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி இருக்கிறான். ஆகவே, அவர் உண்மையான ரஸூல் என்பது முஃஜிஸாத்துகளைக் கொண்டும் ஆதாரங்களைக் கொண்டும் வெளியாகி விட்டது. ஆதலின், அவர் நற்செய்தியைக் கொண்டும், அச்சம் ஊட்டுவதைக் கொண்டும், ஜனங்களிடம் பிரசாரம் செய்வதும் சன்மார்க்கத்தில் வரும்படி அவர்களை அழைப்பதும்தான் அவரது கடமை. அவரது தஃவத் என்னும் சன்மார்க்க அழைப்பை ஜனங்கள் ஒப்புக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும் என்று அவர்களை நிர்ப்பந்திப்பது அவரது கடமையல்ல. ஆதலின், நிராகரிப்பாளர்கள் தங்களது நிராகரிப்பிலும் முரண்டிலும் பிடிவாதமாக இருப்பதைப் பற்றி அவர் கேள்வி கேட்கப்படமாட்டார் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَلَن تَرْضَىٰ عَنكَ ٱلْيَهُودُ وَلَا ٱلنَّصَٰرَىٰ حَتَّىٰ تَتَّبِعَ مِلَّتَهُمْ ۗ قُلْ إِنَّ هُدَى ٱللَّهِ هُوَ ٱلْهُدَىٰ ۗ وَلَئِنِ ٱتَّبَعْتَ أَهْوَآءَهُم بَعْدَ ٱلَّذِى جَآءَكَ مِنَ ٱلْعِلْمِ ۙ مَا لَكَ مِنَ ٱللَّهِ مِن وَلِىٍّ وَلَا نَصِيرٍ ﴿١٢٠﴾

120. இன்னும், (நபியே) நீர் அவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றும்வரை யூதர்களும் கிறிஸ்தவர்களும் உம்மைப் பற்றித் திருப்தி கொள்ள மாட்டார்கள். (ஆதலின்) நிச்சயமாக அல்லாஹ்வின் நேர்வழிதான் (சரியான) நேர்வழியாகும் என்று நீர் (அவர்களுக்குக்) கூறிவிடும். மேலும், உமக்கு அறிவு வந்த பின்னரும் அவர்களுடைய (வீண்) ஆசைகளை (நபியே) நீர் பின்பற்றினால் உமக்கு

அல்லாஹ்வைத் தவிர (வேறு) காரியஸ்தனுமில்லை; உதவி செய்கிறவனுமில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யூதர்களைப் பின்பற்றினால்தான் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் திருப்தி கொள்வார்கள். இது போல கிறிஸ்துவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றினால்தான் அவர்கள் திருப்திப் படுவார்கள். அவ்வாறு செய்யாமலிருக்கும் போது அவர்கள் திருப்தியடைவார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்று இறைவன் இந்த ஆயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்ததுடன், அந்த வேதக்காரர்களின் நோக்கத்தையும் எடுத்துக்கூறி இருக்கிறான். எனவே, அவர்களது தீங்கான இந்த எண்ணத்தைப் பின்பற்றக் கூடாது என்பதையும் நமக்கு அறிவித்திருக்கிறான்.

இந்த ஆயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னோக்கிக் கூறப்பட்டிருந்தாலும் இதிலுள்ள விஷயம் முஸ்லிம்கள் அனைவருக்குந்தான் என்பதாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறி இருக்கிறார்கள்.

யூதர்களுடைய மார்க்கம் வேறாகவும், கிருஸ்துவர்களுடைய மார்க்கம் வேறாகவும் இருக்கும்போது **மில்லதஹும்** "அவர்களுடைய மார்க்கம்" என்று இறைவன் ஒருமையாகக் கூறி இருப்பது ஏனெனில் இரண்டு வகுப்பாரும் நிராகரிப்பைத்தான் பின்பற்றுகின்றனர். ஆகவே, நிராகரிப்பு என்ற விஷயத்தில் இரண்டு வகுப்பினரின் மார்க்கங்களும் ஒன்றுதான்.

ஹுதல்லாஹி (அல்லாஹ்வின் நேர்வழி) என்பது இஸ்லாம் மார்க்கம். **அல்ஹுதா** என்பதற்கு அல்லாஹ்வின்பால் சேர்த்து வைப்பது என்பது கருத்து. ஆகவே, "**நிச்சயமாக அல்லாஹ்வின் நேர்வழிதான் (சரியான) நேர்வழியாகும்**" என்பதற்கு "நிச்சயமாக இஸ்லாம் மார்க்கம்தான் அல்லாஹ்வின்பால் சேர்த்து வைக்கும்" என்பது கருத்து.

வழிகேட்டின் பால் அழைக்கும்படியான இச்சையினால் உண்டாகும்படியான அபிப்பிராயத்திற்கு "**ஹவா**" என்று பெயர். இந்த ஆயத்தில் ஹவா என்று ஒருமையாகச் சொல்லாமல் "**அஹ்வா**" என்று பன்மையாகச் சொல்லி இருப்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஹவா இருக்கிறது என்பதையும், ஒவ்வொருவருடைய ஹவாவுக்கும் முடிவு இல்லை என்பதையும் அறிவிப்பதற்காகவேயாகும்.

இல்மு என்பதற்கு கல்வி, அறிவு என்பது பொருளாக இருந்தாலும் இந்த இடத்தில் குர்ஆன் என்பது கருத்து.

وَلِيٍّ وَّلَا نَصِيْرٍ **வலிய்யுன் வலா நஸீர்** என்பதற்கு 107வது ஆயத்தில் விபரம் எழுதப்பட்டிருக்கிறது.

الَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَتْلُوْنَهٗ حَقَّ تِلَاوَتِهٖ ؕ اُولٰٓئِكَ يُؤْمِنُوْنَ بِهٖ ؕ وَمَنْ يَّكْفُرْ بِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ۟

121. எவர்களுக்கு நாம் வேதத்தைக் கொடுத்திருக்கிறோமோ அவர்கள் - (இன்னும்) அதனை அவர்கள் (மாற்றாமல்) உள்ளாலுள்ளபடி ஓதிக்கொண்டிருக்கிற நிலைமையில் அவர்கள்தான் அதை ஈமான் கொள்வார்கள். இன்னும் எவர்கள் அதனை நிராகரிக்கின்றார்களோ அவர்கள்தான் நஷ்டவாளர்கள்.

இந்த ஆயத்து அப்துல்லாஹிப்னுஸலாம், அவரது தோழர்கள் ஆகிய அஹ்ல கித்தாபுகளிலிருந்து ஈமான் கொண்டவர்களைக் குறித்து இறக்கப்பட்டது. வேதம் கொடுக்கப் பட்டவர்கள் என்று இவர்களை மட்டும் சொந்தப்படுத்திக் கூறி இருப்பது இவர்கள்தான் அந்த வேதத்தின்படி அமல் செய்தார்கள் என்பதனாலேயாகும். **கித்தாப்** என்பது இந்த இடத்தில் தவ்ராத் வேதத்தைக் குறிக்கிறது.

يَا بَنِي إِسْرَائِيلَ اذْكُرُوا نِعْمَتِيَ الَّتِي أَنْعَمْتُ
عَلَيْكُمْ وَأَنِّي فَضَّلْتُكُمْ عَلَى الْعَالَمِينَ ۝

122. இஸ்ராயீலின் சந்ததிகளே! உங்களுக்கு நான் அளித்திருக்கிற எனது பாக்கியத்தையும் இன்னும் நிச்சயமாக நான் உங்(கள் முன்னோர்)களை (அக்காலத்திலுள்ள) உலகத்தா (ர் அனைவ)ரைப் பார்க்கினும் மேன்மையாக்கி வைத்தேன் என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

இதற்கு முந்திய 40,47 வது ஆயத்துகளில் இதற்கு விரிவான குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. அங்கு கண்டு கொள்ளலாம்.

وَاتَّقُوا يَوْمًا لَا تَجْزِي نَفْسٌ عَنْ نَفْسٍ شَيْئًا وَلَا
يُقْبَلُ مِنْهَا عَدْلٌ وَلَا تَنْفَعُهَا شَفَاعَةٌ وَلَا هُمْ
يُنْصَرُونَ ۝

123. இன்னும், யாரும், எவருக்கும், எதற்கும் உதவாததும் அவருக்காக (எந்த வித) பரிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளப் படாததும், இன்னும் அவருக்குப் பரிந்து பேசல் பிரயோஜனப் படாததும். இன்னும் அவர்களுக்கு உதவி செய்யப்படாததுமான ஒரு நாளை பயந்து கொள்ளுங்கள்.

இதற்கு முந்திய 48வது ஆயத்தில் சொல்லப்பட்ட குறிப்புகளையும் கவனிக்கவும்,

ஹதீஸ்:- ஒருவருக்குத் தன் (மூமினான) சகோதரர்களில் இருந்து (இவ்வுலகத்தை) பொருட்களில் அல்லது அதல்லாததில் ஏதேனும் ஒரு அநீதி இருக்குமாயின் - அது தீனாராகவோ அல்லது திர்ஹமாகவோ ஆகுவதற்கு முன்னர் அவரிடத்தில் - இன்றைக்கே ஹலால் தேடிக் கொள்ள வேண்டும். அவருக்கு ஸாலிஹான அமல்களிருக்குமாயின் அவருடைய அநீதத்திற்குத் தக்க அளவு அவற்றிலிருந்து எடுக்கப்படும். அவருக்கு நன்மைகள் இல்லாதிருக்கும் பட்சத்தில் அநீதி செய்யப்பட்ட அவரது சகோதரரின் பாவங்களிலிருந்து அந்த அநீதியின் அளவிற்கு எடுக்கப்பட்டு அவைகள் அவர் மீது சுமத்தப்படும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். ஆதலின், ஆயத்தில் கூறப்பட்ட விஷயம்:- ஒருவர் செய்த குற்றத்திற்காக மற்றொருவர் குற்றம் பிடிக்கப்படமாட்டார் என்பதை, அறிவிக்கிறது. ஆனால், ஒருவருக்கு மற்றொருவர் கடமைப்பட்டிருப்பாராயின் கியாமத்து நாளில் கடமைப்பட்டவரிடமிருந்து அவரது விருப்பமில்லாமலேயே அவரது கடமைக்குத் தகுந்த அளவு பரிகாரம் வாங்கிக் கொடுக்கப்படும் என்ற விபரம் மேலே கண்ட ஹதீஸிலிருந்து நன்கு தெரியவருகிறது.

وَإِذِ ابْتَلَىٰ إِبْرَاهِيمَ رَبُّهُ بِكَلِمَاتٍ فَأَتَمَّهُنَّ قَالَ إِنِّي جَاعِلُكَ
لِلنَّاسِ إِمَامًا قَالَ وَمِنْ ذُرِّيَّتِي قَالَ لَا يَنَالُ عَهْدِي
الظَّالِمِينَ ۝

124. இன்னும் "இபுராஹீமை அவருடைய ரப்பு (சில) வார்த்தைகளைக் கொண்டு சோதித்த வேளையை (நினைத்துப் பாரும்). அவற்றை அவர் பூர்த்தி செய்து விட்டார். (அப்பொழுது அவரை நோக்கி இறைவன், இபுராஹீமே!) நிச்சயமாக நான் உன்னை ஜனங்களுக்கு இமாமாக ஆக்குபவனாயிருக்கிறேன் என்று கூறினான். (அதற்கு அவர்) இன்னும் எனது சந்ததியிலிருந்தும் (இமாம்களை உண்டாக்கு) என்று கூறினார். (அதற்கு அவன்) என்னுடைய (இந்த) வாக்குறுதி (உமது சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களைச் சாராது என்று கூறினான்.

இப்ராஹீம் என்ற இந்த வார்த்தை சுர்யானிப் பாஷையில் உள்ளது. சில சமயங்களில் சுர்யானிப் பஷைக்கும் அறபிப் பாஷைக்கு

மிடையில் வார்த்தையளவில் ஒற்றுமை அல்லது நெருங்கிய பொருத்தம் ஏற்பட்டு விடுவதும் உண்டு என்பதாகவும் இப்ராஹீம், என்ற பதம் அபுரஹீம் என்ற பதங்களுக்கு ஒத்ததாக இருக்கிறது (அதாவது கிருபையுள்ள தந்தை என்பது இவ்வறபிப் பதங்களின் பொருளாகும்) என்பதாகவும் இமாம் ஸுஹைலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள். ஏனெனில், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் குழந்தைகள் பால் அதிகம் கருணை இருந்து வந்தது. இதனால்தான் அவரும், அவரது மனைவி ஸாராவும் கியாமத்து நாள் வரை இவ்வுலகில் பிறந்து சிறு குழந்தைகளாகவே இறந்து விடுகிற மூமின்களின் குழந்தைகளை ஒப்புக் கொள்பவர்களாக பாத்தியக் காரர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறி இருக்கிறார்.

தவிர, இப்ராஹீம் என்பது அஸலில் இப்ரம் என்று இருந்தது. பின்னர் அவருடைய பெயரில் ஹா அதிகப்படுத்தப்பட்டது. சுர்யானிப் பாஷையில் ஹா என்ற அட்சரம் மரியாதைக்கும் கண்ணியப் படுத்துவதற்கும் உபயோகிக்கப்படுகின்றது என்பதாக **ததுகிரத்துல் மௌத்தா** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கலிமாத்துன் என்பது பன்மைச் சொல் **கலிமத்** என்பது இதன் ஒருமைச் சொல்லாகும். தனிப்பட்ட ஒரு அர்த்தத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வார்த்தைக்கு கலிமத் என்று பெயர். ஆகவே, கலிமாத் என்ற பதம் கோர்வையாக ஒன்று சேர்க்கப்பட்ட பல வார்த்தைகள் என்பதை அறிவிக்கிறது. என்றாலும், அவ்வார்த்தை களுக்குள்ள பல பொருள்களைப் பற்றியும் இப்படிக் கூறுவதுண்டு. ஆகவே, கலிமாத்து (வார்த்தைகள்) என்பது யாவை? அவற்றைக் கொண்டுள்ள கருத்து என்ன என்பதைப் பற்றி திருக்குர்ஆன் விரிவுரைகளில் அதிகம் எழுதப்பட்டிருக்கின்றது. இங்கு அவற்றில் ஒன்றைப் பற்றி மட்டும் விவரிப்போம். கலிமாத்து அதாவது வார்த்தைகள் என்றது 10 காரியங்களை அறிவிக்கின்றன. இவைகள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஷரீஅத்தில் கடமைகளாக இருந்தன. ஆனால் நமது ஷரீஅத்தில் சுன்னத்துகளாக இருக்கின்றன. இவற்றில் ஐந்து காரியங்கள் தலையில் சம்மந்தப் பட்டிருக்கின்றன. 1. வாய் கொப்பளித்தல், 2. நாசிக்கு நீர் செலுத்திச்

சுத்தஞ் செய்தல், 3. தலைமயிரை வகுந்து விடுதல், 4. மீசையை வெட்டுதல், 5. மிஸ்வாக்குச் செய்தல் ஆகியவைகளாகும். பாக்கியுள்ள ஐந்து காரியங்கள் உடலுடன் சம்மந்தப்பட்டவை. 1. கத்னாச் செய்து கொள்ளுதல், 2. தொப்புளுக்குக் கீழிலுள்ள ஆனத்து முடியைச் சிறைத்துக் கொள்ளுதல், 3. கம்முகட்டு மயிரைப் பிடுங்குதல், 4. நகம் வெட்டுதல், 5. தண்ணீரால் சுத்தம் செய்தல் அதாவது மலஜல உபாதைகளை கழித்தால் தண்ணீரால் கழுவிச் சுத்தம் செய்தல் ஆகியவைகளாகும்.

தலையைக் கோதி விடுதல் என்பது தலை மயிர்களை இரண்டாக வகுந்து பிரித்து விடுவதாகும். இணைவைப்பாளர்கள் தங்கள் தலை மயிர்களை இரண்டாகப் பிரித்து வகுந்து விட்டுக் கொண்டிருந்தார்கள். அஹ்லு கித்தாபுகளான வேதக்காரர்கள் தலை மயிரை வகுந்து விடாமல் அவர்களது ரோமங்களை நெற்றியின் மீது தொங்க விட்டுக் கொள்வர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (கதஇயான) சட்டம் வராத விஷயங்களில் வேதக்காரர்கள் செய்வது போல் செய்வதில் பிரியம் கொண்டிருந்தார்கள். பிறகு, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கி, தலை மயிரை வகுந்து விடும்படி ஏவினார்கள்.

அறிந்துகொள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில தடவைதான் தலையைச் சிறைத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால், பெரும்பாலும் தங்கள் தலை ரோமத்தை வகுந்து விடாமல் தொங்க விட்டுக் கொண்டிருந்தார்கள். தலை முடியை வகுந்து விடாமல் தொங்க விடுவது (இர்ஸால்) அவ்லியாக்களின் (ஹளரத் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களது சந்ததியினரின்) வழக்கமாக ஏற்பட்டு விட்டதால் நமது காலத்தில் மற்றவர்களும் அவ்விதமாகத் தொங்க விடுவதை மக்ரூஹ் என்று இமாம் கஜ்ஜாலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

திக்ரு:- ஒருவர் தனது புதல்வரை ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது சபையில் ஆஜர் படுத்தினார். அந்தப் பையனுடைய தலை ரோமத்தில் சில

சிறைக்கப்பட்டும் சில சிறைக்காமல் விடப்பட்டு மிருந்தன. அப்பொழுது அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அவனைக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டார்கள். ஆனால், அவன் தவ்பா இஸ்திக்பார் செய்ததால் அவனை மன்னித்து விட்டார்கள்.

அபூபக்கர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கொன்றுவிடும்படி ஏவிய இக்கட்டளை உண்மையாகவே கொன்றுவிட வேண்டுமென்றேவியதன்று; இம்மாதிரியான செய்கையைச் செய்பவர் கொல்லப்படுவதற்குத் தகுதியானவர் என்பதை விபரிப்பதற்காகவே யாகும் என்று ஹளரத்துஷ் ஷெய்குஷ்ஷஹீர் பாப்தாதா ஆபந்தி குத்திஸ ஸிர்ருஹு கூறி இருக்கிறார்கள். (இக்காலத்தில் கிராப் வைப்பவர்கள் இதனைக் கவனிக்க வேண்டும்).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு ஜும்ஆவின் தினத்திலும் ஜும்ஆத் தொழுகைக்கு முன் மீசையை வெட்டிக் கொண்டிருந்தார்கள். உதட்டின் ஓரம் தெரியும் படியும் புருவத்தின் அளவு இருக்கும்படியும் மீசையை வெட்ட வேண்டுமென இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள். மீசையின் இரண்டு தொங்கல்களிலுமுள்ள மயிரை வெட்டாமல் விட்டு வைப்பது குற்றமில்லை. ஏனெனில், இவை இரண்டும் வாய்க்குத் தடையாக இருக்கவுமாட்டா. உணவுகள் இவற்றில் ஒட்டிக் கொள்ளவுமாட்டா. தவிரவும், முஜாஹிதுகள் தாருல் ஹர்பில் நகத்தை வளர்ப்பது முஸ்தஹப்பாக இருப்பது போல மீசையை வளர்ப்பதும் முஸ்தஹப்பு. ஆனால் அவை இரண்டையும் அவர்கள் தாருல் இஸ்லாமில் வெட்டிக் கொண்டிருந்திருக்க வேண்டும். பகைவர்களது பார்வைக்குப் பயங்கரமாகத் தோன்றுவதற்காகவே இப்படி ஏற்படுத்தப்பட்டது. ஆனால், மீசையை வெட்டிக் கொள்வதுதான் சுன்னத்து. அதனை சிறைத்துக் கொள்வது பிதுஅத்து, "மீசையை வெட்டிக் கொள்ளுங்கள், தாடியை (வெட்டாமல்) விட்டுவையுங்கள்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. தாடியைச் சிறைப்பது ஹராம். பெண்கள் தங்கள் மயிரைச் சிறைத்துக் கொள்வது விலக்கப்பட்ட செயலாகும், ஆடவர்களுக்கு ஒப்பாகுவதாகவும், அழகை இல்லாமலாக்கிக் கொள்வதாகவும் இருப்பதுபோலவே, ஆடவர்கள்

தாடியைச் சிறைத்துக் கொள்வது விலக்கப்பட்ட செயலாகும், பெண்களுக்கு ஒப்பாகுவதாகவும், தங்களுடைய அழகைப் போக்கிக் கொள்வதாகவும் இருக்கிறது. தாடியில் ஒரு பிடிக்கு அதிகமாக இருப்பதை வெட்டி விடுவது குற்றமில்லை என்றும், நரைத்த மயிரைப் பிடுங்கி விடுதல் மக்ரூஹு என்றும் **நிஸாபுல் இஹ்திஸாப்** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கத்னா என்னும் விருத்தசேதனம் செய்தல்:- இது சுன்னத்து முஅக்கதா என்பதாக பெரும்பாலான உலமாக்கள் கூறி இருக்கிறார்கள். இன்னும் இது இஸ்லாம் மார்க்கத்தின் அடையாளங் களில் ஒன்றாகும். கத்னாச் செய்யப்பட்டதாகப் பிறக்கும் குழந்தை களைத் தவிர்த்து பாக்கியுள்ள எல்லா ஆடவர்களும் இதனைச் செய்து கொள்ள வேண்டும். இதனை விட்டுவிட முடியாது. ஹளரத் இப்ராஹீம் கலீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தவிரவுள்ள எல்லா நபிமார்களும் கத்னா என்னும் விருத்தசேதனம் செய்யப்பட்டவர் களாகவும், கொப்புள் அறுக்கப்பட்டவர்களாகவுமே பிறந்திருக்கிறார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கத்தூம் என்ற ஊரில் தாங்களாகவே கத்னாச் செய்து கொண்டார்கள். அப்போது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வயது 120 என்று சொல்லப்படுகிறது. 80வது வயதில் கத்னாச் செய்து கொண்டார்கள் என்றும் ஒரு ரிவாயத்திற் சொல்லப்படுகிறது.

குழந்தை பிறந்த 7வது நாளிலிருந்து 10 வயதுக்குள் கத்னாச் செய்து விடுவதுதான் முஸ்தஹப்பு என்றும், பருவ வயதை அடையும் வரை கத்னாச் செய்யாமல் இருப்பது மக்ரூஹு என்றும் ஹத்தாதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள். முதியோர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினால் அவர்களுக்கும் கத்னாச் செய்வது முஸ்தஹப்பு என்பதாக உலமாக்கள் கூறி இருக்கிறார்கள்.

முதியோர்களில் இஸ்லாத்தைத் தழுவுபவர்கள் கத்னாச் செய்ய வேண்டியதில்லை என்று மன்னிப்புக் கொடுக்கப்பட்டிருந்த தென்று ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

நகத்தை வெட்டுதல்:- “எவர் வெள்ளிக்கிழமை யன்று தனது நகங்களை வெட்டிக் கொள்கிறாரோ அடுத்த ஜும்ஆ வரைக்கும் இன்னும் 3 நாள் அதிகமாகவும் அல்லாஹு தஆலா அவரை பலாயகளை விட்டுக் காப்பாற்றுகிறான்” என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- “தரித்திரத்தையும், கண் வியாதியையும் விட்டு அச்சம் தீரவேண்டும் என்று எவர் நாடுகிறாரோ அவர் வியாழக் கிழமை யன்று அஸருக்குப் பிறகு தனது நகங்களை வெட்டிக் கொள்ள வேண்டும்” என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

கால் நகத்தை வெட்டுவதற்கு முதலில் கை நகங்களை வெட்டிக் கொள்ள வேண்டும் என்றும், கை நகங்களை வெட்டுவதிலும் வலது கை கலிமா விரல் முதலிலும் அப்புறம் நடுவிரல், அப்புறம் அதற்கடுத்த விரல், பிறகு சுண்டுவிரல், பிறகு பெருவிரல், பிறகு இடது கை சுண்டுவிரலில் ஆரம்பித்து வரிசைக் கிரமமாக இடது கைப் பெருவிரல், பிறகு வலது கால் சுண்டு விரலிலிருந்து இடது கால் சுண்டு விரல் வரையுள்ள நகங்களை வரிசைக் கிரமமாக வெட்டிக் கொள்வது முஸ்தஹப்பு என்றும் இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். இவ்விதமாகவே **இஹ்யா** என்னும் கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

قَالَ لَا يَنَالُ عَهْدِي الظّٰلِمِيْنَ **“என்னுடைய வாக்குறுதி அநியாயக் காரரைச் சாராது”** என்று இறைவன் கூறியதற்குக் காரணம் என்னவெனில் இமாமை ஏற்படுத்துவது அநியாயத்தை விலக்குவதற்காகவேயாகும். ஆகவே, அநியாயம் செய்பவரை இமாமாக ஆக்கினால் அநியாயத்தை நீக்க முடியாது. ஆகையால், அநியாயக்காரன் இமாமாக இருக்க முடியாது. தவிர, இந்த ஆயத்தில் இன்னொரு விஷயமும் தெரிய வருகிறது. அநியாயக்காரர் என்று அல்லாஹு தஆலா கூறி இருப்பது அநியாயத்தைச் செய்து கொண்டிருப்பவரைத்தான் சுட்டிக்காட்டுகிறது. இதற்கு முன் அநியாயம் செய்து கொண்டிருந்து பிறகு தவ்பாச் செய்து மீண்டவரை இந்த வார்த்தை சுட்டிக் காட்டவில்லை என்று பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَإِذْ جَعَلْنَا الْبَيْتَ مَثَابَةً لِّلنَّاسِ وَأَمْنًا
وَاتَّخِذُوا مِن مَّقَامِ إِبْرٰهِمَ مُصَلًّى وَعَهِدْنَآ
إِلٰٓى إِبْرٰهِمَ وَإِسْمٰعِيلَ أَن طَهِّرَا بَيْتِيَ لِلطَّآئِفِيْنَ
وَالْعٰكِفِيْنَ وَالرُّكَّعِ السُّجُوْدِ ۝

125. இன்னும், (கஃபா என்னும்) அவ்வீட்டை மனிதருக்கு மீளும் இடமாகவும் அச்சம் தீரும் இடமாகவும் நாம் ஆக்கிய வேளையை (நினைத்துப் பாரும்). இன்னும் (மனிதர்களே) இப்ராஹீம் நின்ற இடத்தைத் தொழுமிடமாக ஆக்கிக் கொள்ளுங்கள் (என்றுங் கூறினோம்). இன்னும் எனது வீட்டை தவாஃபு செய்வோருக்காகவும், இஃதிகாஃப் இருப்போருக்காகவும் ருக்கூஉ சுஜூது செய்வோ (ரகளான தொழுகையாள)ருக்காகவும் சுத்தம் செய்யுங்களென்று இப்ராஹீமுக்கும் இஸ்மாயீலுக்கும் நாம் கட்டளை யிட்டோம்.

மதாபத்தன்:- மீளும் இடம் என்பதற்கு ஒருமுறை ஹஜ்ஜுச் செய்தவர்கள் மீண்டும் மீண்டும் திரும்ப வந்து ஹஜ்ஜுச் செய்யும் படியான இடம், அல்லது ஒருவர் ஹஜ்ஜுச் செய்துவிட்டுப் போனால் வேறொருவர் வந்து ஹஜ்ஜுச் செய்யும் இடம், அதாவது ஒருவருக்குப் பின் ஒருவராக மீண்டும் மீண்டும் ஹஜ்ஜுச் செய்யும் இடம் என்பது கருத்து.

அம்னன் அச்சந்தீரும் இடம் என்பது ஹரமில் இருப்பவர்களுக்கு இணைவைப்பாளர்கள் இடைஞ்சல் செய்யமாட்டார்கள். ஆதலின் அந்த இடத்திற்கு இந்தப் பெயர் வந்தது. இந்த வீட்டை இணைவைப்பாளர்கள் பைத்துல்லாஹ் (அல்லாஹ்வின் வீடு) என்றும், அங்கு குடியிருப்பவரை அஹ்லுல்லாஹ் அதாவது அல்லாஹ்வின் வீட்டிலுள்ளவர்கள் என்றும் கூறிவந்தனர். தவிரவும், தன்னுடைய தந்தையைக் கொலை செய்தவன் ஹரமுக்குள் இருப்பதை ஒருவன்

பார்த்தால் அவன் அங்கு இருக்கும் வரை அவனிடம் அவன் எவ்விதத்திலும் குறுக்கிடமாட்டான். இவ்விதம் நடந்து கொள்வதை அவர்கள் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய மார்க்கத்திலிருந்து வாரிஸ் பாத்தியம் போல் பெற்றிருந்ததுடன், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலம் வரை இவ்விதமாகவே இருந்து வந்தார்கள். இதனால் இந்த இடத்திற்கு அச்சந்தீருமிடம் என்று பெயர் வந்ததாகவும் கொள்ளலாம். அல்லது இந்த வீட்டிற்கு வந்து ஹஜ்ஜுச் செய்தவர் மறுமையுடைய வேதனையை விட்டு அச்சந் தீர்ந்து விடுகிறார்கள். ஆதலால், இப்பெயர் வந்தது என்றுங் கொள்ளலாம்.

மகாமு இப்ராஹீம் இப்ராஹீம் நின்ற இடம் என்பதற்கு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது இரண்டு கால்களின் அடையாளம் இருக்கும் கல் என்றும், அல்லது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எந்த இடத்தில் நின்று கொண்டு ஜனங்களை ஹஜ்ஜுக்காக அழைத்தார்களோ அந்த இடம் என்றும் அல்லது பைத்துல்லாவின் அஸ்திவாரத்தை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயர்த்திக் கட்டிய போது நின்ற இடம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இக்காலத்தில் மக்காமே இப்ராஹீம் (இப்ராஹீம் நின்ற இடம்) என்று சொல்லப்படுகிற இடம் அந்தக் கல் இருந்த இடமே யாகும்.

ரிவாயத்து:- ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாஜராவையும், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் மக்காவில் குடியேற்றி விட்டுச் சென்ற பிறகு சில காலம் கழித்து ஜாஹம் கூட்டத்தாரிலுள்ள ஒரு பெண்ணை ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திருமணம் செய்திருந் தார்கள். பிறகு, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மக்கமாக நகருக்கு வந்தபோது தமது மனைவியான ஹாஜரா இறந்து போனதைத் தெரிந்து ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வீட்டிற்குச் சென்று அவரது மனைவியிடம் "உமது கணவன் எங்கே?" என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண் "அவர்

வேட்டைக்குப் போயிருக்கிறார்" என்று கூறினார். ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹரமுக்கு வெளியில் சென்று வேட்டையாடுவது வழக்கம். அப்பொழுது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "உம்மிடத்தில் ஏதேனும் விருந்திருக்கிறதா?" என்று வினவினார்கள். அதற்கு அப்பெண் "என்னிடத்தில் இல்லை" என்று கூறினார். பிறகு அவர்களுடைய குடும்ப நலன்களைப் பற்றி விசாரித்ததற்கு அந்தப் பெண் "நாங்கள் வறுமையிலும் கஷ்டத்திலுமிருக்கிறோம்" என்று முறையிட்டார். அப்பொழுது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அப்பெண்ணிடம் "உமது கணவர் வந்தால் எனது ஸலாம் சொல்லி, வாசற்படியை மாற்றிவிடும்படி கூறவேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

பிறகு, ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து, தமது தந்தை அவர்களது வாடையிருப்பதைக் கண்டு தனது மனைவியிடம், இங்கு வந்தது யார்? என்று வினவினார்கள். அதற்கு அப்பெண் "இன்ன வடிவமுள்ள ஒரு முதியவர் வந்தார்" என்று சொன்னார். பிறகு "அவர் என்ன கூறினார்?" என்று கேட்டதற்கு, அப்பெண் "உமக்கு ஸலாம் சொல்லி, வாசற்படியை மாற்றிவிடச் சொன்னார்" என்று கூறினார். உடனே, அவர் அப்பெண்ணைப் பார்த்து "வந்தவர் என் தந்தை, வாசற்படி என்றது நீதான். உன்னை விவாக ரத்துச் செய்துவிடவேண்டும் என்று கூறி இருக்கிறார். ஆதலின், நீ உன் உறவினர்களிடம் போய்ச் சேர்" என்று கூறி அந்தப் பெண்ணை விவாக ரத்துச் செய்து அனுப்பி விட்டார்கள்.

பிறகு, அந்தக் கிளையாரில் மற்றொரு பெண்ணை ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திருமணம் செய்தார்கள். அப்படி இருக்கும் போது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மற்றொரு முறை மகன் வீட்டிற்கு வந்து மருமகளிடம் "உன் கணவன் எங்கே" என்று கேட்டதற்கு "அவர் வேட்டைக்குப் போயிருக்கிறார். இன்ஷா அல்லாஹ் இப்பொழுது வந்து விடுவார் இறங்குங்கள். அல்லாஹு தஆலா உங்களுக்கு ரஹ்மத்துச்

செய்வான்'' என்று கூறினார். அப்பொழுது இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது மருமகளிடம் "உன்னிடம் விருந்து இருக்கிறதா?" என்று வினவினார்கள். அதற்கு அவர் "ஆம்" என்று கூறி பாலும் இறைச்சியும் கொண்டு வந்து கொடுத்தார்கள். பிறகு இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் உங்கள் நலன் என்ன? என்று விசாரித்ததற்கு நாங்கள் நலமுடன் இருக்கிறோம் என்று கூறினார். உடனே, இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவ்விருவருக்கும் பரக்கத்துக்காக துஆச் செய்தார்கள். பிறகு, அந்தப் பெண் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் பார்த்து "உங்களுக்கு ஸ்நானம் செய்விக்கிறேன், இறங்குங்கள்'' என்று சொன்னார்கள். ஆனால், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கவில்லை. ஆதலால், ஒரு கல் கொண்டு வந்து போட்டார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வாகனத்தில் இருந்து கொண்டே அக்கல்லில் காலை வைத்தார்கள். அந்தப் பெண் அவருடைய வலது புறத்தைக் கழுவினார். பிறகு, அந்தக் கல்லை இடது புறம் திருப்பிப் போட்டார்கள். அதில் காலை வைக்கவும் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய இடது புறத்தைக் கழுவினார்கள். ஆகவே, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது இரண்டு கால் தடமும் அந்தக் கல்லில் பதிந்து விட்டது. அப்பொழுது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மருமகளைப் பார்த்து "உன் கணவன் வந்தால் அவருக்கு என் ஸலாம் சொல்லி, உமது வாசற்படி நேராயிருக்கிறது என்று சொல்ல வேண்டும்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள்.

ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திரும்ப வந்தபோது தமது தந்தையுடைய வாடையை அறிந்து "இங்கு வந்தது யார்?'' என்று வினவினார். அதற்கு அப்பெண் வடிவான மணமுள்ள ஒரு வயோதிகர் வந்தார். அவருக்கு ஸ்நானம் செய்வித்து உபசாரம் செய்தேன். அவருடைய கால் தடத்தின் அடையாளம் இதோ இருக்கிறது. அவர் இன்னின்ன மாதிரி கூறினார் என்று சொன்னார். அப்பொழுது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மனைவியைப் பார்த்து 'அவர் என் தந்தை. வாசற்படி என்பது நீதான். உன்னை பத்திரமாய் வைத்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறார்' என்று கூறினார்.

பிறகு, ஒருமுறை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திருமக்காவிற்கு வந்து தமது புதல்வர் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டு "மகனே! இறைவன் என்னை ஒரு காரியம் செய்யச் சொல்லி இருக்கிறான். அதில் நீர் எனக்கு உதவியாயிருப்பீரா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் "நல்லது'' என்று கூறினார். அப்பொழுது "இறைவன் இவ்விடத்தில் ஒரு வீடு எடுக்கச் சொல்லி இருக்கிறான்'' என்று கூறினார்கள். ஆகவே இருவரும் அந்த வீட்டின் அஸ்திவாரத்தை உயர்த்திக் கட்டினார்கள். ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கல்லெடுத்துக் கொண்டு வந்து கொடுப்பதும், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கட்டிடத்தைக் கட்டுவதுமாக இருந்தார்கள். பிறகு, அந்தக் கட்டிடம் உயர்ந்த போது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏறி நின்று கொள்வதற்காக, முன்னர் கால் வைத்து கழுவிய மேற்படி கல்லையே கால் வைப்பதற்குக் கொண்டு வந்து போடப்பட்டது. அதில் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நின்று கொண்டு கஃபாவைக் கட்டி முடித்தார்கள். இந்தக் கல்லுக்குத்தான் "மக்காமே இப்ராஹீம்'' (இப்ராஹீம் நின்ற இடம்) என்று சொல்லப்பட்டது.

குறிப்பு:- மக்காமே இப்ராஹீம் அக்காலத்தில் கஃபாவின் சுவற்றின் அருகே, அதனுடன் சேர்ந்தாற்போல் இருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலுங் கூட அதே இடத்தில்தான் இருந்தது. அதன் பின்னர் ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பெருமழையில் வந்த வெள்ளம் அக்கல்லை அந்த இடத்தை விட்டு கிழக்குப் பக்கத்தில் முப்பது அல்லது நாற்பது அடிக்கு அப்பால் தள்ளிவிட்டது. இக்கல் புனிதமான நினைவுச் சின்னம். ஆதலால் அக்காலத்தில் மக்காவில் கவர்னராக இருந்தவர் அக்கல்லை அது கிடக்கிற இடத்திலேயே விட்டு விட்டு ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு செய்தி அனுப்பினார். ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு மதீனாவிலிருந்து மக்காவுக்கு பார்வையிட்டு அக்கல்லை அப்படியே வைத்து விடுமாறு கட்டளையிட்டார்கள். அக்கட்டளைக்கேற்ப இன்றும்கூட அந்தக் கல்லைத்தான் மக்காமு இப்ராஹீம் என்று மக்கள் கூறி, அதனைச் சுற்றிலும் பக்கத்தில் நின்று தொழுது இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றனர். கஃபாவின் வாசல்படிக்கும், பாபு பனீ ஷைபா என்ற கமான் வளைவுக்குமிடையில் சற்று வடக்கே தள்ளி ஒரு சிறு

கூண்டுக்குள் அனைவரும் பார்ப்பதற்குத் தக்கவாறு அக்கல் இருந்து வருகிறது. ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் கஃபாவின் வாசல்படிக்கு வடக்கே சுவரின் அருகே ஒரு பள்ளம் இருந்து வருகிறது. ஹஜ்ஜுக்குச் செல்வோர் அந்தப் பள்ளத்திற்கருகே தொழுதும் வருகிறார்கள். மௌலானா அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட தஜ்ரீதுல் ஜாமிஇஸ் ஸஹீஹில் புகாரீ ஹதீஸ் எண் 1375ன் விரிவுரையிலிருந்து.

عَهِدْنَآ **அஹித்னா** அறுதிமானம் செய்தோம் என்பதற்கு கட்டளை இட்டோம் என்பது பொருள். ஏனெனில், அஹ்து என்பது கட்டளையிடுதல் வஸிய்யத்துச் செய்தல் என்ற அர்த்தத்திலும் சில சமயம் சொல்லப்படுவதுண்டு.

لِلطَّآئِفِينَ **அத்தாயிஃபீன** என்பதற்கு அவ்வீட்டைச் சுற்றிலும் ஜியாரத்துச் செய்பவர்கள் என்பது பொருள். அதாவது அவ்வீட்டைச் சுற்றிலும் வலம் வருபவர்கள் என்பது இதன் கருத்து.

الْعٰكِفِيْنَ **அல்ஆகிஃபீன** என்பது அவ்வீட்டின் அருகில் குடியிருப்பவர்கள் என்பது கருத்து. இந்தப் பதம் ஹரம் ஷரீஃபில் குடியிருப்பவர்களையும், தவாஃபு செய்பவர்கள் என்ற பதம் வெளியிலிருந்து வந்து ஜியாரத்துச் செய்து திரும்பிச் செல்பவர் களையும் சுட்டிக் காண்பிக்கிறது.

وَالرُّكَّعِ السُّجُوْدِ **ருக்கூவு ஸுஜூது செய்பவர்கள்** என்பதற்கு தொழுபவர்கள் என்பதாகும். ஏனெனில் கஃபாவைப் பார்த்துக் கொண்டு மஸ்ஜிதுல் ஹராமில் உட்கார்ந்திருப்பது கூட வணக்கங்களில் சேர்ந்ததாக இருக்கிறது. ஆதலின், ருக்கூஉ, ஸுஜூது செய்வது தொழுகையின் ருக்குனுகளாக இருப்பதால் இந்த இடத்தில் அவ்விரண்டையும் என்பதற்கு தொழுபவர்கள் என்பது கருத்தாகும்.

ஹதீஸ்:- “நிச்சயமாக ஒவ்வொரு நாளும் அல்லாஹு தஆலாவிடமிருந்து 120 ரஹ்மத்துகள் இந்த பைத்துல்லாவில் இறங்குகின்றன. அவற்றில் அறுபது தவாஃபு செய்பவர்களுக்கும், நாற்பது தொழுபவர்களுக்கும், இருபது அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் இறங்குகின்றன” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அறிந்துகொள்:- என்னுடைய வீடு என்று அல்லாஹு தஆலா கூறி இருப்பதற்கு ஹக்கீக்கத்தில் கல்பு (இருதயம்) என்னும் வீடு என்றும், அதனைச் சுத்தம் செய்ய வேண்டும் என்று கட்டளை யிட்டதற்கு அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ள வேறொன்றின் பால் மனத்தைத் திருப்பாதிருத்தல் என்றும் ஞானவான்கள் கூறி இருக்கிறார்கள். ஏனெனில், அந்தக் கல்புதான் அல்லாஹு தஆலாவுக்கு மன்லராக (பார்க்குமிடமாக) இருக்கிறது. ஆகவே, அதனைச் சுத்தம் செய்வது அவசியமாகும். அப்படிச் சுத்தமாக இருந்தால்தான் அல்லாஹு தஆலாவுடைய பிரகாசங்கள் என்னும் அன்வார்களும், அஸ்ராருர் ரஹ்மானிய்யா வென்னும் தெய்வ இரகசியங்களும் அதில் தரிபட்டிருக்கும். இன்னும் மனச்சாந்தி என்னும் (அமைதியும்) ஸக்கீனாவும் இறங்கும். அடியான் இந்த அந்தஸ்துக்கு வந்துவிட்டால் அவன் தனது றப்புக்கு ஹக்கீகத்துப்படி சுஜூது செய்தவனாகவும் ருக்கூஉ செய்தவனாகவும் ஆகிவிடுகிறான். இன்னும் அவனது ஸிர்ரென்னும் இரகசியத்தைக் கொண்டு அவனுடன் பேசுபவனாகவும் (முனாஜாத்துச் செய்பவனாகவும்) ஆகிவிடுகிறான்.

وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اجْعَلْ هٰذَا بَلَدًا اٰمِنًا وَّارْزُقْ
اَهْلَهٗ مِنَ الثَّمَرٰتِ مَنْ اٰمَنَ مِنْهُمْ بِاللّٰهِ وَالْيَوْمِ
الْاٰخِرِ ۗ قَالَ وَمَنْ كَفَرَ فَاُمَتِّعُهٗ قَلِيْلًا ثُمَّ اَضْطَرُّهٗۤ
اِلٰى عَذَابِ النَّارِ ۗ وَبِئْسَ الْمَصِيْرُ ۝

126. இன்னும், எனது றப்பே! இந்த ஹரமதை அச்சந் தீர்ந்த நகரமாக ஆக்குவாயாக, இன்னும் இதிலுள்ள வர்களுக்கு, (அதாவது) அவர்களில் அல்லாஹ்வையும் கடைசி நாளையும் கொண்டு ஈமான் கொண்டவர்களுக்குக் கனி (வர்க்கங்)களை அளிப்பாயாக! என்று இப்ராஹீம் (பிரார்த்தித்துச்) சொன்னபோது, “இன்னும் எவர் நிராகரிப்பவராக இருக்கின்றாரோ அவருக்கும் கொஞ்சத்தை நான்

அனுபவிக்கச் செய்வது பின்னர், அவரை (நரக) நெருப்பின் வேதனையின் பால் இழுத்திடுவேன். இன்னும் அது சேருமிடத்தில் (மிகவும்) கெட்டது" என்று கூறினான்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்த துஆவை தமது மனைவியான ஹாஜராவையும், புதல்வரான ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் மக்கமா நகரம் இருந்த இடத்தில் குடியேற்றிய போது கேட்டார்கள். இதன் முழு விபரம் சூரத்து இப்ராஹீம் 35,36,37 ஆயத்துகளிலும் அதன் விரிவுரை களிலும் விபரிக்கப்பட்டுள்ளது.

பலதன் ஆமினன் அச்சந்தீர்ந்த நகரம் என்பதன் கருத்து. இதிலுள்ளவர்கள் அச்சந் தீர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும். அல்லாஹு தஆலா ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் துஆவை ஏற்று அதனை ஹராமாக ஆக்கினான்.

தமராத்துன் என்பது பன்மைச் சொல். **தம்ரத்துன்** என்பது இதன் ஒருமைச் சொல்லாகும். பூமியிலிருந்தும் மரத்திலிருந்தும் உண்டாகும் உணவுப் பொருள்களுக்கு **தமராத்து** என்று பெயர். ஆகவே, தமராத்தை அதாவது கனி வர்க்கங்களை அளிப்பாயாக என்று கேட்ட துஆவில் பழ வர்க்கங்களையும் உணவையும் அளிப்பாயாக என்று துஆக் கேட்டார்கள் என்பது கருத்து. பழவர்க்கங்களை மட்டும்தான் கேட்டார்கள் என்பதாகவும் சொல்லப்படுகிறது. பழத்தை மட்டும் குறிப்பாகக் கேட்டதற்குக் காரணம் என்னவெனில் உணவு எல்லா இடத்திலும் கிடைக்கும். ஆனால், பழ வர்க்கங்கள் எல்லா இடத்திலும் கிடைக்கக் கூடியனவாக இல்லை என்பதற்காகவேயாகும். இந்த துஆவின்படி மக்கமா நகரில் எல்லாக் காலங்களிலும் கனிவர்க்கங்கள் அபரிமிதமாகக் கிடைக்கின்றன.

مَنْ آمَنَ مِنْهُمْ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ **அவர்களில் அல்லாஹ்வையும் கடைசி நாளையும் ஈமான் கொண்டவருக்கு நீ கனி வர்க்கங்களை அளிப்பாயாக** என்பதாக ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆக் கேட்டதில் மூமின்களுக்கு மட்டும்தான் கேட்டார்கள்

என்பது கருத்து. அவர்கள் இப்படி துஆக் கேட்டது இமாமத்துடைய பதவியைப் பற்றி இறைவனிடம் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கேட்ட போது "என்னுடைய வாக்குறுதி அநியாயக் காரர்களைச் சேராது" என்று அவன் கூறிவிட்டதை உத்தேசித்தே யாகும். அதற்கு "இறைவன் இன்னும் நிராகரிப்போருக்கும் மூமின் களுக்கும் அளிப்பேன்" என்று கூறி ரிஸ்குக் கொடுப்பது இவ்வுலகில் ரஹ்மத்தாக இருக்கிறது. இதில் மூமின் காஃபிர் என்ற வித்தியாசம் பாராட்டுவதில்லை என்பதை இறைவன் சமிக்ஞையாக அறிவித்து உள்ளான்.

وَإِذْ يَرْفَعُ إِبْرَٰهِۦمُ ٱلْقَوَاعِدَ مِنَ ٱلْبَيْتِ
وَإِسْمَٰعِيلُ رَبَّنَا تَقَبَّلْ مِنَّآ ۖ إِنَّكَ أَنتَ
ٱلسَّمِيعُ ٱلْعَلِيمُ

127. இன்னும், இப்ராஹீமும் இஸ்மாயீலும் பைத்து(ல்லா) விலிருந்து அஸ்திவாரத்தை உயர்த்திய (க் கட்டிய) போது (சொன்னதாவது), எங்கள் றப்பே! எங்களிலிருந்து (இந்த வேலையை) ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ (எல்லாச் சொல்லையும்) கேட்கிறவனாக(வும், எல்லாச் செய்கைகளையும்) பார்க்கிறவனாக(வும்) இருக்கின்றாய்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு முறையே இஸ்மாயீல், இஸ்ஹாக், மத்யன், மதாயின் என்ற பெயர்கள் இருந்தன. இந்த ஆயத்தில் இந்நால்வரில் ஒருவருடைய பெயர் மட்டும்தான் கூறப்பட்டிருக்கிறது. அதிலும் அவருடைய பெயரை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய பெயருடன் சேர்த்துக் கூறாமல் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின், பைத்துல்லாவை உயர்த்திக் கட்டும்படி இறைவன் இட்ட இந்தக் கட்டளை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மட்டும்தான் என்றும், அவருடைய

புதல்வர் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் துணையாகத்தான் இருந்தார்கள் என்றும் தெரியவருகிறது என்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கல் எடுத்துக் கொடுக்கும் வேலையைச் செய்தார்கள் என்றும், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கட்டிடத்தைக் கட்டும் வேலையைச் செய்தார்கள் என்றும், இதனால்தான் இருவருடைய பெயரையும் ஒன்றாகச் சேர்க்காமல் வெவ்வேறாகப் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

அறிந்துகொள்:- அஸ்திவாரத்தை உயர்த்திக் கட்டியதாக ஆயத்தில் சொல்லப்பட்டிருப்பதால் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு முன்பே பைத்துல்லா அஸ்திபாரமிடப் பட்டிருந்ததாகவும், அந்த அஸ்திவாரத்திலிருந்தே ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கட்டிடத்தை உயர்த்திக் கட்டியதாகவும் தெரியவருகிறது. அப்படியானால், அந்த பைத்துல்லாவை முதல் முதலாகக் கட்டியது அல்லது அஸ்திவாரமிட்டது யார் என்பதில் உலமாக்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறது. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் முதல் முதலாக கட்டினார்கள் என்றும், மலக்குகள் கட்டினார்களென்றும் பலவாறாக ரிவாயத்துகள் செய்யப்பட்டிருக்கின்றன.

رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَمِن ذُرِّيَّتِنَا
أُمَّةً مُّسْلِمَةً لَّكَ وَأَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ
عَلَيْنَا ۖ إِنَّكَ أَنتَ التَّوَّابُ الرَّحِيمُ

128. எங்களுடைய றப்பே! இன்னும் எங்களிருவரையும் உனக்கு கீழ்ப்படிந்தவர்களாக ஆக்குவாயாக! இன்னும் எங்கள் சந்ததியிலிருந்தும் உனக்கு கீழ்ப்படிந்த ஒரு கூட்டத்தை

ஆக்குவாயாக. இன்னும் எங்களது மனாஸிக்குகளை எங்களுக்குக் காண்பிப்பாயாக! இன்னும் எங்கள் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ தான் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாக(வும்) கிருபை செய்கிறவனாக (வும்) இருக்கின்றான்.

முஸ்லிமைனிலக என்ற இந்தச் சொல் "இஸ்லாம்" என்ற சொல்லிலிருந்து பிறந்தது. இஸ்லாம் என்ற சொல் அறபி இலக்கணப்படி ஜார்ருடைய லாமைக் கொண்டு சேர்க்கப்படுமாயின் அதற்கு வழிப்படுதல், கீழ்ப்படிதல் விதியை பொருந்திக் கொள்ளல் ஆகிய பொருள்கள் கொண்டுவரும். மேலே, ஆயத்தில் வந்த **முஸ்லிமைனி** என்ற பதம் **லக** என்ற பதத்துடன் மேற்கண்ட இலக்கணச் சட்டப்படி சேர்க்கப் பட்டிருப்பதால் உனக்கு கீழ்ப்படிந்தவர் களாக என்று பொருள் செய்யப்பட்டது. தவிரவும் முஸ்லிம் என்ற பதத்திற்கு இந்த இடத்தில் (முக்லிஸ்) அந்தரங்க சுத்தியானவர் என்றும் கொள்ளலாம். அதாவது கீழ்ப்படிதல், நா, அவயவங்கள் முதலியவற்றைக் கொண்டு மரியாதை செய்தல் ஆகியவற்றின் மூலமாகத் தன்னையும் தனது தாத்தையும் அல்லாஹு தஆலாவுக்குக் கலப்பற்றதாக ஏற்படுத்தி விடுவது என்பது கருத்து. எனவே, முஸ்லிமுடைய செய்கைகளும் அவனது ஸ்தூலமும், தன்மைகளும் சிருஷ்டிப்படியும் உரிமைப்படியும் அல்லாஹு தஆலாவுக்கு மட்டுமே கலப்பற்ற விதமாகச் சொந்தமாக்கப்பட்டு விடுகின்றன. அவனைத் தவிர வேறு யாருக்கும் இதில் சம்மந்தமே இல்லை என்றும் அவன் நம்ப வேண்டும்.

தவிர, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவரும் இந்த துஆவை செய்யும்போது அவனுக்கே கீழ்ப்படிந்தவர்களாகவும் இதய சுத்தியுள்ளவர்களாகவும் இருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. அப்படி இருக்க அவர்கள் இம்மாதிரி துஆ செய்தது எதற்காக? என்று இங்கு ஒரு சந்தேகம் உண்டாகலாம். அவ்விருவருக்கும் தங்களுக்குள்ள அந்தரங்க சுத்தியும், உறுதியும், ஸ்திரமும் இன்னும் அதிகப்படவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாக இருக்கக் கூடும். தவிரவும் ஈமானின் மீது

ஸ்திரப்படுத்தி வைப்பதற்காக ஒவ்வொருவரும் அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்ய வேண்டுமென்பதை ஜனங்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் இப்படி துஆச் செய்தார்கள் என்றும் காரணம் கூறலாம்.

மனாஸிக் என்பது **மன்ஸக்** என்ற வார்த்தையின் பன்மைச் சொல்லாகும். இது நஸக் என்பதிலிருந்து பிறந்தது. அல்லாஹு தஆலாவை வணங்கும்படியான ஒவ்வொரு காரியத்திற்கும் நஸக் என்று பெயர். ஆனால், ஹஜ்ஜுடைய வணக்கங்களுக்கு இந்தப் பதம் விசேஷமாக உபயோகிக்கப்படுகிறது.

رَبَّنَا وَابْعَثْ فِيهِمْ رَسُولًا مِّنْهُمْ يَتْلُوا عَلَيْهِمْ آيٰتِكَ
وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَيُزَكِّيهِمْ ۚ إِنَّكَ أَنْتَ
الْعَزِيزُ الْحَكِيمُ ۝

129. எங்கள் றப்பே! இன்னும் அவர்களிடையே, உனது ஆயத்துகளை அவர்களுக்கு ஓதிக் காண்பித்தும் அவர்களுக்கு வேதத்தையும், விவேகத்தையும் கற்பித்து, அவர்களை பரிசுத்தப்படுத்தும் ஒரு ரசூலை அவர்களில் அனுப்புவாயாக! நிச்சயமாக நீ தான் (யாவற்றையும்) மிகைத்தவன் (இன்னும்) விவேகமுள்ளவன்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், ஆகிய இருவரும் தங்களுடைய சந்ததியினரில் முஸ்லிமான ஒரு கூட்டத்தை உண்டாக்க வேண்டும் என்று துஆக் கேட்டபின், அந்த கூட்டத்தாருக்காக, அந்த கூட்டத்திலிருந்தே ஒரு ரசூலை அனுப்ப வேண்டும் என்றும் துஆச் செய்திருக்கிறார்கள். அப்படி அனுப்பப்படுகிற ரசூலுக்கு என்னென்ன விதமான லட்சணங்கள் இருக்க வேண்டும் என்பதையும் கூறி இருக்கிறார்கள். தங்களது சந்ததியிலுள்ள முஸ்லிம்களுக்கு ஒரு ரசூலை அனுப்பும்படி மட்டும் கேட்காமல், அப்படி அனுப்பப்படும் ரசூல் அந்தக் கூட்டத்தினரைச் சேர்ந்த ஒருவராக இருக்க வேண்டும் என்பதாகவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது இந்த துஆவிற்குப் பிறகு ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சந்ததியினரில் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறு யாரும் ரசூலாக அனுப்பப்படவில்லை.

ரிவாயத்து:- அல்லாஹு தஆலா அவ்விருவருடைய துஆவை அங்கீகரித்து, அவர் கடைசி காலத்தில் வருவார் என்று சொன்னான் என்பதாக ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- நான்தான் எனது தந்தை இப்ராஹீம் கேட்ட துஆ என்றும், ஈஸா கூறிய நற்செய்தி என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَمَنْ يَرْغَبُ عَنْ مِّلَّةِ إِبْرٰهِمَ إِلَّا مَنْ سَفِهَ
نَفْسَهُ ۚ وَلَقَدِ اصْطَفَيْنٰهُ فِي الدُّنْيَا ۚ وَإِنَّهُ فِي
الْآخِرَةِ لَمِنَ الصّٰلِحِينَ ۝

130. மேலும், எவன் தன்னைத் தானே மடையனாக்கிக் கொண்டானோ அவனைத் தவிர இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் புறக்கணிப்பவன் யார்? சத்தியமாக இவ்வுலகில் அவரை நாம் நிச்சயமாகத் தெரிந்தெடுத்திருக்கிறோம். இன்னும் நிச்சயமாக அவர் மறுமையில் ஸாலிஹீன்களில் உள்ளவராக இருக்கிறார்.

ரிவாயத்து:- அப்துல்லா ஹிப்னு ஸலாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களது சகோதரரின் புதல்வர்களான ஸல்மா, முஹாஜிர் ஆகிய இருவரையும் இஸ்லாத்தில் சேரும்படி அழைத்ததுடன் அவர்களை நோக்கி "இஸ்மாயீலிலுள்ள சந்ததியிலிருந்து ஒரு நபியை நான் அனுப்பிகிறவனாயிருக்கிறேன்; அவரது பெயர் அஹ்மது. அகவே, எவர் அவரை விசுவாசிக்கிறாரோ

அவர் நேர்வழி பெற்று விடுகிறார். இன்னும் எவர் விசுவாசிக்க வில்லையோ அவர்கள் சபிக்கப்பட்டவராக இருக்கிறார் என்று அல்லாஹு தஆலா தவ்ராத் வேதத்தில் கூறி இருப்பதை “நீங்கள் இருவரும் அறிந்திருக்கிறீர்கள் என்று அறிவித்துக் கொண்டார். எனவே ஸல்மா என்பவர் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்; முஹாஜிர் என்பவர் இஸ்லாத்தில் சேராமல் விலகிக் கொண்டார். இதனைக் குறித்து அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை இறக்கினான்.

وَإِنَّهُ فِي الْآخِرَةِ لَمِنَ الصَّالِحِينَ **இன்னும் நிச்சயமாக அவர் மறுமையில் ஸாலிஹானவர்களில் உள்ளவராக இருக்கிறார்** என்று இறைவன் கூறி இருப்பது அவர் இம்மை மறுமை இரண்டிலும் ஸாலிஹானவர்களாக இருக்கிறார் என்பதை அறிவிக்கிறது. ஏனெனில், ஒருவர் இம்மையில் ஸாலிஹானவராக இருந்தால் அவர் மறுமையிலும் ஸாலிஹானவராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. எத்தனையோ பேர் இவ்வுலகில் ஆரம்பத்தில் நல்லோர்களாக இருந்து அந்திய காலத்தில் கெட்டவர்களாக மாறி இருக்கின்றனர்.

إِذْ قَالَ لَهُ رَبُّهُ أَسْلِمْ قَالَ أَسْلَمْتُ لِرَبِّ الْعَالَمِينَ ۝

131. அவருடைய ரப்பு அவரை நோக்கி “நீர் வழிப்படும்” என்று சொன்னபோது, உலகத்தார்களுக்கு றப்பாக இருப்பவனுக்கு வழிப்பட்டேன் என்று கூறினார்.

இந்த ஆயத்து மேலேயுள்ள ஆயத்தில் “அவரை நாம் தெரிந்தெடுத்துக் கொண்டோம்” என்று இறைவன் கூறி இருப்பதற்கு காரணம் கூறுவது போலிருக்கிறது.

நீர் வழிப்படும் அதாவது உமது மார்க்கத்தை நீ கலப்பற்றதாக ஆக்கிக் கொள்ளும் என்று அல்லாஹு தஆலா கூறியதும் அதற்கு அவர் பதில் கூறியதுமானது அவர் பொதும்பிலிருந்து வெளியேறி நட்சத்திரம், சந்திரன், சூரியன் ஆகியவற்றைப் பார்த்தபோது நடந்த

விஷயமாகும். இதன் விபரம் சூரத்துல் அன்ஆம் 77,78,79,80 ஆயத்துகளின் விரிவுரைகளில் கூறப்பட்டிருக்கிறது.

وَوَصَّىٰ بِهَا إِبْرَاهِيمُ بَنِيهِ وَيَعْقُوبُ يَا بَنِيَّ إِنَّ اللَّهَ
اصْطَفَىٰ لَكُمُ الدِّينَ فَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ ۝

132. இன்னும் அ(ந்த மார்க்கத்)தைக் கொண்டு தமது மக்களுக்கு இப்ராஹீமும் யஃகூபும் “எனது மக்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (இஸ்லாம்) மார்க்கத்தைத் தெரிந்தெடுத்திருக் கிறான். ஆகையால் நீங்கள் முஸ்லிமானவர் களாகவே அன்றி ஒருபோதும் மரணமடைய வேண்டாமென்று வஸியத்துச் செய்தார்கள்.

பனீஹி தமது மக்களுக்கு என்பதற்கு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மக்களுக்கும் ஹளரத் யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மக்களுக்கும் தனித்தனியே வஸியத்துச் செய்தார்கள் என்பது கருத்து. ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு எட்டு ஆண் மக்கள் இருந்ததாகச் சிலர் கூறி இருக்கிறார்கள். 1. இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். இவருடைய தாயார் ஹாஜரா அவர்களாகும். 2. இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். இவருடைய தாயார் ஸாறா அவர்களாகும். 3. மத்யன், 4. முதாயின், 5. ஜம்ரான், 6. யக்ஷான், 7. யஷ்பக், 8. நூக். இந்த அறுவருக்கும் யக்தனு என்பவருடைய புதல்வி கன்தூரா என்பவர் தாயார். இவர் கானான் தேசத்தைச் சேர்ந்தவர். ஸாராவின் மரணத்துக்குப் பிறகு ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இவரை மணம் புரிந்து கொண்டார்கள்.

யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இரண்டாவது புதல்வரான இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வராவார்கள். இவருக்கு 12 புதல்வர்கள் இருந்தார்கள். ஹளரத் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் ஹளரத் யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

மிஸ்ரு (எகிப்து) தேசத்திற்குச் சென்றபோது, அங்குள்ளவர்கள் விக்கிரகங்களை வணங்குவதைப் பார்த்து மேற்கண்ட விதமாகத் தங்கள் புதல்வர்கள் பன்னிருவருக்கும் வஸியத்துச் செய்தார்கள்.

أَمْ كُنْتُمْ شُهَدَاءَ إِذْ حَضَرَ يَعْقُوبَ الْمَوْتُ إِذْ
قَالَ لِبَنِيهِ مَا تَعْبُدُونَ مِنْ بَعْدِي قَالُوا نَعْبُدُ
إِلَٰهَكَ وَإِلَٰهَ آبَائِكَ إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ إِلَٰهًا
وَاحِدًا وَنَحْنُ لَهُ مُسْلِمُونَ

133. (யூதர்களே) யஃகூபுக்கு மரணம் வந்த போது (நீங்கள் அருகில் இருந்தீர்களா? அவர் தமது மக்களை நோக்கி "எனக்குப்பின் நீங்கள் எதை வணங்குவீர்கள்" என்று வினவியபோது (அதற்கு அவர்கள்) உமது இறைவனை, இன்னும் உமது தந்தையர்களான இப்ராஹீமுடையவும், இஸ்மாயீலுடையவும், இஸ்ஹாக்குடையவும் இறைவனை. ஒரே இறைவனை வணங்குவோம். இன்னும் நாங்கள் அவனுக்கு கீழ்ப்படிந்தவர்கள்" என்று சொன்னார்கள்.

إِذْ حَضَرَ يَعْقُوبَ الْمَوْتُ **"யாஃகூபுக்கு மரணம் வந்த போது"** என்பதற்கு மரணத்திற்குரிய அறிகுறிகள் வந்த போது அல்லது இவ்வுலகை விட்டுச் செல்லும் காலம் நெருங்கிய போது என்பது கருத்து.

ஒருநாள் யூதர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "முஹம்மதே! யஃகூபு மரணமடையும் போது தம்முடைய மக்களைப் பார்த்து யூதர்கள் மார்க்கத்திலிருக்கும்படி வஸிய்யத்துச் செய்ததை நீர் அறியமாட்டீரோ என்று கூறினார்கள். அதற்கு மறு மொழியாக இந்த ஆயத்து அருளப்பட்டது. இந்த ஆயத்து அருளப்பட்ட போது "அப்படி இருந்தாலும் இவர்கள் எங்கள் தந்தையர்களேயாகும். எங்களது வம்சப் பரம்பரை அவர்களில்தான் சேருகிறது. அப்படி இருப்பதால் அவர்களுடைய நன்மையின் மூலமாக எங்களுக்கும் பிரயோஜனம் கிடைக்கும்" என்று யூதர்கள் சொல்லி

அகம்பாவம் கொண்டிருந்தார்கள். அதனை மறுத்து அல்லாஹு தஆலா அடியிற் கண்ட ஆயத்தை இறக்கினான்.

تِلْكَ أُمَّةٌ قَدْ خَلَتْ لَهَا مَا كَسَبَتْ وَلَكُمْ مَا كَسَبْتُمْ
وَلَا تُسْأَلُونَ عَمَّا كَانُوا يَعْمَلُونَ

134. அது நிச்சயமாகச் சென்று போன ஒரு கூட்டமாகும். அது சம்பாதித்தது அதற்குத்தான், இன்னும் நீங்கள் சம்பாதித்தது உங்களுக்குத்தான். ஆனால், அவர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி நீங்கள் வினவப்படமாட்டீர்கள்.

மக்கள் தங்களுடைய மூதாதையருக்கிருந்த சிறப்பைக் கொண்டு இவ்வுலகில் சிறப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆயினும் ஸூர் என்னும் எக்காளம் ஊதப்படும் கடைநாளில் அவர்களுக்கிடையில் வம்சப் பெருமையிருப்பதில்லை. ஆகவே, நன்மையான காரியங்களை அந்தரங்க சுத்தியுடன் செய்து நன்மையைத் தேடிக் கொள்வது அவசியமாகும். அந்தரங்க சுத்தியுடன் புரியப்படும் கிரியைகள்தான் அல்லாஹ்வின் கிருபையால் மறு உலகில் ஈடேற்றத்தை அளிக்கும் என்ற விஷயம் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

மறுமையில் ஒருவனை அவனுடைய கிரியைகள் பிற்படுத்தினால் அவனுடைய வம்சம் அவனை முற்படுத்தாது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆதலின், வம்சத்தைக் கொண்டு பெருமை கொள்வது பைத்தியக் காரனுடைய குணமாக யிருக்கிறது. எனவே, நன்மையைச் சம்பாதிப்பதுதான் அல்லாஹு தஆலாவினுடைய கிருபையினால் மறுமையில் நன்மை கொடுக்குமே அல்லது வேறில்லை.

وَقَالُوا كُونُوا هُودًا أَوْ نَصَارَىٰ تَهْتَدُوا قُلْ بَلْ مِلَّةَ
إِبْرَاهِيمَ حَنِيفًا وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ

135. இன்னும் (அவர்கள் மூமின்களைப் பார்த்து) யூதர்களாக அல்லது கிறிஸ்துவர்களாக நீங்கள் ஆகி விடுங்கள்; (அப்பொழுது தான்) நீங்கள் நேர்வழி பெறுவீர்கள் என்று சொன்னார்கள். "அவ்வாறில்லை! நேர்வழியைச் சேர்ந்த இப்ராஹீமுடைய மார்க்கத்தை (நாங்கள் பின்பற்றுவோம்) மேலும் அவர் இணை வைப்பவர்களில் உள்ளவராக இருக்கவில்லை" என்று கூறும்.

இந்த ஆயத்து மதீனாவிலுள்ள யூதர்களின் தலைவர்களையும், நஜ்ரானிலுள்ள கிருஸ்துவர்களின் தலைவர்களையும் குறித்து அருளப்பட்டது. அதாவது யூதர்கள் மூமின்களைப் பார்த்து "நீங்கள் யூதர்களாகி விடுங்கள். ஏனெனில், எங்களுடைய நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் எல்லா நபிமார்களிலும் சிறந்தவர்; எங்களுடைய தவ்ராத் வேதம் எல்லா வேதங்களிலும் சிறந்தது; இன்னும் எங்களுடைய மார்க்கம் எல்லா மார்க்கங்களிலும் சிறந்தது" என்று கூறி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், இன்ஜீல் வேதத்தையும் ஹளரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் திருக்குர்ஆனையும் நிராகரித்தார்கள். கிறிஸ்துவர்கள் இதுபோலவே தங்களைப் பற்றிக் கூறிக் கொண்டு, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், தவ்ராத் வேதத்தையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், திருக்குர்ஆனையும் நிராகரித்தார்கள். இதனை மறுத்துக் கூறும்படி இறைவன் இந்த ஆயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கட்டளை யிட்டதுடன் சத்தியம் எது என்பதையும் விபரித்திருக்கிறான்.

وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ **இன்னும் அவர் இணை வைப்பவர்களில் உள்ளவராக இருக்கவில்லை** என்பது யூதர்களும் கிறிஸ்தவர்களும் செய்து வரும் வாதம் தவறானது என்பதையும் உஜைர் நபியை ஒரு கூட்டத்தாரும், ஈஸா நபியை மற்றொரு கூட்டத்தாரும் அல்லாஹ்வின் புதல்வர் என்று கூறுவதால் அவர்கள் ஷிர்க்கு (இணை) வைத்து விட்டார்கள் என்பதையும் அறிவிக்கிறது. இன்னும் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய

மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதையும், அந்த மார்க்கம்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், ஸஹாபிகளும் கடைப்பிடித்து வரும் மார்க்கம் என்பதும் இந்த ஆயத்தில் சமிக்ஞையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

قُولُوا آمَنَّا بِاللَّهِ وَمَا أُنْزِلَ إِلَيْنَا وَمَا أُنْزِلَ إِلَىٰ إِبْرَاهِيمَ
وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ وَالْأَسْبَاطِ وَمَا أُوتِيَ
مُوسَىٰ وَعِيسَىٰ وَمَا أُوتِيَ النَّبِيُّونَ مِنْ رَبِّهِمْ
لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْهُمْ وَنَحْنُ لَهُ مُسْلِمُونَ ﴿١٣٦﴾

136. (மூமின்களே, நீங்கள்) "அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட(வேதத்)தையும், இப்ராஹீமுக்கும், இஸ்மாயீலுக்கும், இஸ்ஹாக்குக்கும், யஃகூபுக்கும், (இவர்களது) மக்களுக்கும் இறக்கப்பட்டதையும், மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் கொடுக்கப் பட்டதையும், இன்னும் (மற்ற) நபிமார்களுக்கு அவர்களுடைய றப்பிடமிருந்து கொடுக்கப்பட்டதையும், நாங்கள் ஈமான் கொண்டோம், அவர்களிலிருந்து எவருக்கிடையிலும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம்; இன்னும், நாங்கள் அவனுக்கே வழிப்படுகிறவர்கள்" என்று கூறுங்கள்.

مَا أُنْزِلَ إِلَيْنَا **"எங்களுக்கு இறக்கப்பட்டதை"** என்பதற்கு திருக்குர்ஆனை என்பதாகும். ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கியது அவர்களுடைய உம்மத்துகளுக்கு இறக்கியதாகும்.

الْأَسْبَاطِ **அல்அஸ்பாத்** என்பது பல பணர்களும் கிளைகளும் உள்ள மரத்திற்கு ஆதியில் சொல்லப்பட்டது. ஆனால், இந்த இடத்தில் ஹளரத் யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது 12 புதல்வர்களும் என்பது கருத்து.

فَإِنْ آمَنُوا بِمِثْلِ مَا آمَنتُم بِهِ فَقَدِ اهْتَدَوا ۖ وَّإِن تَوَلَّوْا فَإِنَّمَا هُمْ فِي شِقَاقٍ ۖ فَسَيَكْفِيكَهُمُ اللَّهُ ۚ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ ۝

137. ஆகவே (அந்த யூதர்கள் கிறிஸ்துவர்கள்) நீங்கள் ஈமான் கொண்டிருப்பது போல் அவர்களும் ஈமான் கொண்டால் நிச்சயமாக அவர்களும் நேர்வழி பெற்று விடுவார்கள். ஆனால், (அப்படி ஈமான் கொள்ளாமல்) அவர்கள் புறக்கணித்து விட்டால் நிச்சயமாக அவர்கள் பிளவில்தான் இருக்கிறார்கள். (அதனைப் பற்றி நீர் கவலை கொள்ள வேண்டியதில்லை) அவர்களி(ன் கெடுதல்களி)லிருந்து உம்மைக் காப்பாற்ற அல்லாஹ் உமக்குப் போதுமானவன். இன்னும் அவன் (அவர்களது சொற்களைக்) கேட்கிறவனாக(வும் அவர்களது நிலைமையை) அறிகிறவனாக (வும்) இருக்கிறான்.

ஷிகாக் என்பது **ஷிக்** என்பதிலிருந்து பிறந்தது. **ஷிக்** என்பதற்கு ஜானிப் ஓரம், கட்சி, பிளவு என்பது பொருள். அதாவது யூதர் கிருஸ்துவர் ஒவ்வொருவரும் ஒரு கட்சியில் இருந்து வருகிறார்கள். அதாவது எதிர்க் கட்சியில் இருக்கிறார்கள் என்பது கருத்து.

யக்ஃபீக "உமக்குப் போதும்" என்பதற்கு யூதர்கள் கிறிஸ்தவர்கள் செய்யும் காரியங்களினால் உமக்குத் தீங்கு வராமல் காப்பாற்றுவதற்குப் போதுமானவன் என்பது கருத்தாகும். ஏனெனில், **கிஃபாயத்து** என்பது உடலுக்குச் சம்மந்தப்பட்டதல்ல. செய்கைக்கே சம்மந்தப்பட்டதாகும். அல்லாஹு தஆலா கூறிய இவ்வாக்குறுதியை மிகவும் நல்ல விதமாக நிறைவேற்றினான் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சரித்திரங்களில் நன்கு தெரியவரும்.

صِبْغَةَ اللَّهِ ۖ وَمَنْ أَحْسَنُ مِنَ اللَّهِ صِبْغَةً ۖ

وَنَحْنُ لَهُ عَابِدُونَ ۝

138. அல்லாஹ்வின் வர்ணத்தை (மார்க்கத்தைப் பின்பற்றுவோம்). இன்னும் வர்ணத்தால் (மார்க்கத்தால்) அல்லாஹ்வை விட மிக்க அழகானவன் யார்? இன்னும் நாங்கள் அவனையே வணங்குபவர்கள் (என்று கூறுங்கள்).

ஸிப்கத் என்பதற்கு வர்ணமிடல் சாயமிடல் என்பது பொருள். ஆனால், இவ்வார்த்தையைக் கொண்டு அல்லாஹ்வின் மார்க்கத்தை நாடப்பட்டிருக்கிறது. எனவே, அல்லாஹு தஆலாவின் மார்க்கத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதும், அல்லாஹு தஆலாவைப் பார்க்கினும் சிறந்த முறையில் மார்க்கத்தைக் காண்பிப்பவர் ஒருவருமில்லை என்பதும் இதன் கருத்தாகும்.

قُلْ أَتُحَاجُّونَنَا فِي اللَّهِ وَهُوَ رَبُّنَا وَرَبُّكُمْ وَلَنَا أَعْمَالُنَا وَلَكُمْ أَعْمَالُكُمْ وَنَحْنُ لَهُ مُخْلِصُونَ ۝

139. அல்லாஹ்வைப் பற்றி எங்களிடம் நீங்கள் தர்க்கம் செய்கிறீர்களோ? ஆனால், அவனோ எங்களுக்கும் றப்பு உங்களுக்கும் றப்பு; இன்னும் எங்கள் கிரியைகளின் பலன் எங்களுக்கு இருக்கின்றன; இன்னும் உங்கள் கிரியைகளின் பலன் உங்களுக்கே இருக்கின்றன; இன்னும், நாங்கள் அவனுக்கே (எங்கள் அமல்களைக்) கலப்பற்றவர்களாக்கி வைக்கிறோம் என்று (நபியே அவர்களிடம்) கூறிவிடும்.

யூதர்கள் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களைப் பார்த்து "நாங்கள் முந்தின வேதக்காரர்கள்; எங்கள் கிப்லாவும் பூர்வீகமானது; தவிரவும் அறபிகளிலிருந்தும் ஒரு நபியும் வரவில்லை; முஹம்மது நபியாக இருந்திருந்தால் அவர் எங்களிலிருந்து தோன்றியிருப்பார்" என்று கூறினார்கள். அதற்காக அல்லாஹுதஆலா இந்த ஆயத்தை இறக்கினான்.

இக்லாஸ் அதாவது, அந்தரங்க சுத்தி என்பது இணை வைத்தல் பிறருக்காக அமல்களைச் செய்தல் ஆகியவற்றை விட்டுக் கிரியைகளைச் சுத்தப்படுத்தி வைத்தலாகும்.

أَمْ تَقُولُونَ إِنَّ إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ
وَالْأَسْبَاطَ كَانُوا هُودًا أَوْ نَصَارَىٰ ۗ قُلْ أَأَنْتُمْ
أَعْلَمُ أَمِ اللَّهُ ۗ وَمَنْ أَظْلَمُ مِمَّنْ كَتَمَ شَهَادَةً عِنْدَهُ
مِنَ اللَّهِ ۗ وَمَا اللَّهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُونَ ۝

140. (வேதக்காரர்களே) நிச்சயமாக இப்ராஹீமும், இஸ்மாயீலும் இஸ்ஹாக்கும், யஃகூபும், (இவரது) சந்ததிகளும் யூதர்களாக அல்லது கிறிஸ்துவர்களாக இருந்தார்கள் என்று நீங்கள் கூறுகிறீர்களா? (அவ்வாறு கூறின்) நீங்கள் நன்கு அறிந்தவர்களா? அல்லது அல்லாஹ்வா? என்று (நபியே) நீர் கூறும். மேலும், எவன் அல்லாஹ்விடமிருந்து தன்னிடம் வந்திருக்கிற சாட்சியத்தை மறைத்தானோ அவனைப் பார்க்கினும் அநியாயக் காரன் யார்? இன்னும், (வேதக்காரர்களே) நீங்கள் செய்வதை அல்லாஹ் மறந்தவனாக இல்லை.

தவ்ராத், இஞ்ஜீல் வேதங்கள் அருளப்படுவதற்கு முதலில் இருந்த நபிமார்களான மேற்கண்டவர்கள் யூதர்களாகவோ கிறிஸ்தவர் களாகவோ இருந்தார்கள் என்று நீங்கள் எங்ஙனம் சொல்ல முடியும்? பிந்தி வருபவர்களை முந்தி வந்திருந்தவர்கள் பின்பற்றினார்கள் என்பது நடைபெறமுடியாத காரியம். நபிமார்கள் அனைவரும் முஸ்லிம்களாக இருந்தார்கள் என்பதை உங்கள் வேதங்களிலிருந்தே நீங்கள் நன்கு தெரிந்து கொண்டு எவ்வாறு நீங்கள் அதனை மறைக்கலாம் என்று இந்த ஆயத்தில் இறைவன் கூறி இருக்கிறான்.

تِلْكَ أُمَّةٌ قَدْ خَلَتْ ۖ لَهَا مَا كَسَبَتْ وَلَكُمْ مَا
كَسَبْتُمْ ۖ وَلَا تُسْأَلُونَ عَمَّا كَانُوا يَعْمَلُونَ ۝

141. அது சென்றுபோன ஒரு கூட்டம். அது சம்பாதித்தது அதற்கு இருக்கிறது. இன்னும் நீங்கள் சம்பாதித்தது உங்களுக்கு இருக்கிறது. இன்னும் அவர்கள் செய்து கொண்டிருந்ததைப் பற்றி நீங்கள் வினவப்படமாட்டீர்கள்.

யூதர்கள் தங்கள் வம்சத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டிருப்பதைக் குறித்துக் கண்டனம் செய்வதில் இந்த ஆயத்து இதற்கு முந்திய இதே விதமான ஆயத்தை ஊர்ஜிதப்படுத்தி வந்திருக்கிறது.

سَيَقُولُ السُّفَهَاءُ مِنَ النَّاسِ مَا وَلَّاهُمْ عَنْ
قِبْلَتِهِمُ الَّتِي كَانُوا عَلَيْهَا ۚ قُلْ لِلَّهِ الْمَشْرِقُ وَ
الْمَغْرِبُ ۚ يَهْدِي مَنْ يَشَاءُ إِلَىٰ صِرَاطٍ مُسْتَقِيمٍ ۝

142. (முஸ்லிம்களாகிய) அவர்கள் எந்த கிப்லாவின் மீது இருந்து கொண்டிருந்தார்களோ அதனை விட்டு அவர்களை (கஃபாவின் பக்கம்) திருப்பிவிட்டது எது? என்று (யூதர்கள் இணைவைப்பாளர்கள் ஆகிய) ஜனங்களிலுள்ள (சில) அறிவிலிகள் கூறுவார்கள். "கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கு உரியன; அவன் நாடியவர்களுக்கு (தனது) நேரான வழியைக் காண்பிப்பான்" என்று (நபியே) கூறிவிடும்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா முனவ்வராவுக்கு வந்த பின்னர் (எருஸலேமிலுள்ள) பைத்துல் முகத்தஸை நோக்கி 17 மாதகாலம் வரை தொழுது வந்தார்கள். பிறகு, (மக்காவிலுள்ள) கஃபத்துல்லாஹ் கிப்லாவாக்கப் பட்டது.

இந்த ஆயத்து இறங்கிய காரணம் என்னவெனில், கஃபத்துல்லாவை அல்லாஹு தஆலா கிப்லாவாக ஏற்படுத்தியபோது யூதர்கள் நிராகரிப்பாளர்களைப் பார்த்து "முஹம்மது பைத்துல் முகத்தஸைப் பார்த்துத் தொழுதார். இப்பொழுது அவருக்குத் தம்முடைய செயலைக் குறித்து இருமனதாகி உங்கள் ஊரை நோக்கித் தொழுகிறார். இனி உங்கள் மார்க்கத்தில் திரும்பி விடுவார்" என்று சொன்னார்கள். அதற்கு மறுமொழியாக இந்த ஆயத்து இறைவனால் அருளப்பட்டது.

தொழுகையில் மனிதர் எந்தத் திசையை முன்னோக்குகிறார்களோ அந்தத் திசைக்கு கிப்லா என்று பெயர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனாவிற்கு வந்தபோது எருஸலேம் நகரிலுள்ள பைத்துல் முகத்தஸை முன்னோக்கித் தொழுது வந்தார்கள். இப்படிப் பதினேழு மாத காலம் தொழுது வந்தபோது அல்லாஹுதஆலாவின் கட்டளைப்படி மக்காவிலுள்ள கஃபத்துல்லாஹ்வை நோக்கித் தொழுதார்கள். அதிலிருந்து கஃபத்துல்லாஹ் மூமின்களுக்குத் தொழுகையின் திசையாக அதாவது கிப்லாவாக ஏற்பட்டு விட்டது. ஆகவே, மூமின்கள் கஃபாவைத் தங்கள் கிப்லாவாக ஏற்படுத்திக் கொண்டது அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குக் கீழ்படிந்தேயாகும். தங்கள் விருப்பத்திற்கு அல்ல. ஆனால், இந்த கஃபா இப்ராஹீம் கலீலுல்லாஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கிப்லாவாக இருந்தது.

وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا لِّتَكُوْنُوْا شُهَدَآءَ
عَلَى النَّاسِ وَيَكُوْنَ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا ؕ وَمَا
جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِىْ كُنْتَ عَلَيْهَآ اِلَّا لِنَعْلَمَ مَنْ
يَّتَّبِعُ الرَّسُوْلَ مِمَّنْ يَّنْقَلِبُ عَلٰى عَقِبَيْهِ ؕ وَاِنْ
كَانَتْ لَكَبِيْرَةً اِلَّا عَلَى الَّذِيْنَ هَدَى اللّٰهُ ؕ وَمَا كَانَ

اللّٰهُ لِيُضِيْعَ اِيْمَانَكُمْ ؕ اِنَّ اللّٰهَ بِالنَّاسِ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ﴿۱۴۳﴾

143. மேலும், இம்மாதிரியே ஜனங்களுக்கு நீங்கள் சாட்சிகளாவதற்காகவும் (நம்முடைய) இத் தூதர் உங்களுக்குச் சாட்சி சொல்பவராக இருப்பதற்காகவும் (ரசூலைப் பின்பற்றிய) உங்களை நடுநிலைமையான உம்மத்தாக நாம் ஆக்கியிருக்கிறோம். மேலும், தன்னுடைய பிற்காலின் மீது மாறிவிடுகிறவர்களை விட்டு (நமது) தூதரைப் பின்பற்றுகிறவர் எவர் என்பதை நாம் (பகிரங்கமாக) அறிவதற்காகவே யல்லாமல் நீர் (முன்பு நோக்கித் தொழுது கொண்டு) எதன் மீது இருந்தீரோ அந்தக் கிப்லாவை (உமக்கு) நாம் (இப்பொழுது கிப்லாவாக) ஆக்கவில்லை. மேலும், எவர்களுக்கு அல்லாஹ் நேர்வழியைக் காட்டி இருக்கிறானோ அவர்களுக்கேயன்றி (மற்றையோருக்கு) நிச்சயமாக இது கஷ்டமாகத்தான் இருக்கும். என்றாலும், உங்களுடைய விசுவாசத்தை அல்லாஹ் வீணாக்கிப் போடுகிறவனல்லன். நிச்சயமாக அல்லாஹ் (விசுவாசங் கொண்ட) ஜனங்களின் பால் மிகவும் இரக்கமுள்ளவன் பேரன்புடையவன்.

ரிவாயத்து:- கியாமத்து நாளில் இறைவன் அனைவரையும் ஒன்று கூட்டிவைத்து நிராகரிப்பாளர்களை நோக்கி "உங்களிடம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவர்கள் வரவில்லையா?" என்று கேட்பான். அதற்கு அவர்கள் "எங்களிடம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவரோ நற்செய்தி சொல்பவரோ வரவில்லை" என்று பதில் கூறுவார்கள். உடனே அல்லாஹுத் தஆலா இதனைப் பற்றி நபிமார்களிடம் கேட்பான். அப்பொழுது அவர்கள் "நாங்கள் அவர்களிடம் உனது கட்டளைகளை அறிவித்தோம்; அவர்கள் பொய்யுரைக்கிறார்கள்" என்று கூறுவார்கள். எனவே, அவர்களிடம் இதற்கு ஆதாரம் கேட்கப்படும். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் அழைத்து வரப்படுவார்கள். இந்த உம்மத்துகள் அந்த நபிமார்களுக்குச் சாதகமாக அதாவது அந்த நபிமார்கள் இறைவனது கட்டளைகளை அவர்களிடம் அறிவித்தார்கள் என்று சாட்சியம் கூறுவார்கள். அதற்கு,

முற்காலத்திலிருந்த அந்த உம்மத்துகள் "இவர்கள் எங்களுக்குப் பிறகு உலகுக்கு வந்தார்கள். அப்படி இருக்க இவர்கள் இதனை எங்ஙனம் தெரிந்து கொள்ள முடியும்?" என்று ஆட்சேபனை செய்வார்கள். இதனைக் குறித்து அல்லாஹு தஆலா இந்த உம்மத்திடம் கேட்பான். அதற்கு இவர்கள் "இறைவா! எங்களிடம் ஒரு ரசூலை நீ அனுப்பிவைத்து, அவருக்கு ஒரு வேதத்தையும் அருளி இருக்கிறாய். இந்த நபிமார்கள் தங்கள் உம்மத்துகளிடம் உனது கட்டளைகளை அறிவித்ததாக அந்த வேதத்தில் நீ கூறி இருக்கிறாய். இன்னும் நீ உண்மையே சொல்பவன்" என்று பதில் கூறுவார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழைத்து வரப்பட்டு இந்த உம்மத்துகளைப் பற்றி விசாரிக்கப்படுவார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்முடைய உம்மத்துகள் சுத்தமானவர்கள் உண்மையே கூறுபவர்கள் என்பதாகக் கூறுவார்கள். ஆகவே, நிராகரிப்பாளர்கள் அனைவரையும் நரகத்தில் போடும்படி ஏவப்படும்.

இவ்விஷயத்தைக் குறித்துத்தான் இறைவன் மேற்கண்ட ஆயத்தில் **ஜனங்களுக்கு நீங்கள் சாட்சிகளாவதற்காகவும் இத்தூதர் உங்களுக்கு சாட்சி சொல்பவராக இருப்பதற்காகவும் (ரசூலைப் பின்பற்றிய) உங்களை (நீதமுடைய) நடுநிலையான உம்மத்தாக ஆக்கியிருக்கிறோம்.** என்று இறைவன் கூறி இருக்கிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத்துச் செய்து வருவதற்கு முன் மக்காவில் இருந்தபோது கஃபாவை முன்னோக்கித் தொழும்படி ஏவப்பட்டு இருந்தார்கள். பிறகு மதீனமா நகரம் சென்றபோது பைத்துல் முகத்தஸிலுள்ள ஸக்ராவை முன்னோக்கித் தொழும்படி ஏவப்பட்டது. ஆகவே, பதினாறு அல்லது பதினேழு மாதத்திற்குப் பிறகு கஃபாவை முன்னோக்கி தொழும்படி மறுபடியும் கட்டளை யிடப்பட்டது. இப்படி கிப்லா மாற்றப்பட்ட பின் யூதர்களில் ஒருவரான ஹுயைபுப்னு அக்தப் என்பவர் முஸ்லிம்களை நோக்கி "நீங்கள் பைத்துல் முகத்தஸை நோக்கி தொழுது கொண்டு வந்ததே நேர்வழியாக இருந்தது. தற்போது

நீங்கள் வேறு திசைமாறியதன் மூலம் வழிகேட்டின் பால் திரும்பி விடுவீர்கள்" என்ற கருத்தில் கூறினார் அதாவது "முஹம்மது அவருடைய மூதாதையரின் மார்க்கத்தில் போய் விட்டார்" என்று கூறினார். இதனைக் குறித்துத்தான் இறைவன் **மேலும் தன்னுடைய பிற்காலின் மீது மாறிவிடுகிறவர்களை விட்டு (நமது) ரசூலைப் பின்பற்றுபவர் எவர் என்பதை நாம் (பகிரங்கமாக) அறிந்து கொள்வதற்காக வல்லாமல் நீர் (முன்பு நோக்கித் தொழுது கொண்டு) எதன் மீது இருந்தீரோ அந்தக் கிப்லாவை (உமக்கு) நாம் (இப்பொழுது கிப்லாவாக) ஆக்கவில்லை** என்று கூறி இருக்கிறான்.

وَمَا كَانَ اللَّهُ لِيُضِيعَ إِيمَانَكُمْ **மேலும் அல்லாஹ் உங்களுடைய விசுவாசத்தை வீணாக்குபவனாக இல்லை** என்ற இந்த ஆயத்து பைத்துல் முகத்தஸ் கிப்லாவாக இருந்த காலத்தில் மரணமடைந்து விட்ட முஸ்லிம்களைக் குறித்து அருளப்பட்டது. அதாவது கிப்லா மாற்றப் படுவதற்கு முன் பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது கொண்டிருந்த காலத்தில் இறந்துபோன முஸ்லிம்களது நிலைமை என்னவென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஸஹாபிகள் வினவினர். அதற்கு இறைவன் இவ்விதமாகப் பதில் கூறி இருக்கிறான்.

قَدْ نَرَىٰ تَقَلُّبَ وَجْهِكَ فِي السَّمَاءِ ۖ فَلَنُوَلِّيَنَّكَ
قِبْلَةً تَرْضَاهَا ۚ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ۚ
وَحَيْثُ مَا كُنتُمْ فَوَلُّوا وُجُوهَكُمْ شَطْرَهُ ۗ وَإِنَّ
الَّذِينَ أُوتُوا الْكِتَابَ لَيَعْلَمُونَ أَنَّهُ الْحَقُّ مِن
رَّبِّهِمْ ۗ وَمَا اللَّهُ بِغَافِلٍ عَمَّا يَعْمَلُونَ

144. உமது முகம் வானத்தி(ன்பா)ல் திரும்புவதை நாம் கண்டோம். ஆகையால், நீர் விரும்பும் கிப்லாவுக்கு உம்மை நாம்

நிச்சயமாகத் திருப்புகிறோம். ஆகவே, மஸ்ஜிதுல் ஹராமின் பக்கம் உமது முகத்தை நீர் திருப்புவீராக. இன்னும் (மூமின்களே) நீங்கள் எங்கிருந்தாலும் உங்களது முகங்களை அதன்பக்கம் திருப்புங்கள். மேலும், எவர்களுக்கு வேதத்தைக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள்; 'இதுதான் தங்களின் ரப்பிடமிருந்து வந்த உண்மை' யென நிச்சயமாக அறிவார்கள். தவிரவும், (யூதர்களாகிய) அவர்கள் செய்வதை விட்டு அல்லாஹ் மறந்தவனில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது கொண்டிருந்த காலத்தில் தங்களது பாட்டனார் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கிப்லாவாகிய கஃபாவை முன்னோக்கித் தொழுவதைப் பிரியம் வைத்ததுடன் "யூதர்களுடைய கிப்லாவை விட்டு வேறு பக்கம் அல்லாஹு தஆலா என்னை திரும்பித் தொழும்படி செய்வதை நான் நேசிக்கிறேன்" என்று ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமும் கூறினார்கள். அதற்கு, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "தங்களைப்போல் நானும் ஒரு அடிமைதான். ஆனால், தாங்கள் உமது ரப்பிடத்தில் மிகவும் சங்கை பொருந்தியவராக இருக்கிறீர்கள். ஆகவே, அவனிடம் தாங்கள் துஆச் செய்து அவனைக் கேளுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். அதிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் கேட்ட விஷயத்தை ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (வஹி) கொண்டு வருவதை எதிர்பார்த்து வானத்தின் பக்கம் நோக்கிக் கொண்டே இருந்தார்கள். ஆகவே, அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை அருளினான்.

தொழுகையில் முகம் உள்பட உடல் அனைத்தும் மஸ்ஜிதுல் ஹராமுக்கு நேராகத் திரும்ப வேண்டும் என்று கட்டளை விதிக்கப்பட்டிருக்க இந்த ஆயத்தில் **"உமது முகத்தைத் திருப்புவீராக"** என்று முகத்தை மட்டும் குறிப்பிட்டுக் கூறி இருப்பதேனெனில், எல்லா அங்கங்களுக்கும் முகம்தான் முக்கியமானது என்பதை எச்சரிக்கை

செய்வதற்காகவேயாகும். மேலும் இந்த இடத்தில் முகத்தை மட்டும் கூறி உடல் முழுவதும் நாடப்பட்டிருக்கிறது.

மஸ்ஜிதுல் ஹராம் என்பது சங்கையான கஃபத்துல்லா இருக்கும் அந்தப் பூர்வீக மஸ்ஜிதுக்குப் பெயர். அதாவது கஃபாவும் அதன் எல்லையும் சேர்ந்த விசாலமான இடத்திற்குப் பெயர். இதன் எல்லைக்குள் கொலை செய்தல், சண்டை சச்சரவு செய்தல், அக்கிரமம் செய்தல் ஆகியவைகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின், இதற்கு மஸ்ஜிதுல் ஹராம் அதாவது சங்கையான மஸ்ஜிது என்ற பெயர் வந்தது. ஆனால், மஸ்ஜிதுல் ஹராம் என்பதற்கு இந்த இடத்தில் கஃபத்துல்லாஹ் மட்டும்தான் கருத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தவிரவும் கஃபத்துல்லாஹ் என்று குறிப்பிட்டுக் கூறாமல் மஸ்ஜிதுல் ஹராம் என்று சொல்லி இருப்பதில் மற்றொரு கருத்தும் இருக்கிறது. அதாவது கஃபத்துல்லாஹ் இருக்கும் திசையை முன்னோக்கித் தொழுதால் போதுமானது என்பதும் மறைமுகமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது என்று ஹனஃபி, ஷாஃபிஈ ஆகிய இரண்டு மதுஹபுகளும் ஏகோபித்துக் கூறி இருக்கின்றன. ஏனெனில், தூரத்தில் உள்ளவர்கள் கொஞ்சம் கூடத் தவறாமல் கஃபத்துல்லாஹ்வுக்கு நேராகத் திரும்பி தொழுவது மிகவும் கஷ்டமாகும் என்பதாகவும் அந்த மதுஹபுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு கிப்லாக்களை நோக்கித் தொழுவார்கள். அதாவது பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது கொண்டிருந்து விட்டு, பிறகு கஃபத்துல்லாவை நோக்கித் தொழுவார்கள் என்று முற்காலத்து வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலின் வேதக்காரர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலுள்ள கஃபாவை முன்னோக்கித் தொழுவார்கள் என்பதை அவ்வேதங்களின் மூலம் அறிந்திருந்தனர். இதனைக் குறித்துத்தான் இறைவன் மேலும், **"நிச்சயமாக இது தான் தங்களது றப்பிடமிருந்துள்ள உண்மை"** என்று வேதம் கொடுக்கப்பட்டவர்கள் அறிவார்கள் என்று கூறி இருக்கிறான்.

مِنْ رَّبِّهِمْ **தங்களுடைய ரப்பிடமிருந்து** என்று கூறி இருப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் விருப்பத்திற்கு கஃபத்துல்லாஹ்வை நோக்கித் தொழவில்லை என்பதையும், அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படியே கஃபத்துல்லாவை முன்னோக்கித் தொழுதார்கள் என்பதையும் அறிவிக்கிறது.

وَلَئِنْ اَتَيْتَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ بِكُلِّ اٰيَةٍ مَّا تَبِعُوْا قِبْلَتَكَ ۚ وَمَآ اَنْتَ بِتَابِعٍ قِبْلَتَهُمْ ۚ وَمَا بَعْضُهُمْ بِتَابِعٍ قِبْلَةَ بَعْضٍ ۚ وَلَئِنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ مِّنْۢ بَعْدِ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ ۙ اِنَّكَ اِذًا لَّمِنَ الظّٰلِمِيْنَ ۝

145. இன்னும் எவர்களுக்கு வேதத்தைக் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கு நீர் சகல விதமான அத்தாட்சிகளையும் கொண்டு வந்த போதிலும் உமது கிப்லாவை நிச்சயமாக அவர்கள் பின்பற்ற மாட்டார்கள். இன்னும் (அவர்கள் இஷ்டப்படி) அவர்களுடைய கிப்லாவை நீர் பின்பற்றுவரல்ல. தவிரவும் அவர்களிற் சிலர் (மற்றும்) சிலருடைய கிப்லாவைப் பின்பற்றுபவர்களுமல்லர்; (அல்லாஹு தஆலா ஏற்படுத்திய கிப்லா கஃபத்துல்லாஹ் தான் என்று நிச்சயமாக அறிவிக்கும் வஹியாகிய) அறிவு உமக்கு வந்த பின்னரும் அவர்களுடைய விருப்பங்களை நீர் பின்பற்றினால் நிச்சயமாக நீர் அப்பொழுது அக்கிரமக்காரரில் (ஒருவராக) ஆகி விடுவீர்.

மேலும், எவர்களுக்கு வேதம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு நீர் சகல விதமான அத்தாட்சிகளையும் கொண்டு வந்த போதிலும் அவர்கள் உமது கிப்லாவை நிச்சயமாகப் பின் பற்ற மாட்டார்கள் என்ற இவ்வசனம் யூத கிறிஸ்துவர்கள் அனைவரையும் குறித்துச் சொன்னதன்று. கிப்லாவை மாற்றிய பின்னர் அவ்வேதக்

காரர்களில் நேர்மையாளர்களாக இருந்த பலர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி இருக்கிறார்கள். ஆதலின் இஸ்லாத்தைத் தழுவவே மாட்டார்களென்று இறைவன் அறிந்திருந்தவர்களைக் குறித்தே இந்த வசனம் அருளப்பட்டிருக்கிறது.

வேதம் கொடுக்கப்பட்டவர்களில் யூதர்களும் கிறிஸ்துவர்களும் ஒன்றுக்கொன்று நேர்மாறாகவுள்ளவர்கள். யூதர்கள் பைத்துல் முகத்தஸிலுள்ள ஸக்ராவை முன்னோக்குபவர்கள். கிறிஸ்துவர்கள் சூரியன் உதயமாகும் இடத்தை நோக்குபவர்கள். ஆதலின், அவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையானவர்களாயில்லை. இதனைக் குறித்துத்தான் இறைவன் وَمَا بَعْضُهُمْ بِتَابِعٍ قِبْلَةَ بَعْضٍ **அவர்களிற் சிலர் (மற்றும்) சிலருடைய கிப்லாவைப் பின்பற்றுபவரல்ல** என்று கூறி இருக்கிறான்.

اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْرِفُوْنَهٗ كَمَا يَعْرِفُوْنَ اَبْنَآءَهُمْ ۚ وَاِنَّ فَرِيْقًا مِّنْهُمْ لَيَكْتُمُوْنَ الْحَقَّ وَهُمْ يَعْلَمُوْنَ ۝

146. எவர்களுக்கு நாம் வேதத்தைக் கொடுத்திருக்கிறோமோ (அவர்கள்) தங்கள் புதல்வர்களை அறிவதுபோல் அவரை (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை) அறிந்திருக் கிறார்கள். ஆயினும், அவர்களில் ஒரு பிரிவினர் – அவர்கள் அறிந்துகொண்டே உண்மையை நிச்சயமாக மறைக்கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அடையாளங்களைக் குறித்து முந்திய வேதங்களில் சொல்லப் பட்டிருப்பதால் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நன்கு அறிந்திருந்தார்கள். அவர்களுக்கு அதில் சந்தேகம் என்பதே இல்லாமலிருந்தது.

ஒவ்வொரு தந்தையரும் தங்கள் மக்களில் ஆண் பெண் அனைவரையும் நன்கு அறிந்துதான் இருக்கிறார்கள். அப்படி இருக்க, இந்த ஆயத்தில் இறைவன் ஆண்மக்களை மட்டும் குறிப்பாகச் சுட்டிக்

காட்டி இருப்பதேனெனில், ஆண் மக்கள் தங்கள் தந்தையருடன் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். பெண் மக்கள் அப்படி சேர்ந்திருக்க முடியாது. பெண்மக்கள் தங்கள் தந்தையருடன் குறிப்பிட்ட சிலகாலம் வரை இருக்க முடியும். ஆயினும், அப்பால் அவர்களிடம் அவர்கள் அதிகம் நெருங்கி இருக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆதலின், தந்தையர்கள் தங்கள் மக்களில் பெண் மக்களைப் பார்க்கினும் ஆண் மக்களையே அதிகம் தெரிந்து கொள்ள முடிகிறது. இதனால்தான் இறைவன் இந்த ஆயத்தில் ஆண்மக்களை மட்டும் குறிப்பிட்டிருக்கிறான்.

தவிர, ஒவ்வொருவரும் தங்கள் மக்களைப் பார்க்கினும் தங்களை மிகவும் அதிகமாக அறிந்திருக்கிறார்கள். அப்படி இருக்க தங்களை அறிவதுபோல் அவரை அறிந்திருக்கிறார்கள் என்று இறைவன் கூறாமல் தங்கள் புதல்வர்களை அறிவதுபோல் அறிந்திருக் கிறார்கள் என்று கூறியதற்குக் காரணம் என்ன வெனில், மனிதன் தனது மக்களைப் பிறந்த காலமுதல் அறிந்து கொள்வான். ஆனால், தன்னைப்பற்றி உணர்ந்து கொள்வதானது ஒரு காலத்திற்குப் பின்பே யாகும்.

الْحَقُّ مِن رَّبِّكَ فَلَا تَكُونَنَّ مِنَ الْمُمْتَرِينَ ۝

147. (நபியே நீர் இருந்து வருகிற) இந்த உண்மை உமது றப்பிடமிருந்து வந்துள்ளதாகும். ஆதலின், சந்தேகங் கொண்டவர் களில் உள்ளவராக நிச்சயமாக நீர் ஆகிவிட வேண்டாம்.

இவ்விலக்கல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டதாக இருந்தாலும் அந்தரங் கத்தில் இது அவர்களது உம்மத்தைக் குறித்துத்தான் சொல்லப் பட்டதாகும். இந்த ஆயத்தில் சந்தேகங் கொள்ள வேண்டாமென்று விலக்கல் இருந்தாலும், மூமின்கள் இதனை உறுதியாக நம்பி மனச்சாந்தியடைந்திருக்க வேண்டும் என்று மறைமுகமாக ஏவிய கட்டளையே யாகும்.

وَلِكُلٍّ وِجْهَةٌ هُوَ مُوَلِّيهَا فَاسْتَبِقُوا الْخَيْرَاتِ ۚ
أَيْنَ مَا تَكُونُوا يَأْتِ بِكُمُ اللَّهُ جَمِيعًا ۚ إِنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ
شَيْءٍ قَدِيرٌ ۝

148. மேலும், ஒவ்வொருவ(குப்பின)ருக்கும் (முன்னோக்கும்) ஒரு திசை ஒன்றிருக்கிறது. அவர்கள் பக்கம் (தங்கள் முகங்களைத்) திருப்புகின்றனர். ஆகவே, (மூமின்களே) நன்மைகளுக்கு முந்திக் கொள்ளுங்கள். (நீங்களும் உங்கள் பகைவர்களும்) எங்கிருந்தாலும் (அங்கிருந்து) உங்கள் அனைவரையும் அல்லாஹ் (ஒன்று சேர்த்து கியாமத்து நாளில்) கொண்டு வருவான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களின் மீதும் சக்தி பெற்றவன்.

முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்துவர்கள் முதலிய ஒவ்வொரு பிரிவினருக்கும் தொழுவதற்கொரு திசை இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திசையின்பால் அந்த உம்மத்துகள் ஒவ்வொருவரும் திரும்புகின்றனர். ஆதலின் ஒவ்வொருவருடைய திசையும் மற்றவர் களது திசைக்கு மாறாகவே இருக்கிறது. ஆகவே, அவர்கள் சத்தியமான கிப்லாவின் பக்கம் திரும்ப வேண்டும் என்ற விஷயத்தில் சிரத்தை கொள்ள மாட்டார்கள். ஆதலால், அவர்களைப் பின்பற்றாமல் நற்செயல்களைச் செய்வதில் முந்திக் கொள்ளுங்கள். கியாமத்து நாளில் இறைவன் அனைவரையும் ஒன்று சேர்த்து இவ்விஷயங் களைப் பற்றித் தீர்ப்புச் செய்வான் என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும். இந்த ஆயத்து முஸ்லிம்களுக்கு நற்செய்தியாகவும் நிராகரிப்பாளர்களுக்கு எச்சரிக்கையாகவும் இருக்கிறது.

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ
الْحَرَامِ ۖ وَإِنَّهُ لَلْحَقُّ مِن رَّبِّكَ ۗ وَمَا اللَّهُ بِغَافِلٍ